# உதய சூரியன்

UTHAYASOORIYAN උදයසූරියන්

*Source for reading hunters*

உதயசூரியன் (களம் 01 - உதயசூரியன் - 51) (22 ஆகஸ்ட் 2013) பக்கம்: 32 **விலை: 20/=**




## முச்சக்கரவண்டிகளுக்கு கடிவாளம்!




## தொண்டா - திகா முறுகல் உக்கிரம்



# தீப்பறக்கும் மலையக தேர்தல் களம்





# தொண்டா - திகா முறுகல் உக்கிரம்




## தீப்பறக்கும் மலையக தேர்தல் களம்

மலையக இரு தொழிற்சங்கங்களின் மோதல் மலையக தேர்தல் களத்தை சூடேற்றியிருக்கிறது. அமைதியாக இருந்த மலையக தேர்தல் களத்தை அமைச்சர் ஆறுமுகனின் ஆதரவாளர்களும், பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரத்தின் ஆதரவாளர்களும் ரணகளப்படுத்தியுள்ளனர். இவர்களின் உக்கிர மோதலால் ஹட்டன், பத்தனை பகுதியே போர்க்களமாக காட்சியளித்ததுடன் பலரின் உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

விருப்பு வாக்கு போட்டியின் உச்சத்தால் இவ் வன்முறை வெடித்ததை யாரும் இலகுவில் அனுமானித்துவிடலாம்.

எனினும் இ.தொ.கா.விற்கும் திகாம்பரத்துக்குமிடையிலான முறுகல் இத் தேர்தல் காலத்தில் ஆரம்பமானதல்ல. விருப்பு வாக்கு போட்டிக்கு அப்பால் இவர்கள் இருவருக்குமிடையில் அரசியல் வன்மம் அனுமான் வால் போல நீண்டு வந்ததை யாரும் மறுக்கமுடியாது. நீ பெரியவனா? நான் பெரியவனா? எனும் கேள்வி இவர்கள் மத்தியில் இன்றுவரை நீடித்து வருவதும் அனைவரும் அறிந்ததே.

அரசியல் வன்மத்துடன், கருத்துக்களால் (அவ்வப்போது முட்டை, தக்காளிகளால்) மோதிக்கொள்ளும் இருவரும் இம்முறை வன்மத்தின் உச்சத்திற்கே சென்றதற்கு காரணமில்லாமல் இல்லை.

நுவரெலியா மாவட்டதில் அரசுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் இ.தொ.கா.வும், தொழிலாளர் தேசிய சங்கமும் போட்டியிடப் போவதாக அறிவித்தபோதே வன்முறைகளுக்கு பஞ்சமிருக்கப் போவதில்லையென எதிர்வு கூறப்பட்டது.

(தொடர்ச்சி 26 ஆம் பக்கம்...)



## மாணவியை மிரட்டி பாலியல்
# துஷ்பிரயோகம் செய்த இளைஞன் கைது

கம்பஹா பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவியின் நிர்வாணப் படத்தை வெளியிடப் போவதாகக் கூறி தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி வந்த இளைஞரை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

தொலைபேசி மூலம் குறித்த மாணவியுடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட இந்த இளைஞன். மாணவியை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று உல்லாசமாக இருந்துள்ளார். அவ்வேளை தமது கையடக்கத் தொலைபேசியில் சில அந்தரங்கக் காட்சிகளையும் பதிவு செய்துள்ளார்.



பின்னர் இந்தப் படத்தை வெளியிடப் போவதாகக் கூறி தொடர்ந்து அந்த மாணவியை ஹோட்டல்களுக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி வந்துள்ளார்.

இளைஞனின் செயலைப் பொறுக்க முடியாத மாணவி இந்த விடயத்தை தனது தாயிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து இவ்விடயம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துகொண்டிருக்கும் போதே மாணவிக்கு குறித்த இளைஞனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. அதில் மறுநாள் சந்திக்க வேண்டுமென வலியுறுத்தியதுடன் இடத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி இளைஞன் குறிப்பிட்ட இடத்துக்கு மாணவி சென்றபோது பின்தொடர்ந்த பொலிஸார் இளைஞனைக் கைது செய்தனர்.

# வாக்களிக்க மட்டும்தான் மலையகப் பெண்களா?

மலையக அரசியலில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அரசியலில் பெண்களும் பிரவேசிக்க இடம்கொடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வந்தாலும் கட்சிகளில், தொழிற்சங்கங்களில், உயர் பதவிகளில் இருப்பவர்கள் அநேகமாக ஆண்களே!

ஏனைய நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்கையில் வாழும் பெண்கள் அரசியலில் பெரிதாக ஈடுபடுவது இல்லை.

பெண்களுக்கு எதிராகக் காணப்படும் அரசியல், பொருளாதார, பாரம்பரியத் தடைகளை நீக்குவதற்கும் அவர்களின் தலைமைத்துவத்தை ஏற்படுத்தவும் பாதுகாப்பான பெண்கள் சமூகத்தினை கட்டியெழுப்பவும் இவர்களுக்கு அரசியல் களம் தேவைப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெருந்தோட்டப் பெண்களே முதுகெலும்பாக காணப்படுகின்றனர். இதேவேளை தொழிற்சங்கத்திற்கு அதிகப்படியான சந்தாப்பணமும் இவர்கள் மூலமே கிடைக்கப்பெறுகிறது.

வாக்களிப்பவர்களிலும் அதிகபட்சமானவர்கள் பெண்களே! அரசியல்வாதி ஒருவரை தெரிவுசெய்வதற்கு வாக்குரிமை இவர்களுக்கு இருக்கின்றபோதும் இவர்களை வாக்களிக்க மாத்திரமே மலையக அரசியல்வாதிகள் பயன்படுத்துகின்றனர்.

தற்போது மத்திய மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மலையக தொழிற்சங்கங்கள் சார்பாக ஆண்களே நிறுத்தப்பட்டுள்ளனர்.

சுயேச்சைக் குழுக்களில் மாத்திரமே பெண்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மலையகத்தின் மிகப் பெரிய தொழிற்சங்கம் எனக் கருதப்படும் இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் பெண்களை தேர்தலில் புறக்கணித்துள்ளன.



தொழிலாளர் தேசிய சங்கத்தில் மாத்திரமே பெண் ஒருவர் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

எதிர்காலத்தில் மலையக தேயிலைத் தோட்டங்களில் தொழில் செய்யும் பெண்களை அரசியலில் இருந்து ஓரம்கட்டாமல் அவர்களுக்கு வழங்க வேண்டிய அரசியல் உரிமைகளை வழங்க மலையக அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டியது அவசியமாகும்.

கே.புஷ்பராஜ்

# காணாமல் போன குடும்பப் பெண் டயகம ஆற்றில் சடலமாக மீட்பு

டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் அடிக்கடி மர்மமான மரணங்கள் ஏற்படுவது இப்பகுதி மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

டயகம ஈஸ்ட் வன பிரதேசத்தில் இருந்து ஊற்றெடுக்கும் ஆறு இப்பகுதியை ஊடறுத்துச் செல்கிறது. இந்த ஆற்றில் அவ்வப்போது சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்படுவது வழமையாகிவிட்டது.

கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை டயகம வெஸ்ட் 5ஆம் பிரிவு தோட்டத்தினை அண்மித்த ஆகுரஓயா ஆற்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் டயகம கிழக்கு 3 ஆம் பிரிவு தோட்டத்தினைச் சேர்ந்த விஜயகுமார் உலகநாயகி. வயது 48. இப்பெண் 3 குழந்தைகளின் தாய் ஆவார்.

இப்பெண்ணின் கணவர் கடந்த 20ஆம் திகதி சுகயீனம் காரணமாக இப்பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். 21ஆம் திகதி கணவருக்கு பகல் உணவை கொண்டு சென்று கொடுத்துவிட்டு வீட்டுக்குச் செல்வதாக கணவரிடம் கூறியுள்ளார்.

எனினும் இப்பெண் வீடு போய்ச் சேரவில்லை. மறுநாள் கணவர் வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு திரும்பியபோதே மனைவி வீட்டுக்கு வரவில்லை என்ற செய்தி தெரியவந்துள்ளது. இதுகுறித்து அவர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். பொலிஸ் அதிகாரிகளும் தேடல் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு காணாமல் போனவர் 29 நாட்களுக்கு பின் ஆற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக் விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த சில வருடங்களில் இந்த ஆற்றிலிருந்து இவ்வாறு மர்மமான முறையில் உயிரிழந்த ஐவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்

கே.புஷ்பராஜ்


JETTMOD INTERNATIONAL

விரையுங்கள் உடனடிப் பயணம்

கட்டார்

| இல. | தொழிற்பிரிவு | எண்ணிக்கை | சம்பளம் கட்டார் றியாலில் |
| --- | --- | --- | --- |
| 1. | சாரதிகள் (ஆண்கள்) | 25 | 2000 QR+500 QR அலவன்ஸ் |
| 2. | விருந்தோம்பல் (வீடு பராமரிப்பு) (ஆண்கள்) | 25 | 900 QR+ வசதிகள் |
| 3. | விருந்தோம்பல், வீடு பராமரிப்பு | 25 | 1000 QR+ வசதிகள் |
| 4. | பொது சுத்திகரிப்பாளர்கள் (ஆண்கள்) | 75 | 600 QR+200 QR உணவு |

விதிகள் அல்லது நிபந்தனைகள் 1 QR = ரூ. 36

- சேவைக்காலம் : 02 வருடங்கள்
- வேலை நேரங்கள் : 8 மணித்தியாலங்கள்
- தங்குமிடம் இலவசம்
- வைத்தியம் மற்றும் போக்குவரத்து வசதிகள் இலவசம்
- 2 வருட ஒப்பந்த கால முடிவில் இலவச விமானப் பயணச் சீட்டு

கீழ்க்காணும் முகவரிக்கு வந்து உங்களுடைய கல்வித் தகைமை விபரங்களை ஒப்படையுங்கள். நேர்முகப் பரீட்சைத் திகதி அறிவிக்கப்படும்.

AL/2240/Advt/3/13

JETTMOD INTERNATIONAL
Licence Number: 2240 S.L.B.F.E. Approved Charges Only
No. 162/1 Mahavidyalaya Mawatha Colombo -13
Tel: 0114384479 / 0114384480 Mobile: 0775410949 Email: aimsjettmod@gmail.com

# சாதனைக்கு எதுவும் தடையில்லை!

எனக்கு மட்டும் யாராவது உதவி செய்திருந்தால் பெரிய அளவுக்கு வாழ்வில் முன்னேறியிருப்பேன். எனக்கு மட்டும் உடம்பில் போதிய பலம் இருந்திருந்தால் பெரிய விளையாட்டு வீரனாக வந்திருப்பேன். எனக்கு மட்டும் கல்யாணம் ஆகாமல், குழந்தைகள் என்னை நம்பி இல்லாமல் இருந்திருந்தால் தைரியமாக எடுத்து பல சாதனைகள் செய்திருப்பேன் என்று பலர் வாய்ச் சவடாலாக பேசுவதைக் கேட்டிருப்பீர்கள்.

சாதனை செய்ய நினைப்பவர்களுக்கு தடையாக எதுவுமே இருக்க முடியாது என்பதுதான் உண்மை. ஏனென்றால், தடைகளை உடைத்தெறிந்து முன்னேறுபவன் தான் சாதனையாளன். இதற்கு மிகச் சரியான உதாரணம் சேகுவேரா.

1928 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி ஆர்ஜென்டினாவில் உள்ள ரொசாரியோ எனும் இடத்தில் குறைமாதக் குழந்தையாகப் பிறந்தார் சேகுவேரா. இன்று போல் குறைமாதக் குழந்தைகளுக்கான மருத்துவம் அன்று இல்லை. இதனால் பச்சைக் குழந்தையாக இருந்தபோதே மலேரியா நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்துமாவால் பீடிக்கப்பட்டார்.

எப்போதும் இருமிக் கொண்டே இருந்ததால், அவரை பள்ளியில் சேர்க்க மறுத்தனர். அதனால் அவருடைய அம்மா, வீட்டிலேயே பாடங்கள் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். ஓரளவு வளர்ந்த பின்னரே பள்ளிக்கு அனுப்பிவைத்தார்.

உடல் நலம் சரியில்லை என்றாலும், உடல் வலிமையைக் காட்டும்படியாக சைக்கிளை வேகமாக ஓட்டுவது, கால் பந்தாட்டம் ஆடுவது, ரக்பி போன்ற விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டினார் சேகுவேரா.

இந்த விளையாட்டுக்கள் காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டாலும் விளையாட்டை நிறுத்தமாட்டார். சுவாசத்தை சரிசெய்யும் இன்ஹேலரை எப்போதும் உடன் வைத்திருந்து, உறிஞ்சிய பின் மீண்டும் விளையாடத் தொடங்கிவிடுவார்.

அதிகம் வெளியே அலையக்கூடாது என்ற கட்டுப்பாட்டினைத் தளர்த்த எண்ணினார். மருத்துவம் படித்துக் கொண்டிருந்த சேகுவேரா உடல் வலிமையைக் காட்ட வேண்டும் என்பதற்காகவே 1950 ஆம் ஆண்டு இலத்தீன் அமெரிக்காவின் 12 மாநிலங்கள் முழுவதும் சைக்கிளிலேயே சுற்றி வந்தார். அந்தப் பயணம் தான் சேகுவேராவின் உலகப் பார்வையை மாற்றியது.






வறுமையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்த மக்களைக் கண்டு மனம் வருந்தினார். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். சுதந்திரம் என்பது ஒவ்வொருவரது உயிர் மூச்சாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு புரட்சி மூலமே தீர்வு காணமுடியும் என்று நம்பினார். அதனாலேயே அமெரிக்காவின் பிடியிலிருந்த கியூபா விடுதலைக்காகப் போராடிய காஸ்ட்ரோவின் சுதந்திர தாகத்துக்கு தோள் கொடுக்கத் தொடங்கினார்.

காஸ்ட்ரோ ஒரு பக்கம் போராடிக் கொண்டிருக்க, இன்னொரு புறம் சேகுவேராவின் படை போராட்டத்தைத் தொடங்கியது. 148 வீரர்களுடன் 46 நாட்கள் உணவு, தண்ணீர், உறக்கமின்றி, பசி, கொசுக் கடி, புயல், வெள்ளம், வெப்பம் ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டு சுமார் 300 கி. மீட்டர் தூரத்தைக் கடந்தார்.

கொரில்லாப் படையாக உருமாறி எதிரிகளை பந்தாடியது மட்டுமன்றி எதிர்பட்ட விவசாயிகளிடம் ஆதரவு திரட்டி மக்கள் நாயகனாகவும் மாறினார். இந்தப் பயணத்தின்போது சேகுவேரா மருந்துகள் இல்லாமல் பட்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

**மரணத்தின் கடைசி தருணங்களில்... தன்னைக் கொல்ல வந்தவர்களைப் பார்த்து *ஒரு நிமிடம் பொறு; நான் எழுந்து நிக்கிறேன்; பிறகு என்னைச் சுடு* என்று காலில் குண்டு பாய்ந்திருந்த நிலையிலும் எழுந்து நின்ற வீரம் சேவுடையது.**

பல்வேறு நாடுகளுக்கு மாறுவேடம் புனைந்து சென்று ஆதரவு திரட்டி, சிறைபட்டு, போரிட்டு, 1959 ஆம் ஆண்டு கியூபாவுக்கு சுதந்திரம் கிடைப்பதில் முக்கிய பங்கு வகித்தார். சுதந்திர கியூபாவில் அவருக்கு பல்வேறு பதவிகள் கிடைத்தது என்றாலும், சேகுவேராவின் பார்வை வேறு மாதிரி இருந்தது.

ஆம், கியூபாவுக்கு மட்டும் சுதந்திரம் கிடைத்தால் போதாது, ஒவ்வொரு நாடும் சுதந்திர நாடாகவே இருக்க வேண்டும் என எண்ணினார். இதற்காக கியூபா கொடுத்த உயர் பதவியை தூக்கி எறிந்துவிட்டு காங்கோ மற்றும் பொலிவியாவின் சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டார்.

கடும் சண்டையின்போது கைது செய்யப்பட்டு லாகிகுவேரா எனும் இடத்தில் கழுத்திலும், நெஞ்சிலும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மரணத்தின் கடைசி தருணங்களில் நின்றபோதும் தன்னைக் கொல்ல வந்தவர்களைப் பார்த்து ஒரு நிமிடம் பொறு; நான் எழுந்து நிக்கிறேன்; பிறகு என்னைச் சுடு என்று காலில் குண்டு பாய்ந்திருந்த நிலையிலும் எழுந்து நின்ற வீரம் சேவுடையது.

குறைமாதக் குழந்தையாக நோயுடன் பிறந்தவர். ஒரு சுற்றுலாப் பயணியாக வாழ்வைத் தொடங்கி, மாபெரும் படிப்பாளியாகி, எழுத்தாளனாக உருமாறி, நல்ல காதலனாக இருந்து, சிறந்த கணவனாகி, அப்பாவாகி, இறுதியில் புரட்சியாளனாக உயர்ந்தவர்.

இவற்றையெல்லாம் 39 வருட வாழ்விலேயே செய்து முடித்தார். ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டு மூச்சுவிட சிரமப்பட்ட ஒருவரால் உலகின் தலையெழுத்தையே மாற்ற முடிந்தது எனும்போது, எந்தவிதத் தடையும் இல்லாத நாம், கண்ணுக்குத் தெரியாதவற்றை எல்லாம் தடையாக நினைத்து புலம்பலாமா?

சாதனை செய்வதற்கு எதுவுமே தடையில்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள். களத்தில் இறங்குங்கள். வெற்றி உங்களுக்காக காத்திருக்கிறது.

JETTMOD INTERNATIONAL



கட்டார் உடனடிப் பயணம்

| தொழிற்பிரிவு | எண்ணிக்கை | சம்பளம் |
|---|---|---|
| சாரதிகள் | 02 | 1200 QR |
| மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் | 03 | 900 QR |

1 QR = ரூ. 36

விதிகள் அல்லது நிபந்தனைகள்

- 2 வருட ஒப்பந்தக் காலம். தங்குமிடம், வைத்திய மற்றும் போக்குவரத்து வசதிகள் இலவசம்.
- ஒப்பந்தக்கால முடிவில் இலவச விமானச்சீட்டு.
- 8 மணித்தியாலங்கள் வேலை நேரம்.

கீழ்க்காணும் முகவரிக்கு வந்து உங்களுடைய கல்வித் தகைமை விபரங்களை ஒப்படையுங்கள். நேர்முகப் பரீட்சைத் திகதி அறிவிக்கப்படும்.

JETTMOD INTERNATIONAL
Licence Number: 2240 S.L.B.F.E. Approved Charges Only
No. 162/1 Mahavidyalaya Mawatha Colombo -13
Tel: 0114384479 / 0114384480 Mobile: 0775410949 Email: aimsjettmod@gmail.com

## உதயசூரியன் பயோடேட்டா

பெயர் - நவநீதம்பிள்ளை

பதவி - ஐ.நா. மனித உரிமை பேரவையின் உயர் ஸ்தானிகர்.

தற்போதைய தொழில் - இலங்கையை நோட்டமிடுவது

பிடித்த வேலை - மஹிந்த அரசிற்கு அவ்வப்போது அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பது

ஒரே நோக்கம் - தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்க குரல் கொடுப்பது

நகைச்சுவை - நான் இலங்கை வருவதையிட்டு காணாமல் போனவர்களை ஆராய திடீரென ஆணைக்குழு அமைத்தது (ஹி..ஹி.. இங்கு ஆணக்குழுக்களுக்கு பஞ்சமில்லை அம்மணி)



சமீபத்திய அதிர்ச்சி - வெலிவேரியாவில் இராணுவம் நடத்திய வெறியாட்டத்தைப் பார்த்து.

தற்போதைய சந்தேகம் - சிங்கள மக்கள் மீதே இராணுவம் தாக்குதல் நடத்துவதென்றால் தமிழ் மக்களின் நிலை?

வியப்பு - எமக்கெதிராக குரல் கொடுத்து ஒரு நாள் உபவாசம் இருக்கும் அவர் இன்னும் எதுவும் கூறாமலிருப்பது (ஓ... அவரா, அவர் மௌனவிரதம்)

ஒரே கோபம் - ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை கண்டுகொள்ளாமல் இருப்பது...

மஹிந்த அரசிற்கு கூறுவது - எளியாரை வலியார் தண்டித்தால் வலியாரை தெய்வம் தண்டிக்கும் என்பது (தெய்வம் எங்கே நீங்களாவது கேளுங்க)

தமிழ் மக்களுக்கு கூறுவது - பொறுத்திருங்கள், எனது இலங்கை விஜயத்தின் பின் கனமான செய்தியை மஹிந்த அரசிற்கு சொல்லிச் செல்வேன். (உங்களுக்கும் ''நூல்'' கட்டாமல் இருந்தால் சரி)

தருபவர் :- எம். தாசன்

(யாவும் கற்பனை)

## மலையகத் தலைமை யார்?

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...!

மறுபக்கம் என்றும் பெருந்தோட்டங்களில் மக்களின் பேரபிமானம் பெற்ற கட்சியாகக் காணப்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு நாளுக்கு நாள் தோட்டப்புறங்களில் குறைந்துகொண்டே வந்திருக்கின்றது. இது நடந்து முடிந்த தேர்தல்கள் மூலமும் அறியக்கூடியதாக இருந்தது.

மேலும், அக் கட்சியில் இம்முறை மலையகத்தில் பிரபலமான கட்சிகள் இணைந்து போட்டியிடாமை என்பது கட்சியின் வாக்குத் தளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். இருந்தபோதும், ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டணியில், அரசாங்கத்தின் பிரதான எதிர்ப்பாளர்களாக காணப்படுகின்ற மனோகணேசனும், அதேபோல் மலையகத்தின் சிரேஷ்ட அரசியல் மற்றும் தொழிற்சங்கவாதியுமான சதாசிவம் போன்றோர் இணைந்து போட்டியிடுவதால் ஓரளவு சாதகமான நிலைமை காணப்படுகின்றது.

ஆகவே, இதுவரை எந்தத் தேர்தலும் வழங்காத தீர்ப்புகளை, முடிவுகளை இம்முறை மத்திய மாகாணசபைத் தேர்தல் வழங்கலாம். அத்தோடு நுவரெலியா மாவட்டத்தில் சமபலமாக இருக்கின்ற கட்சிகளிடையேயான போட்டியால் இம்முறை கண்டி, மாத்தளை மாவட்டங்களும் மலையக அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றன. காரணம் அங்கு அக்கட்சிகள் பெற்றுக்கொள்கின்ற பிரதிநிதித்துவம் என்பது மலையகத் தலைமைக்கான போட்டிக்கு உந்து சக்தியாக அமையும்.

அந்த வகையில் கட்சிகளின் தேர்தல் வியூகங்கள், கட்சித்தாவல்கள் மக்களின் எதிர்பார்ப்புகள், வேட்பாளர் மீதான விருப்பு வெறுப்புகள் என்பவற்றின் அடிப்படையில் தேர்தலில் மக்கள் எவ்வகையான முடிவை எடுக்கப்போகின்றனர். அதன்மூலம் மலையக தலைமைத்துவம் தக்கவைக்கப்படுமா? அல்லது கை மாறுமா? பதில் தேர்தல் முடிவுகளிடையே தங்கியிருக்கின்றது.

## முச்சக்கரவண்டிகளுக்கு கடிவாளம்!

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...!

அதற்கப்பால் விபசாரம், கொலை, கொள்ளை, போதைப்பொருட்களை கடத்தல், போயா தினங்களில் மதுபானங்களை கடத்தல் உள்ளிட்ட சமூக விரோத செயல்களுக்கு முச்சக்கரவண்டிகள் பயன்படுத்தப்படுவதாகவும், அவற்றுக்கு முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் துணை போவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றன.

விபசாரத்திற்கும், விபசாரிகளை ஏற்றியிறக்குவதற்கும் ஏன் நடமாடும் விபசார நிலையங்களாகவும் முச்சக்கரவண்டிகள் மிக பகிரங்கமாகவே பயன்படுத்தப்படுவதை தலைநகர் உள்ளிட்ட பிரதான நகரங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. சட்டங்கள் எவ்வளவுதான் கடினமாக இருந்தாலும் அவை முறையாக அமுல்படுத்தப்படும் போதுதான் அதன்பயன் கிடைக்கும்.

பொது இடங்களில் புகைத்தலுக்கு தடை செய்யப்பட்டிருந்தாலும் முச்சக்கரவண்டி சாரதிகளில் சிலர் புகைத்துக்கொண்டே பயணிகளை ஏற்றியிறக்குவதையும் மறுப்பதற்கில்லை.

எரிபொருட்களின் விலையேற்றங்களை அடுத்து உடனடியாக கட்டணங்களை அதிகரித்துக் கொள்கின்ற முச்சக்கரவண்டி சாரதிகள் புதிய சட்டத்தையும் முறையாக கடைப்பிடிப்பதற்கு முன்வரவேண்டும்.

அதேபோல முச்சக்கரவண்டி சாரதிகள், உரிமையாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்டவர்கள் செவிசாய்க்க வேண்டும்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது மட்டுமன்றி, ஏனையவர்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதற்கும் இந்த சட்டங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

நாடோடி!


### தேவை

பற்தூரிகை, பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு வேலை செய்யக்கூடிய ஆண், பெண் தேவை. வயது 18 -40 வரை. சம்பளம் 18,000 - 25,000 உணவு தங்குமிட வசதி நியாயமான விலையில்.

அஞ்சலி : 071 9999890.



### JETTMOD INTERNATIONAL

### கட்டார் உடனடிப் பயணம்

| தொழிற்பிரிவு | எண்ணிக்கை | சம்பளம் |
|---|---|---|
| A/C றெக்னீசியன் | 03 | 1200 QR |
| எலக்றிக் றெக்னீசியன் | 03 | 1200 QR |
| H.V.A.C றெக்னீசியன் | 03 | 1200 QR |
| வெல்டர் | 05 | 1200 QR |
| பிளம்பர் | 05 | 1200 QR |
| மேசன் - ரைல்ஸ், புளொக், பிளாஸ்டர் | 10 | 1200 QR |
| DUCT றெக்னீசியன் | 03 | 1200 QR |
| பைப் பொருத்துனர் | 04 | 1200 QR |

1 QR = ரு. 36

விதிகள் அல்லது நிபந்தனைகள்

- 2 வருட ஒப்பந்தம். தங்குமிடம். வைத்திய மற்றும் போக்குவரத்து வசதிகள் இலவசம்.
- ஒப்பந்தக்கால முடிவில் இலவச விமானச்சீட்டு.
- 8 மணித்தியாலங்கள் வேலை நேரம்.

கீழ்க்காணும் முகவரிக்கு வந்து உங்களுடைய கல்வித் தகைமை விபரங்களை ஒப்படையுங்கள். நேர்முகப் பரீட்சைத் திகதி அறிவிக்கப்படும்.

AL/2240/Advt/2/13

JETTMOD INTERNATIONAL


Licence Number: 2240 S.L.B.F.E. Approved Charges Only

No. 162/1 Mahavidyalaya Mawatha Colombo -13

Tel: 0114384479 / 0114384480 Mobile: 0775410949 Email: aimsjettmod@gmail.com


# புதிர் BOX

## கண்ணாமூச்சி





## சூப்பர் சூப்பர்










படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...

**வாசகர்களின் கவனத்திற்கு!**

உங்கள் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள், சிறுகதை, கவிதை, கட்டுரை என அனைத்து விதமான ஆக்கங்களையும் எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

முகவரி:
உதயசூரியன்
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல.68, எலிஹவுஸ்வீதி,
கொழும்பு 15.
மின்னஞ்சல்: thinaupcountry@yahoo.com
Fax: 0112540695

## வார்த்தைப் புதிர் - 71



### இடமிருந்து வலம்

01. பத்திரிகை அச்சிட இது தேவை.
10. ஆற்றைக் கடக்க இது தேவை
11. மரக்கறி வகையில் ஒன்று.
12. இடி முழக்கத்திற்கு முன் வருவது.
15. நடுராத்திரி.
17. ஆபத்து வேளையில் கைகொடுப்பவன்
19. வாழ்க்கைக் கணக்கை முடிக்க வருபவர்.
20. எண்சாண் உடம்புக்கு இதுவே பிரதானம்.
21. பொழுதுபோக்குச் சாதனங்களில் ஒன்று.

### வலமிருந்து இடம்

03. பரவும் நோய்.
05. தொழிலாளி.
06. சாதுவான குணமுள்ள ஒரு காட்டு விலங்கு.
16. ஒரு மீன் உணவு

### மேலிருந்து கீழ்

01. கருத்துப்பட ஓவியம் ஆங்கிலத்தில்.
02. அரும்பு (குழம்பியுள்ளது)
03. எமது மக்களின் பொழுதுபோக்கு சாதனங்களில் மிகப் பிரதானமானது.
04. இறைச்சி என்பது ஆங்கிலத்தில். 05.கவிஞன்
09.நீராகாரம்
12. திருமணமான பெண்கள் அணியும் ஒரு அணிகலன்.
13. இவன் பலசாலி.
14. இன்று பல நாடுகளின் பொருளாதார வீழ்ச்சிக்கு இது காரணமாக இருக்கிறது. (குழம்பியுள்ளது)
15. வாகனத்தை செலுத்துபவன்
18. பின் என்பதன் எதிர்பதம்.

### கீழிருந்து மேல்

07. ஆண் ஆட்டுக்குட்டி.
08. விருப்பல்ல. (குழம்பியுள்ளது)
22. தோரணம் கட்ட இது உதவும்.

# பிச்சை எடுக்கத் தடைபோட்டால் மட்டும் போதுமா?

யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசாங்கம் இலங்கையை சிங்கப்பூராக மாற்றிக் காட்டுவதாக கூறி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஆனால் அவ் அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு புறம் இருக்க, நாட்டில் பிச்சைக்காரர்களின் தொல்லையும் குறைந்ததாகத் தெரியவில்லை. பிச்சைக்காரர் தொடர்பாக அரசு பல்வேறு சட்டங்களை அண்மையில் கொண்டு வந்தபோதும், அது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் வவுனியாவில் பிச்சைக்காரரின் தொல்லையானது அதிகமாகக் காணப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

கைக் குழந்தைகளுடன் பிச்சை எடுக்கக் கூடாது எனவும், அதனை மீறி பிச்சை எடுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வாறான திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளதா என்ற சந்தேகம் பிச்சைக்காரரின் செயற்பாட்டை பார்க்கின்றபோது எண்ணத் தோன்றுவதுடன், அரசின் இந்தத் திட்டங்கள் எத்தனை பிச்சைக்காரருக்குத் தெரியும் என்ற சந்தேகமும் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் ஆலயங்களின் முன்னாலும், பஸ் நிலையங்களிலும் பிச்சைக்காரர்களின் தொல்லை காணப்படுவதுடன், வெள்ளிக்கிழமைகளில் அவர்கள் தமது கைக் குழந்தைகளுடன் கடை கடையாகவும், வீடு வீடாகவும் சென்று பிச்சை எடுத்து வருகிறார்கள்.

இது தொடர்பாக குருமண் காட்டில் வர்த்தக நிலையம் ஒன்றினை நடத்தும் எஸ்.பாலா என்பவர் கூறுகையில்;

நான் சாப்பாட்டுக் கடைதான் நடத்துறன். வெள்ளிக்கிழமை என்றால் நான் கடை திறந்த உடனேயே கூட்டம் கூட்டமாக கைக் குழந்தைகளுடன் பிச்சைக்காரர்கள் வருவாங்க. வியாபாரம் நடக்கிற வேளையிலும் கூட இங்கே வந்து தொல்லை தருவாங்க. என்ர மேசையில வைக்கிற தண்ணீயை எடுத்து குடிப்பாங்க. பிறகு காசு வாங்கிக்கொண்டு போயிருவாங்க. வெள்ளிக்கிழமை மட்டும் எனக்கு இவங்களுக்கு கொடுக்கிறதில 100 ரூபாய் முடிஞ்சிடும். இவங்க தண்ணி கிளாஸுகளில தண்ணியை எடுத்து குடிக்கிறதால என்ர கடைக்கு வாறவங்க அருவருப்போட போறாங்க. என்ன பண்ணறது என்றார்.

பிச்சைக்காரர் தமது சுகாதாரம் அற்ற ஆடைகளுடன் அருவருக்கத்தக்க முறையில் வந்து கடைகளில் உள்ள பாத்திரங்களில் தண்ணி எடுத்து குடிக்கின்றபோது அவர்களை தடுக்க முடியுமா? என்கிறனர் வர்த்தகர்கள். அதனைப் பார்த்து உணவகங்களுக்கு வருகின்ற பலர் அருவருக்கின்றனர்.

தாம் மட்டும் பிச்சை எடுப்பது மட்டுமின்றி, தமது சிறு கைக் குழந்தைகளையும் கூடவே கொண்டு சென்று அவர்களுக்கும் அதனை பழக்கி வருகின்றனர். இதனால் பிச்சைக்காரர் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றதே தவிர, குறைந்ததாக தெரியவில்லை.



**வவுனியாவில் பெருகும் பிச்சைக்காரர்களின் தொகை!**

தனது கைக் குழந்தையுடன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த நேசமணி என்பவரிடம் கேட்டபோது, நாம பிச்சை எடுத்துத்தான் பிழைப்பு நடத்துறம். நான் பிச்சை எடுக்க வந்தா பிள்ளை தனிய இருக்கும். அதான் கூட்டிட்டு வாறன். அவனுக்கும் இதைத்தானே பழக்கணும் என்கிறார்.

இதேவேளை பிச்சைக்காரர்களைப் பார்த்து குறை சொல்லும் எமது சமூகம் அவர்களுக்கான வாழ்வுக்காக என்ன செய்திருக்கின்றது? என்பது சற்று சிந்திக்க வேண்டிய விடயம்.

ஆம், கைக்குழந்தையுடன் பிச்சை எடுக்கக் கூடாது என்ற செய்தியே பிச்சைக்காரருக்கு சென்றடையாதபோது அவர்களால் எப்படி இந்த சமூகத்தில் வாழ முடியும்? அவர்களையும் மனிதர்களாகக் கருதி அவர்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்கள், வீட்டு வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்காதவரை பிச்சைக்காரரை கட்டுப்படுத்த முடியாது.

அவர்கள் தமது பிள்ளைகளுக்கும் அதனையே பழக்கி கல்வியறிவு அற்ற ஒரு நீண்ட சமுதாயம் உருவாகக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி வருகின்றனர்.

எனவே இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களும், அதிகாரிகளும் முன்வராதவரை, எமது நாட்டின் இன்றைய நிலையை மாற்ற முடியாது என்பது வெளிப்படையானது.

-கே.வாசு-





# முச்சக்கரவண்டிகளுக்கு கடிவாளம்!

சட்டங்கள் எப்போதும் மக்களுக்காக, அவர்களின் நலனுக்காகவே கொண்டு வரப்படும், கொண்டுவரப்பட வேண்டும். மக்களுக்கு மிகப் பயன்மிக்க வாகனமாகத் திகழும் முச்சக்கர வண்டிகள் தொடர்பில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் முச்சக்கரவண்டி சாரதிகளை, உரிமையாளர்களை விசனம் கொள்ளச் செய்திருக்கிறது.

சொந்த வாகனம் இல்லாதவர்களுக்கு முச்சக்கரவண்டிகள் அதாவது ஆட்டோதான் எப்போதும் கைகொடுக்கிறது. இலகுவான பயணம், விரைவு, கட்டுப்படியான கட்டணம் போன்ற காரணங்களே மக்கள் முச்சக்கரவண்டிகளை நாடக் காரணமாகின்றன.

வீதிகளில் விரையும் வாகனங்களில் ஆட்டோக்களே அதிகபட்சமாகக் காணப்படுவது இதற்கு ஒரு உதாரணம்.

இப்பொழுது நவீன முச்சக்கரவண்டிகள் பல பல்வேறு வசதிகளோடு பாவனைக்கு வந்திருக்கின்றன.

2002 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் 85,648 பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிகள் இருப்பதாக இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்கள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஆட்டோக்கள் மூலம் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்ற போதும் அநியாய விபத்துகள், ஆட்டோக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் என்பன அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், புதிய சட்டங்களை அமுல்படுத்தி முச்சக்கரவண்டிகளுக்கு கடிவாளம் போடுவதற்கு தீர்மானித்துள்ளது.

இதுபற்றி விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய,

★ முச்சக்கரவண்டிகளை மணித்தியாலத்திற்கு 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் மாத்திரமே செலுத்த முடியும்.

★ வலது புறமாக முச்சக்கரவண்டிக்குள் பிரவேசிக்கவோ அதிலிருந்து இறங்கவோ கூடாது.

★ முச்சக்கரவண்டியில் பயணிப்பவர்கள் வெளித்தெரியும் வகையில் இருக்கவேண்டும்.

★ சாரதி உட்பட நான்கு பேருக்கு மேல் பயணிக்கக் கூடாது.

★ 12 வயதிற்கு குறைவான இரண்டு சிறுவர்களை ஒரு பயணி என்ற அடிப்படையில் பயணிகளின் எண்ணிக்கையை தீர்மானிக்க வேண்டும்.

★ முச்சக்கரவண்டிக்குள் நேர் எதிரே ஆசனங்களை பொருத்துவதற்கு தடை.

★ சாரதியை தவிர்ந்த வேறு நபர்கள் சாரதிக்கான ஆசனத்தில் அமர்ந்துச் செல்வதற்கு தடை.

★ முச்சக்கரவண்டிக்குள் இருந்தவாறு கையேடுகளை விநியோகிக்க முடியாது.

★ ஏனையவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒலிக்கருவிகள் அல்லது வேறு உபகரணங்களை பயன்படுத்தக் கூடாது.

★ பயணிகள் வினவும் பட்சத்தில் பயணிப்பதற்கு உத்தேசித்துள்ள பாதை தொடர்பில் தகவல்களை சாரதி வழங்கவேண்டும்.

★ மானியில் குறிப்பிடப்படுகின்ற மொத்தக் கட்டணத்தையும் பயணிகள் செலுத்தவேண்டும்.

★ சட்டவிரோத செயற்பாடுகளுக்காக முச்சக் கரவண்டியை பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கக்கூடாது.

★ பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லும் அனைத்து முச்சக்கரவண்டிகளிலும் மானிகள் (மீற்றர்) பொருத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்துக்களையும், குற்றச்செயல்களையும் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சட்டமும் விதிமுறைகளும் அமுல்படுத்தப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும் போக்குவரத்துப் பொலிஸாரும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், புதிய சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தங்களுடைய கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். ஒரு மணிநேரத்திற்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் பயணிப்பது தங்களுக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தும். ஏனைய வாகனங்களுடன் ஒப்பிடுகையில் இது ஆமை அல்லது நத்தை வேகமாகும் என அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மக்கள் விரைவான பயணத்திற்காகவும் சௌகரியத்திற்காகவுமே முச்சக்கரவண்டிகளை நாடுகின்றனர். நாம் இப்படி மந்த வேகத்தில் பயணித்தால் யாரும் முச்சக்கரவண்டிகளில் ஏறவே மாட்டார்கள் என ஆட்டோ சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இவ்வருடத்தில் முச்சக்கர வண்டிகளில் இதுவரை மட்டும் 176 அபாயகரமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும், அதில் 467 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து மே மாதம் 7 ஆம் திகதிவரையான காலத்தில் 27 முச்சக்கரவண்டி விபத்துக்கள் இடம்பெற்றதாகவும், இவ்விபத்துக்களில் 34 பேர் பலியானதாகவும் அத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை என்பதனால்தான் புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

- தொடர்ச்சி 05 ஆம் பக்கம் -



## இதுதான் உலகின் மிக பெரிய கப்பலாம்!

தற்போது உலகிலேயே காணப்படும் கப்பல்களுள் மிகவும் பிரமாண்டமான கப்பல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
தென்கொரிய பொறியியலாளர்களின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இக்கப்பல் கடந்த 16 ஆம் திகதி நெதர்லாந்தின் ரொட்டர்டாம் பகுதியில் சேவைக்காக களமிறக்கப்பட்டுள்ளது.
இதனை உருவாக்க 185 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளதாம்.




## ஆவிகள் திருவிழா!

தைவான் நாட்டில் சாய் சுயான் என்ற பகுதியில் ஆவித் திருவிழா ரொம்பப் பிரபலம். வருடாந்தம் ஆகஸ்ட் மாதம் இவ்விழா நடைபெறும். அன்று மாலை முதல் விடிய விடிய ஊர்வலங்களும் திருவிழாவும் நடக்கும். பேய், பிசாசு, ஆவி வேடங்களை அணிந்து அட்டகாசமாய் ஆடிப்பாடி பவனி வருவர் பலர். அவர்களைப் பார்க்க பெரும் கூட்டம் கூடும்.
திருவிழா நடக்கும் தினத்தில் விண்ணுலகில் சொர்க்கமும் நரகமும் திறந்திருக்குமாம். அப்போது எசகு பிசகாய் இறந்தவர்கள் உதாரணமாக பசி, தனிமை, கோபம், பகை என பல்வேறு காரணங்களால் இறந்தவர்கள், கொலையுண்டவர்கள் அன்று பூமிக்கு வந்து பழிக்குப் பழி வாங்க முயற்சிப்பர் என்று நம்புகின்றனர். இதனால் அன்று சிலர் வீட்டிற்குள்ளேயே கதவை சாத்தியபடி கிடப்பர். இன்னும் சிலரோ... ஆவி, பூதம், பிசாசு ஊர்வலத்தில் வரும் நபர்களுக்கு பயந்து வாசலில் மது மற்றும் உணவு பண்டங்களை வைத்து எடுத்துச் செல்ல ஏதுவாய் கதவை சாத்திக் கொண்டு அமர்ந்திருப்பர். ஊர்வலத்தினரும் கதவை தட்டி அதைக் கொடு, இதைக் கொடு... என கேட்பதுண்டு. கொடுக்காவிடில் சபிப்பதும் உண்டு!



இப்படி, இறந்தவர்களின் வீடுகளில் அன்று விசேஷ உணவுகளை செய்து இறந்தவர் வந்து சாப்பிடுவது போல் இலை போட்டு பரிமாறி படைத்து பின் யாரையாவது உட்கார வைத்து அதைச் சாப்பிடச் செய்வர்.
அன்று நீர் நிலைகளில் பேப்பர் படகுகளில் விளக்குகள் ஏற்றி மிதக்கவிடுவர்.
மொத்தத்தில் இது ஒரு பயம் கலந்த திருவிழா.

## இந்த ஜோடி புதுசு



படத்திலுள்ள இளம் ஜோடியை கூர்ந்து பாருங்கள். எதுவும் புரியாவிட்டால் தொடர்ந்து படியுங்கள். முதலாமவர் பெயர் அண்ட்ரூ. இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் எமரால்ட் என்ற பெயரில் பெண்ணாக பவனி வந்தவர். இரண்டாமவர் ஹில்லோ. இவர் லூகாஸ் என்ற பெயரில் ஆணாக உலவியவர்.
இவர் லூகாஸ் என்ற பெயரில் ஆணாக உலவியவர்.
பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எமரால்டுக்கு பெண்ணின் உணர்வுக்கு மாறாக ஆணுக்குரிய சிந்தனைகள் பெருக பெற்றோர் உதவியுடன் மாற்று அறுவைச் சிகிச்சை செய்து ஆணாக மாறிவிட்டார்.
லூகாஸ் நிலையோ இதற்கு எதிரானது. தன்னை ஒத்த ஆண் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடினாலும் தனிமையை உணர்ந்தார். பெண் சார்ந்த உணர்ச்சிகள், ஆசைகள் அதிகரிக்க பெற்றோர் உதவியுடன் தன்னை மாற்று அறுவைச் சிகிச்சை செய்து பெண்ணாக மாறினார்.
இப்படி மாற்று அறுவைச் சிகிச்சை மூலம் புது வாழ்வு கண்ட இவர்களின் சந்திப்பு எதிர்பாராத விதமாக நடக்க இருவரும் ஒருவர் மீது ஒருவர் மையல் கொண்டனர். இன்று பெற்றோர் ஆசியுடன் இருவரும் இளம் ஜோடியாக பவனி வருகின்றனர்.
இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் அண்ட்ரூ 17 வயதாகும் பள்ளி மாணவன், ஹில்லோ 19 வயது கல்லூரி மாணவி. இவர்களுக்கு வயது ஒரு பொருட்டல்ல... அதெல்லாம் அங்கு சகஜமப்பா.

## இரத்தம் குடிக்கலாம் வாரியளா?



அமெரிக்காவின் ஹாவெர்ஹில் பகுதியைச் சேர்ந்த காதல் தம்பதி, டிராவென் வயது 38, பெனிங்சோப் வயது 20. இவர்களின் பொழுது போக்கு என்ன தெரியுமா? ஒருவர் இரத்தத்தை மற்றொருவர் ஜூஸ் போல் சாப்பிடுவது தான். பிளேடால் கீறலை ஏற்படுத்தியோ அல்லது ஊசி மூலம் இரத்தத்தை எடுத்தோ சுவைப்பதில் இவர்களுக்கு அலாதி ஆனந்தம்.
இந்த விசித்திரமான பழக்கம் குறித்து டிராவென் கூறுகையில்: ஒருவர் இரத்தத்தை ஒருவர் குடிப்பதன் மூலம் எங்களுக்கு இடையேயான உறவு மேலும் பலப்படுகிறது. வாரத்துக்கு மூன்று முறையாவது இரத்தம் குடித்து விடுவோம். பலவீனமாக இருக்கும் நேரங்களில் எல்லாம் இரத்தம் குடிப்போம். இரத்தம் குடிக்கும்போது ஏற்படும் இன்பம் எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியை தருகிறது... எனக் கூறி அலற வைக்கிறார்.

## 8 வயதிலும் குழந்தையாகவே இருக்கும் சிறுமி

அமெரிக்காவில் 8 வயதுச் சிறுமி ஒருவர் 5 கிலோ எடையுடன் இன்னும் குழந்தையாகவே இருக்கிறார்.
அமெரிக்காவின் மன்டானா பகுதியில் உள்ள பில்லிங்ஸ் என்ற இடத்தைச் சேர்ந்தவர் மேரி மார்க்கரெட் வில்லியம்ஸ். இவரது மகள் கேப்பி வில்லியம்ஸுக்கு 8 வயது ஆகிறது. ஆனாலும் இன்னும் குழந்தையாகவே இருக்கிறார். உடலின் தோலும் குழந்தைக்கு இருப்பதை போன்று மிக மென்மையாகவே உள்ளது.



ஜீனில் ஏற்பட்ட மாற்றமே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.
கேப்பி வில்லியம்ஸின் உடல் வளர்ச்சி குறித்து மருத்துவ ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட் எப்பால்கர், தனது குழுவினருடன் கடந்த 2 ஆண்டுகளாக ஆய்வு செய்து வருகிறார்.

# கொழும்பில் பிச்சைக்காரன் ஊரில் பணக்காரன்!

## அரச உத்தியோகத்தரின் இரட்டைவேடம்!

அடுத்த வேளை சோற்றுக்கே வழியில்லாவிட்டால் பிச்சைதான் எடுக்க வேண்டும் என்பார்கள்!

ஆனால், பிச்சை எடுப்பவர்கள் எல்லாம் உண்மையில் ஏழைகளா? அடுத்த வேளை சோற்றுக்கே வழியில்லாதவர்கள் மட்டும் தான் பிச்சை எடுக்கிறார்களா?

கொழும்பில் நடக்கும், நடந்த ஆச்சரியமான உண்மைக் கதை இது!

பொலனறுவையைச் சேர்ந்தவர் அந்தப் பெண். அவரது சகோதரர் இங்கிலாந்தில் வசிக்கிறார். அவர் அனுப்பிய ஒரு பார்சலை பெற்றுக் கொள்வதற்காக குறித்த பெண் கொழும்பு வருகிறார். ஆட்டோவில் குறித்த விலாசத்திற்கு செல்ல ஏறினார்.

வழமைபோல அன்றும் மிகுந்த வாகன நெரிசல், அவர் செல்ல வேண்டிய இடத்தை அண்மித்து விட்டார். இறங்கி நடந்தால் 5 நிமிடத்தில் போய்ச் சேர்ந்து விடலாம். வாகனத்திலிருந்து இறங்கி பாதையைக் கடக்க எதிர்ப்புறத்தைப் பார்த்தார்.

அங்கே ஓர் தெரிந்த முகம். யார் என மூளை கண்டறிவதற்குள் அந்த நபரும் இவரைப்பார்த்து கையசைத்தார். அப்படியானால் அவர் நன்கு தெரிந்தவர்தான்.

அவர்... அவர்... குறித்த பெண்ணின் கணவர். அதுவும் பிச்சைக்காரக் கோலத்தில்...!

வாரம் ஒருமுறை வீட்டுக்கு கைநிறைய பணத்தோடு ஒரு முதலாளி கோலத்தில் வரும் கணவன் எப்படி இங்கே பிச்சைக்காரக் கோலத்தில்...!

அதிர்ச்சி மாறாமல் பாதையைக் கடந்தார். அங்கே அந்த நபரைக் காணவில்லை. மாயமாகியிருந்தார். அங்கும் இங்கும் தேடினார். அருகிலிருந்தவர்களிடம் விசாரித்தார்.

அங்கே கிடந்த சில உடைமைகள் அவர் அப்பெண்ணின் கணவர்தான் என்று உறுதி செய்தன.

அப்பெண் வீதியிலிருந்த பொலிஸாரிடமும் தகவலைத் தெரிவித்தாள்.

அவள் கணவன் ஓர் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், எழுதுவினைஞர்.

அவர் பிச்சைக்காரனானது எப்படி?

குறித்த நபர் பொலனறுவையில் அரச உத்தியோகத்தராக கௌரவமாக தொழில்பார்த்தார். உத்தியோகத்தில் கிடைக்கும் வருமானம் குடும்பச் செலவை ஈடுகட்டவே போதுமானதாக இல்லை. கல்யாண வயதில் இரண்டு பிள்ளைகள் வேறு.

இருவருமே சுமாரான அழகுதான். அதிலும் மூத்தவளுக்கு கொஞ்சம் மந்தபுத்தி. சீதனம், வீட்டு வசதியில்லாமல் இருவரையும் கரை சேர்ப்பது சாத்தியமில்லை என்பது அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

கிடைக்கும் சம்பளத்தில் குடும்பச் செலவு போக வீடு கட்ட ஒரு கல்கூட வாங்க முடியாது. பிறகெப்படி வீடு கட்டுவது?

ஒரு பொறுப்புள்ள தகப்பனாக வீட்டு நிலைமை அவரை வெகுவாகவே பாதித்தது. அதுவும் ஓய்வு பெறும் காலமும் அண்மித்துவிட்டது.

ஒரு வார இறுதி நாளில் கொழும்பு வந்தார். மட்டக்குளியில் அவருக்கு ஓர் நல்ல நண்பர் இருந்தார். டாக்சி வைத்து வருமானம் தேடி வரும் அவரை சந்திக்கச் சென்றார்.

தன் வறுமையைப் போக்க ஏதாவது வழி அவரிடம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவரைச் சந்தித்து தன் குடும்ப நிலையைக் கொட்டித்தீர்த்தார்.

இவ்வளவு பிரச்சினை இருக்கிறதா? இவ்வளவையும் தீர்க்க பணம் வேண்டுமானால் ஒன்று கொள்ளையடிக்க வேண்டும். அல்லது பிச்சை எடுக்க வேண்டும் என்றார் அந்த நண்பர்.

என்ன பிச்சை எடுப்பதா...? என முகம் சுளித்தார்.

பிச்சை எடுப்பவர்கள் எல்லாம் பணமில்லாதவர்கள் என்று நினைத்துவிடாதே! அவர்கள்தான் தினமொன்றுக்கு அதிகம் சம்பாதிக்கிறார்கள். மற்றவர்களுக்கு வட்டிக்கு கடன் கூட கொடுக்கிறார்கள். நான் கூட சில



சமயம் அவசரத் தேவைக்கு அவர்களிடம் வட்டிக்கு கடன் வாங்கியிருக்கிறேன் என அந்த நண்பர் அடுக்கிக் கொண்டே போனார்.

அத்தனையையும் பொறுமையாகக் கேட்டு விட்டு அவர் சொன்ன பதில் நண்பரை அதிர்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு போய் நிறுத்தி விட்டது.

ஆம்! நான் முடிவு பண்ணி விட்டேன். நான் பிச்சை எடுக்கப் போகிறேன் என்றார்.

உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? என்றார் நண்பர்.

ஆனால் அவர் பிடிவாதமாக இருந்தார்.

★★★

சில மாதங்களில் வீடுகட்ட அத்திபாரம் போட்டார். வாரங்கள், மாதங்கள் கடந்து வீடு மளமளவென உயர்ந்து கொண்டே போனது. ஒருவருடத்திற்குள் அழகான வசதியான வீட்டைக் கட்டி முடித்துவிட்டார். கையில் தாராளமாக காசு புழங்கியது. இவருக்கு இத்தனை பணம் எப்படி வந்தது என ஊர் மக்களே ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், யாரும் அவரிடம் கேள்வி எழுப்பவில்லை.

ஏனெனில் இப்போது அவர் ஊரில் பெரிய மனிதர், பணக்காரர்! நலிந்தவர்களைத்தானே இந்த உலகம் கேள்வி கேட்கும். ஓய்வு பெறும் போது அழகிய வீடு, ஒரு ட்ராக்டர், கையில் இரு பெண்களுக்கும் கணிசமான சீதனப்பணம் என அவர் நிறைவு கண்டிருந்தார். எப்படி வந்தது இவ்வளவு பணம்?

இவருக்கு தவறான வழியை காட்டி விட்டோமோ என நண்பர் மனம் கலங்கினார். என்றாலும் இவரது பிடிவாதத்தை பார்த்து உதவி செய்ய மனம் இரங்கினார்.

கொச்சிக்கடையில் எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அங்கே நீ பிச்சை எடு. உனக்கு போதிய பாதுகாப்பை நான் செய்கிறேன் என்றார்.

அதன்படி தன் கோலத்தை முழுமையாக மாற்றிக் கொண்டு கையேந்தினார் அந்த அரச உத்தியோகத்தர். பின்னர் அத்தொழிலின் நெளிவு சுளிவுகள் அத்துப்படியாயிற்று. பிச்சைக்கார வாழ்க்கையின் ஆச்சரியப்படத் தக்க மறுபுறத்தை கண்டுகொண்டார்.

அதாவது பேமண்ட் வியாபாரிகள், சலூன் கடைக்காரர்கள், சிறுவியாபாரிகளுக்கு வட்டிக்கு கடன் கொடுத்தார். மாலையில் வட்டியோடு சேர்த்து அறவிட்டார். நண்பரிடம் பணத்தைக் கொடுத்து பெரிய முதலாளிகளுக்கு கூட வட்டிக்கு பணம் கொடுத்தார். கையில் பணம் தாராளமாகப் புரண்டது.

இவர் பிச்சையெடுப்பதாக ஊரில் அரசல் புரசலாக தகவல் பரவினாலும் யாரும் அதை நம்பத் தயாராக இல்லை!

ஆனால், தனது மனைவி மூலமாக அது அம்பலத்திற்கு வரும் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை.

இப்போதெல்லாம் கொச்சிக்கடையில் அவரது இடம் காலியாக இருக்கிறது.

★★★

மேற்படி சம்பவம் மட்டுமல்ல, கொழும்பில் சில வருடங்களுக்கு முன் இறந்த ஒரு பிச்சைக்காரரின் பொதியில் 30 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் கண்டெடுக்கப்பட்ட சம்பவமும், இரண்டு முச்சக்கர வண்டிகளை வாங்கி வாடகைக்கு விட்டிருக்கும் பிச்சைக்காரர் பற்றிய தகவலும் ஆச்சரியத்தில் ஆழ்த்துவதாக இருக்கிறது.

நம்மிடம் அம்மா... தாயே... என கையேந்தும் எல்லோரும் ஏழைகள் அல்ல என்பதை இச்சம்பவங்கள் நம்மிடம் சொல்லிச் செல்கின்றன.

**தமிழில் :- ஜீ.வி.எஸ்.**

**நன்றி - லக்பிம**

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# விதயாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

* எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே தருக.
1ம் 2ம் வினாக்களில் முதல் தரப்பட்டுள்ள உருவிற்கு மிக நெருக்கமான தொடர்பைக் கொண்ட உருவைத் தெரிவு செய்க.

1) 

(1) (2) (3) (4) (5)

2) 

(1) (2) (3) (4) (5)

3) வீதி ஒன்றில் இரு கம்பங்களிடையே 5 கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. அவ்வீதியில் 15 கம்பங்கள் இருப்பின் அங்கு எத்தனை கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கும்?
1) 75 2) 70 3) 65 4) 80

4) எனது வயதின் 4 மடங்கு எனது அம்மாவின் வயது. எனது வயது 12 எனின், எனது அம்மாவின் வயது எத்தனை?
1) 48 2) 16 3) 50 4) 58

5) பச்சை, மஞ்சள், சிவப்பு, நீலம், ஊதா, வெள்ளை ஆகிய நிறக்கொடிகள் ஒழுங்கு வரிசைப்படி காணப்படுகின்றன. இதில் 64வது கொடியின் நிறம் என்ன?
1) சிவப்பு 2) பச்சை 3) ஊதா 4) நீலம்

6) 'காகம் கரைந்து உண்பது போல' எனும் மரபுத் தொடருக்குப் பொருத்தமான பழமொழி யாது?
1) ஐயம் இட்டு உண்
2) உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை
3) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
4) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

7) பிரச்சினைகள் வரும் வேளை அவற்றிற்குத் தைரியமாக முகங்கொடுத்தல் வேண்டும். இங்கு முகங்கொடுத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள் யாது?
1) உதவி செய்தல் 2) எதிர்கொள்ளல்
3) பார்த்திருத்தல் 4) ஓடிவிடல்

8) தீக்குச்சிகள் சிலவற்றைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ள ஓர்  அலங்காரம் இங்கே காட்டப்பட்டுள்ளது. இவ்வலங்காரத்திற்கு இன்னும் இரண்டு கூண்டுகள் சேர்க்கப்பட வேண்டுமெனின், தேவையான மிகக் குறைந்த தீக்குச்சிகளின் எண்ணிக்கை யாது?
1) 6 2) 5 3) 4 4) 8


9) இலக்கணப் பிழையின்றி மிகச் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1) குருவிகள் வானில் பறந்தது.
2) அம்மா சந்தைக்குச் சென்று காய்கறி கொண்டு வந்தார்
3) தம்பி மரத்திற்கு ஏறி மாங்காய் பறித்தான்

10) வாரத்தின் ஐந்து நாட்களில் கமலின் தந்தை கமலுக்குக் கொடுத்த பணத்தை அவன் செலவு செய்த முறையையும், சேமித்த முறையையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வாரம் | திங். | செவ். | புத. | வியா. | வெள். |
|---|---|---|---|---|---|
| கமல் செலவு செய்த பணம் | 20 | 17 | 14 | 11 | 08 |
| கமல் சேமித்த பணம் | 02 | 04 | 06 | 08 | 10 |

கமல் பணத்தைச் செலவு செய்த மற்றும் சேமித்த கோலத்திற்கு ஏற்ப, சனிக்கிழமை கமலின் தந்தை கமலுக்குக் கொடுத்த பணம் எவ்வளவு?
1 ரூபாய் 15.00 2) ரூபாய் 17.00 3) ரூபாய் 12.00

* கோட்டு வரிப்படத்தைப் பயன்படுத்தி 11ம் 12ம் வினாக்களுக்கு விடை தருக.









11) ஒரு பென்சிலின் விலை என்ன?
1) ரூ 6 2) ரூ 5 3) ரூ 4 4) ரூ 7

12) ஒரு பேனாவின் விலை என்ன?
1) ரூ 8 2) ரூ 11 3) ரூ 9 4) ரூ 10

* 13ம், 14ம் வினாக்களில் உள்ள பின்வரும் எண்கோலங்களை விளங்கி வெற்றிடத்திற்கு பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்க.

13) 


14) பின்வரும் 1, 2 மற்றும் 3 உருக்களில் எண்கள் ஓர் கோலத்திற்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி 4வது உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடைகளை உடைய உருவைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.




15) ஒரு சதுரமுகித் தாயக்கட்டையில் 1, 2,3,4,5,6 இலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இத் தாயக்கட்டையை ஒரு முறை சுண்டிவிடும் பொழுது இரட்டை எண் விழுவதற்கான நிகழ்தகவு யாது?
1) 4 2) 3 3) 2 4) 5

16) ஒரு தோடம்பழத்தின் நிறை 2 தேசிப்பழங்களின் நிறைக்குச் சமன், ஒரு தேசிப்பழத்தின் நிறை 2 திராட்சைப் பழங்களின் நிறைக்குச் சமன் எனின், எந்தப் பெட்டியில் கூடுதலான நிறை உள்ளது?

17) 12*m* நீளமும், 8*m* அகலமும் கொண்ட சுவருக்குப் பூச 2 லீற்றர் தீந்தை தேவை. இச்சுவரின் நீளத்தையும் அகலத்தையும் இரு மடங்காகக் கொண்ட சுவருக்கு பூச எவ்வளவு தீந்தை தேவை?
1) 6 லீற்றர் 2) 8 லீற்றர்
3) 9 லீற்றர் 4) 4 லீற்றர்

ஒரு தோட்டத்தில் ஒவ்வொரு வகையிலும் இருந்த மரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரத்தை அருகேயுள்ள உருவப்படம் காட்டுகிறது. அதன்படி,



கேட்கப்பட்டுள்ள ஒவ்வோர் வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

18) அந்தத் தோட்டத்தில் இரு வகையான மரங்கள் மாத்திரமே இருந்தன. இக்கூற்று,
1) சரியானது 2) பிழையானது 3) கூற முடியாது

19) அந்தத் தோட்டத்தில் செவ்விளநீர் மரங்களும் இருந்தன. இக்கூற்று,
1) சரியானது 2) பிழையானது 4) கூறமுடியாது

20) இவ்வுருவம் காட்டும் விடயத்தை மிகச் சரியாக விபரிக்கும் வாக்கியம் யாது?



1) கதவு அரைவாசிக்குத் திறக்கப்பட்டுள்ளது
2) ஒரு அரைவாசிக்குத் திறக்கப்பட்டுள்ளது.
3) ஒரு மனிதன் கதவைத்திறந்து கொண்டிருக்கின்றான்.


21) கோபம் சிந்தனைக்கு இடையூறு எனும் கருத்தைத் தரும் பழமொழி எது?
1) ஆழம் அறியாமல் காலை விடாதே
2) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்
3) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
4) வல்லவனுக்கு புலலும் ஆயுதம்

22) வைத்தியசாலையில் அதிகமாக இருக்க வேண்டியவர்கள்
1) நோயாளிகள் 2) தாதிகள்
3) வைத்தியர்கள் 4) காவலாளிகள்

23) மருத்துவரினால் நோயாளிக்கு வழங்கப்படும் மருந்தை குடிக்க முன்பு கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம்
1) மருந்தில் அடங்கியுள்ளவை
2) ஒருவேளை குடிக்க வேண்டிய அளவு
3) மருந்தை உற்பத்தி செய்த நாடு
4) மருந்தின் விலை

24) எமது பாடசாலையில் உள்ள அனைவரும் மிகவும் திறமைசாலிகள். மாலா மிகவும் திறமைசாலி. ஆதலால் மாலா எமது பாடசாலையைச் சேர்ந்தவள் என்ற இக்கூற்றைப் பற்றி யாது கூறலாம்?
1) உண்மை 2) சரியாகக் கூறமுடியாது
3) உண்மையன்று 4) பொய்

25) இக்கடதாசிக் கீலத்தைப் புள்ளிக் கோட்டின் வழியே மடிப்பதன் மூலம் பெறக்கூடிய உரு



1) 2) 3)

26) நிஸாமிடம் சிவப்பு நிறப்பேனாக்கள் ஐந்தும் நீல நிறப் பேனாக்கள் எட்டும் கறுப்பு நிறப் பேனாக்கள் நான்கும் இருந்தன. ஆஸிம் அவரிடமிருந்து நான்கு பேனாக்களை வாங்கிக் கொண்டார். அதன்படி, இப்போது நிஸாமிடமுள்ள சிவப்பு நிறப் பேனாக்கள் எத்தனை?
1) 6 2) 2 3) கூறமுடியாது

27) இக்கடிகார முகம் மணி முள் அமைந்துள்ள இடத்தைக் காட்டுகிறது. அதன்படி நிமிடமுள் எந்த இலக்கத்திற்கு நேராக இருக்க வேண்டும்?



1) 3 2) 9 3) 6


28) இந்த ஆணியை இறுக்குவதற்கு உகந்த உபரணம் யாது?





1) 2) 3)

★ கீழேயுள்ள வரைபடம் ஒரு குடும்பத்தின் உறவினர்களின் விபரங்களைக் காட்டுகிறது. அதன்படி இலக்கம் (29), (30), (31) ஆகிய வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள தரவில் இருந்து விடைகளைத் தெரிவு செய்க.





29) சிவாவின் பாட்டியின் பெயர் என்ன?
1) நீலா 2) கமலா 3) சித்திரா

30) ரவிக்கு உள்ள பேரப்பிள்ளைகள் எத்தனை பேர்?
1) 2 2) 4 3) 3

31) ரவியின் மனைவி பெயர் யாது?
1) கமலா 2) சித்திரா 3) நீலா

32) இலக்கக் கடிகாரம் ஒன்றில் (*DIGITAL CLOCK*) பின்வரும் முறையில் மணி, நிமிடம், செக்கன் என்பன காட்டப்பட்டுள்ளன. இன்னும் ஒரு செக்கனின் பின் கடிகாரம் காட்டும் நேரம் யாது?
1) 18.00.00 2) 17.60.00 3) 18.60.00

33) இவ்வுருவில் நிழற்றியுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்கு ஆகும்?



1) $\frac{13}{16}$ 2) $\frac{3}{4}$ 3) $\frac{7}{12}$

34) பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஓர் கோலத்திற்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

**CAT** → **TAP** → **PAL** → ☐


1) ***LOT*** 2) ***LAN*** 3) ***LES***

35) ***A*** நூல் எனின் ***B*** கயிறு ஆகும். இங்கு ***A***, ***B*** ஆகிய இரு வெற்றிடங்களிற்கும் வரவேண்டிய சொற்கள்,
1) ***A*** - பட்டம், ***B*** - பசு
2) ***A*** - புடைவை, ***B*** - கம்பி
3) ***A*** - ஊசி, ***B*** - கடை

36) பின்வரும் வசனத்தில் திருத்தமாக சொற்கள் பிரிக்கப்பட வில்லை. அதன்படி, அவ்வாக்கியத்தைச் சரியாகப் பிரித்து தரப்பட்ட புள்ளிக் கோட்டில் மீண்டும் எழுதுக.
குரு விகள்அதி காலை யில் எழுந் துஇனியகீ தம்இசைக் கின்றன.


..............................................................................................

37) நிலத்தில் வாழும் பிராணிகள், நீரில் வாழும் பிராணிகள், மீன்கள் என்பவற்றுக்கிடையேயுள்ள தொடர்பைக் காட்டப் பின்வரும் உருவரையப்பட்டுள்ளது. அதன்படி, அவ்வுருவில் நிலத்தில் வாழும் பிராணிகளைக் காட்டும் பகுதி எந்த ஆங்கில எழுத்தால் காட்டப்பட்டுள்ளது?




..............................................................................................

38) 1வது சந்தர்ப்பத்திலும் 2 வது சந்தர்ப்பத்திலும் தராசுகள் சமநிலையாக இருக்கின்றன. அதன்படி 3வது சந்தர்ப்பத்தில் ***X*** இன் நிறை யாது?




1) 18***kg*** 2) 9***kg*** 3) 12***kg***

39) ஒரு பிள்ளை வாரத்தில் ஆறு நாட்கள் செலவிட்ட தொகை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| திங். | செவ். | புத. | வியா. | வெள். | சனி | ஞாயி. |
|---|---|---|---|---|---|---|
| ரூ. 23 | ரூ.33 | ரூ.28 | ரூ.38 | ரூ.33 | ரூ.43 | |

அதன்படி அந்தப்பிள்ளை ஞாயிற்றுக்கிழமை செலவழிக்கக் கூடிய தொகை எவ்வளவாக இருக்கலாம்?
1) ரூபா 38 2) ரூபா 33 3) ரூபா 48

40) அன்னாசிப்பழம் ஒன்றின் நிறை அப்பிள் பழம் ஒன்றின் நிறை போல் நான்கு மடங்காகும். பப்பாசிப் பழத்தின் நிறை அன்னாசிப் பழத்தின் நிறையின் 1/2 பங்கு ஆகும். அதன்படி, பப்பாசிப் பழத்தின் நிறை அப்பிள் பழத்தின் நிறைபோல எத்தனை மடங்காகும்?
1) 2 மடங்கு 2) 3 மடங்கு 3) 4 மடங்கு

* எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே தருக.

- பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளில் பெருமளவு வில்வம் வளரும். நாங்கள் வில்வம் மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, காய் என்பவற்றையெல்லாம் பயன்படுத்துகிறோம். வில்வம் வேர் இதய நோய்களைக் குணப்படுத்தும். சிறு பிள்ளைகளின் வயிற்றோட்டம், மலேரியா, தலையிடி போன்ற பல்வேறு நோய் நொடிகளுக்கு வில்வம் ஓர் அரிய மருந்தாகும். விசேடமாக வில்வம் இலை நீரிழிவு நோயைக் குணப்படுத்தும். ஆயுர்வேத வைத்தியர்கள் ஔடதபானம் தயாரித்துக் கொள்வதற்கு வில்வம் பூ, வில்வம் வித்து என்பனவற்றைப் பெருமளவு உபயோகிப்பர். புராதன கால மனிதர்கள் நோய்களைக் குணப்படுத்த வில்வம் மரத்தின் பல்வேறு பகுதிகளைப் பயன்படுத்தினர்.

01) பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழிச் சொல் ஒன்று தருக.
..........................................................

02) பந்தியில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழி ஒன்று தருக.
..........................................................

03) பந்தியில் இடம்பெற்ற உயர்திணைத் தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்று தருக. ..........................................

04) பந்தியில் இடம்பெற்ற உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று தருக. ..........................................

05) பந்தியில் இடம் உயர்திணைப் படர்க்கைப் பன்மை இறந்தகால வினைமுற்று ஒன்று தருக. ..........................................

06) சீனித் தன்மை கூடிய உணவுப் பொருட்கள் அதிகம் உட் கொள்வதனால் ஏற்படக்கூடிய ஓர் நோய் மேலே பந்தியில் இடம் பெற்றுள்ளது. அந்நோய் யாது? ..........................................

07) பந்தியில் இடம்பெற்ற நோய்களுள் அசுத்த உணவு, நீர் என்பனவற்றின் மூலம் பரவும் ஓர் நோயை எழுதுக.
..........................................................

08) மேலே பந்தியில் இடம் பெற்ற நாடுகளுள் இலங்கைக்கு மிக அண்மையில் அமைந்துள்ள நாடு எது?
..........................................................

09) பின்வரும் சொற்களை ஒருமைச் சொற்களாக எழுதுக.
1) பகுதிகள். ..........................................
2) பிள்ளைகள். ..........................................

* பின்வரும் கூண்டினுள் உள்ள சொற்களை மாத்திரம் பயன்படுத்தி பிழையில்லாத கருத்துள்ள மூன்று வாக்கியங்களைக் கீழேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. (ஒவ்வோர் வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது நான்கு சொற்களாவது இருத்தல் வேண்டும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேகமாக | உறையொன்று | ஆசிரியர் | கடைக்குச் | மரத்தில் | மோதியது |
| அண்ணா | வகுப்புக்கு | பட்டம் | கத்திக் கொண்டு | குருவி | மாணவர்கள் |
| எழுந்தனர் | பறக்கும் | அம்மா | வந்த | எடுத்துக் கொண்டு | விட்டனர். |
| சென்றார் | வாகனம் | வானத்தில் | மேல் | வரும் போது | |

10) ..........................................................
11) ..........................................................
12) ..........................................................

13) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
1) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து..........................................
2) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்..........................................

14) அடைப்புக்குள் உள்ள எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துங்கள்
(ல, ண, ன, ழ, ள)
1) பவ.....ம் 2) விமா......ம்
3) சார.........ர் 4) நூ......கம்
5) வ......க்கு 6) மாது......ம்பழம்

15) பின்வரும் கருத்துக்களுக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
1) சிறைத்தண்டனை பெற்றவன் ..........................................
2) அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம்..........................................

16) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
1) நின்றனர் / எல்லோரும் / வாகனத்தைப் / கொண்டு / பார்த்து
..........................................................
..........................................................

17) பின்வரும் வினாக்களில் ஒவ்வோர் வெற்றிடத்திற்கும் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.
.......................................... (ஒளியை, ஒலியை) விட வேகமாக ...................(ஒளி, ஒலி) பயணம் செய்யும்.

18) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் (தமிழ் எழுத்துக்களில்) எழுதுக.
1) அபி வடே கமு ..........................................
2) மே ம (G) கே ஒழுவ ..........................................

19) பொருத்தமான சிங்களச் சொல்லைத் தமிழில் (தமிழ் எழுத்துக்களில்) எழுதுக.
1) எழுதுங்கள் ......................... 2) வாசியுங்கள்.........................

20) பின்வரும் தொடர்களின் கருத்தினைத் தமிழில் (தமிழ் எழுத்துக்களில்) எழுதுக.
1) **Hurry up pleas** ..........................................
2) **Listen to me please** ..........................................

21) பின்வரும் ஒவ்வோர் உருவும் காட்டும் விளையாட்டு யாது என்பதை அருகிலுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.




...................... ...................... ......................

22) பின்வரும் ஒவ்வோர் உருவிலும் காட்டப்படும் நோய் ஏற்படுவதற்குரிய காரணத்தைக் கூண்டில் இருந்து தெரிந்து உருவின் கீழ் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

யானைக்கால் நோய்க்குரிய நுளம்பு கடிப்பதனால், போலியோ தடுப்பூசி வழங்கப்படாமை, சத்துள்ள உணவுப் பொருட்கள் உட்கொள்ளப்படாமை, அயடின் கலந்த உப்பை உணவாக உட்கொள்ளாமை.



23) இலங்கையின் பாரம்பரிய விளையாட்டுக்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுங்கள்



24) பின்வரும் பறவைகளின் பாதங்களைக் கண்டுபிடித்து அவற்றின் பெயர்களை எழுதுங்கள்.




- மயில்
- காகம்
- கொக்கு
- வாத்து
- கழுகு

25) பின்வரும் இலட்சினைகளில் சர்வதே சாரணிய இலட்சினை எது?




26) அருகில் காணப்படும் குறியீடு பொறிக்கப்பட்டிருக்கும் பொதி எது?




1) பிஸ்கற் 2) அயடீன் உப்புப்பொதி
3) மருந்துப் போத்தல் 4) சலவைத்தூள்

27) ஈரலிப்பான இடத்தில் வைக்கக்கூடாது என்பதை அறிவுறுத்த, பொதிகளில் பொறிக்கப்பட்டிருக்கும் சர்வதேச குறியீடு எது?



28) அருகில் தரப்பட்டுள்ள உடுத்தொகுதியின் பெயர் என்ன?



1) கலப்பை 2) சிம்மம்
3) பெருங்கரடி 4) பெருநாய்

29) வானொலிப் பெட்டியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
1) ஜோன் லொகீ பெயாட் 2) பெட்ரிக் மெக்மிலன்
3) குக்லிமோ மார்க்கோனி 4) ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

30) இரத்தினக்கல் உற்பத்தியில் பிரசித்தி பெற்ற நகரம் எது?
1) புத்தளம் 2) அநுராதபுரம்
3) அம்பாந்தோட்டை 4) இரத்தினபுரி

31) தாவரம் ஒன்றை நடுவதற்கு உகந்த தன்மை அல்லாதது.
1) வளமான மண்ணாக இருத்தல்
2) காற்றோட்டமுள்ள மண்ணாக இருத்தல்
3) கற்கள் கூடிய மண்ணாக இருத்தல்
4) நன்றாகச் சூரியஒளி படக்கூடிய இடமாக இருத்தல்

32) பொருள் ஒன்று கொண்டு வரப்பட்ட பெட்டியின் மேற்பக்கத்தில் இத்தகைய ஓர் சின்னம் தென்பட்டது. அதன்படி இதன் மூலம் கருதப்படுவது யாது?



1) இருண்ட அறையில் வைக்கவும்
2) பகல் வேளையில் பயன்படுத்த வேண்டாம்
3) சூரிய ஒளிபடும் இடங்களில் வைக்க வேண்டாம்
4) இரவு வேளையில் மாத்திரம் பயன்படுத்துக

33) மேலே குறிப்பிடப்பட்ட அதே பொருள் கொண்டு வரப்பட்ட பெட்டியில் இத்தகைய ஒரு சின்னமும் காணப்பட்டது. இதன் மூலம் கருதப்படுவது யாது?



1) குடை ஒன்றின் கீழே வைக்கவும்
2) நீர் ஒழுகும் இடங்களில் வைக்க வேண்டாம்
3) வெப்பம் கூடிய இடங்களில் வைக்க வேண்டாம்
4) கொண்டு செல்லும் போது குடை பிடித்துக் கொண்டு செல்க.

34) நுளம்புகளை விரட்டப் புகைபோடுவதற்குப் பயன்படுத்தப்படும் தாவரம் யாது?
1) துளசி 2) தொட்டாற் சுருங்கி
3) குப்பைமேனி 4) கற்றாளை

35) இத்தகைய மூங்கில் மூலம் தயாரிக்கப்பட்ட துடுப்பு எந்த விளையாட்டுக்காகப் பயன்படுத்தப்படுகிறது?



1) ஹொக்கி 2) எல்லே
3) கிரிக்கெட் 4) பட்மின்டன்

36) கண், காது, ஆகிய இரண்டையும் பயன்படுத்திக் கொண்டு இரசிக்கத்தக்க ஊடகம் யாது?
1) தொலைக்காட்சி 2) வானொலி
3) பத்திரிகை 4) தொலைபேசி


37) உலர்வலயத்தில் செழித்து வளரும் ஓர் தாவரம்
1) தென்னை 2) தேயிலை
3) நாகதாளி 4) அந்தூரியம்

38) கூட்டமாகச் சேர்ந்து தொழிற்படாத ஓர் பிராணி
1) தேனீ 2) கறையான்
3) எறும்பு 4) நுளம்பு

39) ஈரப்பலா இனம் பெருகுவது
1) வேரினால் 2) வித்தினால்
3) தண்டினால் 4) பூவினால்

40) மின்காந்தத்தில் மின்கடத்தும் போது காந்தமாக மாற்றப்படுவது
1) செப்புக்கம்பி 2) உலர்மின்கலம்
3) இரும்பு ஆணி 4) இரும்புத்தூள்

பின்வரும் உருக்களின்படி கீழேயுள்ள ஒவ்வோர் வினாவுக்கும் பொருத்தமான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு

41) இந்து சமய வழிபாட்டில் ஈடுபடச் செல்லவேண்டிய திசை யாது?
42) இஸ்லாம் சமய வழிபாட்டில் ஈடுபடச் செல்லவேண்டிய திசை யாது?
43) கிறிஸ்தவ சமய வழிபாட்டில் ஈடுபடச் செல்லவேண்டிய திசை யாது?
44) பௌத்த சமய வழிபாட்டில் ஈடுபடச் செல்லவேண்டிய திசை யாது?

45) கீழுள்ள விலைப்பட்டியலை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1. 750g சீனியையும் 100g தேயிலையையும் வாங்க எவ்வளவு பணம் தேவை?
2. சுமதி ரூபா 800 ஐக் கொண்டு சென்று 100g சீனி, பருப்பு 250g, தேயிலை 450g, கருவாடு 250g என்பன வாங்கினாள் எனில் மீதிப்பணம் எவ்வளவு?

| | |
|---|---|
| 1kg சீனி | 65.00 |
| 1kg பருப்பு | 79.00 |
| 1kg தேயிலை | 480.00 |
| 1kg கருவாடு | 185 .00 |

46) பின்வரும் ஒவ்வோர் வினாவுக்கும் உரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
1. 2, 6, 18, 54 .......... இவ்வெண் கோலத்தில் வெற்றுக் கூண்டுக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
2. இவ்வுருவில் காணப்படும் செங்கோணத்தை விடச் சிறிய கோணங்கள் எத்தனையுள்ளன?
3. A எனும் கம்பியின் நீளம் 65 சென்ரிமீற்றர் ஆகும். B எனும் கம்பியின் நீளம் 8.7 சென்ரிமீற்றர் ஆகும். அதன்படி இரண்டு கம்பிகளினதும் மொத்த நீளம் யாது?
4. தந்தை தனது காணியின் 1/2 பங்கை மகனுக்கும் 3/10 பங்கை மகளுக்கும் கொடுத்தார். அதன்படி, தந்தை தனது இரு பிள்ளைகளுக்கும் கொடுத்த காணியின் அளவானது முழுக்காணியின் என்ன பங்காகும்?
5. பின்வரும் சாதாரண பின்னங்களைத் தசம பின்னமாகத் தருக.

1) $7\frac{5}{10}$ = ............... 2) $3\frac{65}{100}$ = ...............

6. ஒரு பக்க நீளம் 3 சென்ரிமீற்றர் உடைய நான்கு சிறிய சதுர வடிவங்களால் இவ்வுரு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வுருவின் சுற்றளவு யாது?
7. ஒருவருக்கு 8 புத்தகங்கள் வீதம், 228 புத்தகங்களை எத்தனை பேருக்குப் பகிர்ந்தளிக்கலாம்? அதன்படி, எஞ்சும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?
8. A நகரத்தில் இருந்து C நகரத்திற்கு உள்ள தூரமானது A நகரத்திலிருந்து B நகரத்திற்கு உள்ள தூரத்தின் மூன்று மடங்காகும். A நகரத்தில் இருந்து C நகரத்திற்கு உள்ள தூரமானது 25kg 200m எனின், A நகரத்தில் இருந்து B நகரத்திற்கு உள்ள தூரம் யாது?
9. இக்கனவுருவின் விளிம்புகளின் மொத்த நீளம் யாது?
10. இத்தராசு சம நிறையுடையது அதன்படி, தராசின் A,B எனும் பக்கங்களில் உள்ள பொருட்களின் மொத்த நிறை யாது?
11. பென்சில் ஒன்றின் விலை ரூபா 5.75 ஆகும். புத்தகம் ஒன்றின் விலை ரூபாய் 15.50 ஆகும். பென்சில் ஒன்றும் புத்தகம் ஒன்றும் வாங்கிக் கொண்டு வியாபாரிக்கு ரூபா 50.00 காசுத்தாள் ஒன்றைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

* ஒரு புத்தகக் கடையில் வாரத்தில் மூன்று நாட்கள் ஒவ்வோர் வகையிலும் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையை அட்டவணை காட்டுகிறது. அதன்படி கீழேயுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.

| நாட்கள் | கணிதம் | விஞ்ஞானம் | ஆங்கிலம் | தமிழ்மொழி |
|---|---|---|---|---|
| திங்கள் | 15 | 10 | 27 | 15 |
| செவ்வாய் | 18 | 06 | 18 | 14 |
| புதன் | 24 | 13 | 36 | 18 |

12. செவ்வாய்க்கிழமை விற்பனை செய்யப்பட்ட மொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?
13. மூன்று நாட்களிலும் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?
14. மிகக் கூடிய புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?
15. எவ்வகையான புத்தகங்கள் மிகக்குறைவாக விற்பனை செய்யப்பட்டுள்ளன?

47) அது ஓர் அடர்ந்த காடு. அங்கே கொடிய மிருகங்கள் வாழ்ந்தன. தனுஷ் நண்பர்களோடு சுற்றுலா சென்றான். அவன் தவறுதலாக அக்காட்டிற்குள் சென்றான். இதனைத் தொடர்ந்து 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது 4 சொற்களாவது இருப்பதுடன் அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை திருத்தமாக அமைந்திருத்தல் வேண்டும்.

1. ..............................................................................................
2. ..............................................................................................
3. ..............................................................................................
4. ..............................................................................................
5. ..............................................................................................
6. ..............................................................................................

உடல் நலம்...,
குழந்தை வளர்ப்பு...,
சாதனை மகளிர்...,
ஆடுலாசனை...,
உளவியல்...,



# குழந்தைகளின் ஞாபகசக்தி அதிகரிக்க வேண்டுமா?

இன்றைய தலைமுறையினர் தங்களின் குழந்தைகள் ஞானக் குழந்தைகளாக மாற வேண்டும் என்று நினைக்கின்றனர். இதனால் பிறந்து ஒருவருடம் முடிந்தவுடனேயே குழந்தைகளுக்கு பல்வேறு பயிற்சிகளைக் கற்றுக் கொடுக்கின்றனர். ஓடி விளையாட வேண்டிய வயதில் பயிற்சி என்ற பெயரில் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தைக் கொடுக்கும் நிகழ்வுகளைத்தான் தற்போது செய்கின்றனர் பெற்றோர்கள்.

குழந்தைகளுக்கு விளையாட்டு என்பது தற்போது இல்லாமலேயே போய்விட்டது. வீடியோகேம், கம்பியூட்டர் கேம் போன்றவைதான் விளையாட்டு.

ஆனால், இவை உடலுக்கு பயிற்சிக் கொடுப்பது இல்லை. ஆடி, ஓடி விளையாடினால்தான் உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சி உண்டாகும். குழந்தைகளின் உடல் வளர்ச்சி சீராக இருக்கும். இன்றைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பெரும்பாலும் விளையாட அனுமதிப்பதில்லை. பள்ளியில் முதல் மார்க் வாங்கவேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு குழந்தைகளுக்கு அதிகம் பாடச் சுமைகளைக் கொடுக்கிறார்கள்.

இத்தகைய காரணங்களால் குழந்தைகள் அதிக மன அழுத்தத்திற்கு ஆளாகி உடல் சோர்ந்து மனமும் சோர்ந்து காணப்படுவார்கள். இந்நிலையில் குழந்தைகளுக்கு ஞாபக மறதி உண்டாகிறது. இத்தகைய மறதிக்கு உளவியல் காரணத்தோடு இரும்புச்சத்து பற்றாக்குறையும் ஒரு காரணம் என்று கண்டுபிடித்துள்ளனர். குழந்தைகளுக்கு ஏற்படும் இக்குறையைப் போக்க ஒரு எளிய மருத்துவம்...

இதற்கு
வல்லாரைக்கீரை - 1 கைப்பிடி
ஆரைக்கீரை - 1 கைப்பிடி
மணத்தக்காளிக் கீரை - 1 கைப்பிடி
சீரகம் - 1 ஸ்பூன்
சோம்பு - 1 ஸ்பூன்
மிளகு - 5
சின்ன வெங்காயம் - 5
பூண்டுப்பல் - 2

இவற்றை எடுத்து சூப் செய்து காலை, மாலை என இருவேளைகளிலும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் ஞாபகமறதி நீங்கும். இரத்தத்தில் இரும்புச்சத்து அதிகரித்து உடல் சோர்வு நீங்கும்.

மேலும், வல்லாரை இலையைக் காயவைத்து பொடியாக்கி தினமும் 1 ஸ்பூன் அளவு எடுத்து தேனில் குழைத்து காலையில் கொடுத்துவந்தாலும் ஞாபகசக்தி அதிகரிக்கும். நரம்புகள் பலப்படும். இதனால் குழந்தைகள் ஆடி, ஓடி விளையாட முடியும். அசதி பறந்தோடிவிடும்.

## சமையல் டிப்ஸ்

★ தேயிலைத்தூள் வைத்திருக்கும் போத்தலில் உபயோகித்த ஏலக்காய் தோல்களைப் போட்டு வைத்திருந்தால் தேநீர் ஏலக்காய் மணத்தோடு சுவையாக இருக்கும்.

★ தேங்காய் சட்னி அதிக சுவையாக இருக்க நாம் அரைக்கும் சட்னியில் பாதித் தேங்காயையும், பாதி கொத்தமல்லியையும் சேர்த்து அரைத்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

★ தோசைக்கு ஊற வைக்கும்போது 1 கிலோவிற்கு 50 கிராம் வேர்க்கடலை, 50 கிராம் கடலைப்பருப்பு சேர்த்து ஊற வைத்து அரைத்து மாவுடன் கலந்து தோசை வார்த்தால் நிறமான, சுவை அதிகமான, சத்து நிறைந்த தோசை ரெடி.

★ சமைத்த சோறு மிஞ்சிப் போய்விட்டால், அதைப் போல் இரண்டு பங்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் பழைய சோற்றைக் கொட்டி, ஒரு கொதி வந்ததும் இறக்கி வடித்து விடவும். பின்னர் மறுபடியும் 5 நிமிடம் வடித்த சோற்றை அடுப்பில் வைத்து இறக்கினால் நீர்ப்பசை அகன்று புதிதாகச் சமைத்ததைப் போல் இருக்கும்.

★ காலிஃபிளவரை சமைக்கும் முன் அவற்றைக் கொஞ்சம் கொதிக்க வைத்த உப்பு நீரில் சிறிது நேரத்திற்கு முக்கி எடுக்கவும். அதனால் அந்த பூக்களுக்குள் உள்ள கண்ணுக்குத் தெரியாத சிறு பூச்சிகள் விலகிவிடும்.

★ பருப்பை சமைக்கும் போது, ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூளையும், ஒரு தேக்கரண்டி நெய்யையும் அதற்குள் சேர்த்து விடுங்கள். அதிலிருந்து வரும் மணத்திற்கே, அனைவரும் ஒரு பிடி பிடித்துவிடுவார்கள்.

★ தேங்காயை சரிபாதியாக உடைக்க தண்ணீரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.

★ வெங்காயம் வதக்கும்போது சிறிதளவு சர்க்கரை சேர்த்தால் எளிதில் வதங்கி விடும்.



## மரவள்ளி தோசை

தேவையானவை: புழுங்கலரிசி - 1 கப், மரவள்ளிக் கிழங்கு - சிறியதாக 1, காய்ந்த மிளகாய் - 5, சீரகம் - 1 ஸ்பூன், பெருங்காயம் - சிறிதளவு, உப்பு - தேவைக்கேற்ப, எண்ணெய் - தேவையான அளவு.

செய்முறை: மரவள்ளிக்கிழங்கை சிறு துண்டுகளாக நறுக்கி 3 முறை பால் போக நன்கு கழுவிக் கொள்ளவும். புழுங்கலரிசியை கழுவி 2 மணி நேரம் ஊற வைக்கவும். மிளகாய், உப்பு, பெருங்காயம், சீரகம் ஆகியவற்றை அரைத்து அத்தோடு கிழங்கையும் சேர்த்து அரைக்கவும். பின்னர் ஊறிய அரிசியையும் சேர்த்து நன்றாக அரைக்கவும். அரைத்த மாவை தோசை [illegible] மெல்லிய தோசைகளாக ஊற்றி வெந்ததும் திருப்பி விட்டு எண்ணெய்விட்டு சிவக்க வெந்ததும் எடுக்கவும். எல்லோரும் சாப்பிட ஏற்ற ஆரோக்கிய தோசை இது.

## அழகோ அழகு அவள் பேரழகு!

உப்பு கலக்காத காய்ந்த வேப்பம்பூ 50 கிராம் எடுத்து அதை 100 கிராம் தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். இது இளம் சூடு பதத்திற்கு ஆறியதும் வேப்பம் பூவுடன் சேர்த்து எண்ணெயைத் தலையில் நன்றாகத் தேய்த்து அரை மணிநேரம் ஊற வைத்துக் குளித்தால் பொடுகு பிரச்சினை தீரும்.

★★★

அதிகம் பொடுகு உள்ளவர்கள் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ தொடர்ந்து மூன்று வாரங்கள் குளித்தால் பொடுகு சுத்தமாக நீங்கிவிடும்.

★★★

இடுப்பில் இறுக்கமாக ஆடை அணிவதால் இடுப்பைச் சுற்றி கறுப்புத் தழும்பு ஏற்பட்டு விடும். இதைப் போக்க காய்ப்பு தழும்பு ஏற்பட்ட இடத்தில் தேங்காய் எண்ணெயைத் தடவி லேசாக மசாஜ் செய்ய வேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால் தழும்பு மறைந்து விடும்.

★★★

கை விரல் நகங்கள் இளம் சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டும். இதில் வெள்ளை நிறம் ரத்த சோகையையும் மஞ்சள் காமாலையையும் குறிக்கும். விரல் நகங்களுக்கு நடுவில் சொத்தை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி அதற்கான காரணத்தை அறிவது நல்லது.



# பாடல்




விதை போல மறைவாக
வாழ்ந்தவன் இன்று தான்
மத யானை போல் வருகிறான்
அடையாளம் தெரியாத உடையோடு திரிந்தவன்
படையோடு நடை பயில்கிறான்

இமை பொழுதும் உறங்காத காவலன்
இவன் சுமை கண்டு மிரளாத சேவகன்
கொள்கையில் மாறாத கோமகன்
இவன் திசை எங்கும் காத்திடும் திருமகன்

இடி வந்து விழுந்தாலும் இடியாதவன்
இடர் என்ன வந்தாலும் இடறாதவன்
பதறாமல் சிதறாமல் அதிராமல் உதிராமல்
இருக்கின்ற வரம் பெற்றவன்

பகை என்ன வந்தாலும் பதறாதவன்
பதவிகள் தடுத்தாலும் பணியாதவன்
ஊர் கூடி எதிர்த்தாலும் மிரளாதவன்
ஒற்றையாய் பல பேரை வதம் செய்தவன்

எதிரிகள் எவர் என்று எண்ணாதவன்
தோல்வியின் விளிம்பிலும் துவளாதவன்
விலை என்ன தந்தாலும் வளையாதவன்
எளிமைக்கு இவன் என்றும் துணையானவன்

மலையாக நின்று மற்போரில் வென்று
அடுத்த தளம் எதுவென்று
அஞ்சாமல் களமாடுவான்
(விதை போல...)

தனியாக இருந்தாலும் படை தான் இவன்
தரணியை பிளக்கின்ற எடை தான் இவன்
புலன் ஐந்தும் தெளிவாக இருக்கின்றவன்
புறம் நான்கும் எளிதாக வளைக்கின்றவன்

உடையாத தடைகளை உடைக்கின்றவன்
உண்மையாய் சாதனை படைக்கின்றவன்
எரிமலை குளம்பாக கொதிக்கின்றவன்
குறி வைத்து சமரிலே ஜெயிக்கின்றவன்

மின்னல் என சீறி அமில மழை தூவி
அழுக்கின்றி தேசத்தை அழகாக துடைக்கின்றவன்
(விதை போல...)



## மைக் பிடிக்கும் ஹீரோக்கள்

கோலிவுட்டின் லேட்டஸ்ட் டிரண்ட் என்ன தெரியுமா? எல்லா ஹீரோக்களுக்கும் மைக் பிடித்து பாட ஆசை வந்திருப்பதுதான். தனுஷ் பாடிய கொலவெறி அடைந்த ரீச்தான் நடிகர்களை இந்த மைக் வெறிக்கு ஆளாக்கி இருக்கி தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா காலத்திலிருந்தே நடிகர்கள் பாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் பாடும் திறன்பெற்றிருந்ததாலேயே ஹீரோவானவர்கள். கமல் தன்னை ஒரு பாடகராகவும் நிரூபித்தவர்.

ஆனால், இப்போது அப்படியில்லை. பாடும் திறமையோ குரல்வளமோ இல்லாமல் அவர் பாடுகிறாரே நான் பாடக்கூடாதா? என்ற ஈகோவில் மைக் பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சிம்பு அடிக்கடி பாடுவதாலேயே தனுஷ் மைக் பிடித்தார். இதற்கு முன்பு அவர் பல பாடல்களை பாடி இருந்தாலும் கொலவெறிதான் அமெரிக்க பிரசிடெண்ட் காது வரைக்கும் ரீச் ஆனது. விக்ரம் கந்தசாமி, தெய்வத்திருமகள் உள்ளிட்ட சில படங்களில் பாடியிருக்கிறார். விஜய் அவ்வப்போது பாடி அதை ஹிட்டாக்கி விட்டு ஒதுங்குவார். பிறகு திடீரென்று பாட ஆரம்பிப்பார். இப்போது தனது ஒவ்வொரு படத்திலும் பாட ஆரம்பித்திருக்கிறார். விஜய் பாடும்போது அவரது சித்தி மகன் விக்ராந்த் பாடக்கூடாதா? அவரும் தற்போது நடித்து வரும் பிறவி என்ற படத்தில் ஒரு பாடலைப் பாடுகிறார். ஆளாளுக்கு மைக் பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். விமல் சென்னையில் ஒரு நாள் என்ற படத்தில் பாட ஆரம்பித்தார். அதன்பிறகு கலகலப்பு படம் என்று தொடர்ச்சியாக தனது சங்கீத பணியைத் தொடங்கிவிட்டார். போட்டியாளர் விமலே பாடும்போது சிவகார்த்திகேயன் சும்மா இருப்பாரா? நாலு படமே நடித்திருக்கும் நிலையில் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தில் பாடிவிட்டார். பிரசன்னா, கல்யாண சமையல் சாதம் படத்தில் பாடி ஆசையை தீர்த்துக் கொண்டார். பவர்ஸ்டார் சீனிவாசன்கூட சுட்ட பழமும் சுடாத பழமும் என்ற படத்தில் பாடிவிட்டார். தம்பி ராமையாக உ என்ற படத்தில் ஒரு பாட்டைப் பாடி இசைக்கு தன்னை அர்ப்பணித்து விட்டார். ஹீரோயின்களைப் பொறுத்தவரை ஆண்ட்ரியா, ஸ்ருதி, வசுந்தரா தாஸ் ஆகியோர் புரபஷனல் சிங்கர்ஸ். இவர்கள் தவிர மலையாள நடிகைகள் காவ்யா மாதவன், மம்தா அடிக்கடி பாடுவார்கள். இப்போது அந்த லிஸ்டில் நித்யா மேனனும் சேர்ந்திருக்கிறார்.

## உண்மைக் கதைகளில் விஜயசேதுபதி!



பீட்சா, நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம் மற்றும் சூது கவ்வும் போன்ற படங்களில் நடித்து, ஹிட் கொடுத்தவர் விஜயசேதுபதி. தற்போது, அவரது கவனம், உண்மைச் சம்பவங்களை படமாக்குவதில் திரும்பியுள்ளது. அதனால், தமிழகத்தின் கிராமப்புறங்களில் நடைபெற்ற சில கதைகளை சேகரித்துள்ள விஜயசேதுபதி, சங்கு தேவன் என்ற படத்திற்காக திண்டுக்கல் பகுதியில் நடந்த உண்மைக் கதையை தேர்வு செய்து, நடித்து வருகிறார். அத்தோடு, இப்படத்தை முதன் முறையாக தயாரிக்கிறார் விஜயசேதுபதி.



## பாலா பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடிக்கமாட்டேன். நடிகை பூஜா

நான் கடவுள் படத்திற்குப்பின், நான்கு ஆண்டுகளாக எந்தவொரு சினிமாவிலும் நடிக்காமல் இருந்த பூஜா தற்போது விடியும் முன் என்ற படத்தில் நடித்து வருகிறார்.

சமீபத்தில் இந்தப் படத்தின் ஓடியோ வெளியீடு நடந்தது. இதில் பூஜா கலந்து கொண்டார். அப்போது அவர் அளித்த பேட்டியில்,

நான் கடவுள் படத்திற்குப் பிறகு பூஜா எந்த மாதிரியான கதாபாத்திரம் பண்ணப் போகிறார். இனிமேல், பூஜா நான் கடவுளைவிட நல்ல கதையம்சம் உள்ள படத்தில் நடித்தால்தான் நன்றாக இருக்கும் என்று அனைவரும் கூறினர்.

ஏனோதானோவென்று கதையை தெரிவு செய்து நடித்தால், எனக்கு நான் கடவுள் படத்தில் வாய்ப்புத் தந்த பாலா திட்டி தீர்த்துவிடுவார். எனவே, அவருக்கு களங்கம் ஏற்படாதவாறு நல்ல கதையம்சம் உள்ள படங்களை தேர்ந்தெடுக்க நேரம் ஒதுக்கினேன்.

இந்நிலையில், என்னுடைய பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இலங்கைக்கு செல்லவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானேன். பாட்டியின் கடைசி காலங்களில் அவருடன் இருந்ததை பாக்கியமாக கருதுகிறேன்.

தற்போது விடியும் முன் என்ற படத்தில் நடித்து வருகிறேன். இதுவரை கைநழுவிப் போன படங்களையெல்லாம் பிடிக்க இப்படம் ரொம்பவும் உதவும் என நம்புகிறேன் என்றார்.



## தரமான படங்கள் வேண்டும் நயன்தா

## சினி

இரண்டாவது ரவுண்டி மட்டுமே ஜோடி சேர வேண் இருக்கும் நயன்தாரா, ஏற்கன படங்கள் கொடுத்த டைரக்ட கேட்டு வருகிறார். அப்போ ஞாபகத்தில், மீண்டும் என்ன சித்திரித்து விடாதீர்கள். இப் நடிகை'' என்று சொல்லி விடு நயன்தாராவை ஐயா படத்தில் தமி டைரக்டர் ஹரி மட்டும், மீண்டும் வைக்க, உத்தரவாதம் கொடுத்துள்

...சி இருக்கிறது.

## ஹொலிவுட் படத்தில் மாதவன்!



மணிரத்னத்தின், அலைபாயுதே படத்தில் அறிமுகமானவர் மாதவன். அதன்பின், தமிழில் பெரிய ரவுண்டு வந்தவர். பின் பொலிவுட் சினிமாவுக்கு சென்று, த்ரி இடியட்ஸ் உட்பட சில இந்திப் படங்களில் நடித்து பிரபலமானார். இந்நிலையில், தற்போது 'நைட் ஒப் தி லிவிங்டெத்' என்றொரு ஹொலிவுட் படத்திலும் நடிக்கிறார். இதில், நான்கு ஹீரோக்களில் ஒருவராக நடிக்கும் மாதவன், தன் உடல் எடையை குறைத்து, ஹொலிவுட் நடிகர்களுக்கு இணையாக, தன் உடல் மொழியையும் மாற்றியுள்ளார்.

## தொப்பை வைத்த ஜெயம் ரவி!



இரண்டு ஆண்டுகளாக நடித்த, ஆதிபகவன் படம் ஏமாற்றி விட்டதால், இப்போது சமுத்திரகனியின் இயக்கத்தில் டபுள் ரோலில் நடித்து வரும் ஜெயம் ரவி, நிமிர்ந்து நில் படத்தை அதிகமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இதில், 25 வயது வேடத்தை விட, தொப்பை வைத்து 50 வயது கொண்டவராக நடிக்கும் கேரக்டரில், கூடுதல் ரிஸ்க் எடுத்து நடித்திருப்பதாக சொல்லும் ஜெயம் ரவி, இந்த வேடத்துக்காக ஒரு பிரபல இந்தி நடிகரை, ரோல் மொடலாகக் கொண்டு நடித்துள்ளார். அந்த நடிகர் யார் என்பதை, அப்படம் ரிலீசான பின் கூறுவதாக தெரிவித்துள்ளார்.







## 22 வயதில் 23 குழந்தைகளுக்கு தாய் ஹன்சிகா

வெறும் அழகு பொம்மை, நடிக்கத் தெரியவில்லை. நன்றாக வளரும் நேரத்தில் காதல் என்று ஹன்சிகா மீது ஆயிரத்தெட்டு விமர்சனங்கள் இருந்துவிட்டு போகட்டும். அவர் நல்ல மனுஷி. இந்த இளம் வயதிலேயே மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்கிற நோக்கம். 22 வயதில் 23 அநாதைக் குழந்தைகளை தத்தெடுத்து பராமரிப்பது, பத்து புற்று நோயாளிகளின் சிகிச்சை செலவை ஏற்றிருப்பது என்று ஹன்சிகாவின் இன்னொரு முகம் ஆச்சரியமானது.

கடந்த 9 ஆம் திகதி ஹன்சிகாவின் பிறந்த நாள் என்பதால் அவரைப் பற்றி ஒரு சின்ன பிளாஷ் பேக்...

பிறந்தது, வளர்ந்தது, படித்தது மும்பை. அப்பா ப்ரதீப் மோத்வானி பிசினஸ்மேன். அம்மா மோகனா டாக்டர். குழந்தை நட்சத்திரமாக இந்திப் படத்தில் நடிக்கத் தொடங்கினார். உரிய வயதை எட்டியதும் இந்தி தொலைக்காட்சித் தொடர்களில் நடித்தார். தேசமுருடு என்ற தெலுங்கு படத்தில் ஹீரோயினாக அறிமுகம். ஹன்சிகாவின் அழகு அக்கட தேசத்து மக்களை அசைத்துப்போட தொடர்ந்து தெலுங்கு ஹிட் கிடைத்தது. மாப்பிள்ளை மூலம் கோலிவுட் வருகை நிகழ்ந்தது.



எங்கேயும் காதல், வேலாயுதம், ஓகே ஓகே, சேட்டை, தீயா வேலை செய்யணும் குமாரு, சிங்கம்-2 போன்ற படங்களில் நடித்தார். தற்போது தமிழில் மான்கராத்தே, பிரியாணி, வாலு, வேட்டை மன்னன், ராஜ்குமார் இயக்கும் இஷாக் ரீமேக், ஆகிய படங்களிலும் தெலுங்கில் இரண்டு படங்களிலும் நடித்து வருகிறார்.

தனது 22 ஆவது பிறந்தநிளத்தில் 23 ஆவது குழந்தையை தத்தெடுத்திருக்கிறார். இன்னும் அவர் பல ஆண்டுகள் சினிமாவில் இருக்க வேண்டும். இன்னும் குழந்தைகளுக்கு வாழ்க்கை கிடைக்குமே.

ரவுண்டிலும், இளவட்ட ஹீரோக்களுடன்
வேண்டும் என்பதில் உறுதியாக
, ஏற்கனவே தன்னை வைத்து ஹிட்
டைரக்டர்களை சந்தித்து சான்ஸ்
அப்போது, அவர்களிடத்தில் "பழைய
டும் என்னை கிளாமர் ஹீரோயினாக
கள். இப்போது, நான் அனுபவம் உள்ள
லி விடுகிறார் நயன்தாரா. ஆனபோதும்,
தில் தமிழுக்கு அறிமுகம் செய்த
மீண்டும் அவரை ஹோம்லியாக நடிக்க
டுத்துள்ளார்.





படம் :- மின்னலே
இசை :- ஹரீஸ் ஜெயராஜ்
பாடியவர்கள் :- ரூப் குமார் ரத்தோடு, திப்பு
பாடல்வரிகள்:- வாலி

வெண்மதி வெண்மதியே நில்லு
நீ வானுக்கா மேகத்துக்கா சொல்லு

வெண்மதி வெண்மதியே நில்லு நீ
வானுக்கா மேகத்துக்கா சொல்லு
வானம்தான் உன்னுடைய இஷ்டம்
என்றால் மேகத்துக்கில்லை
ஒரு நஷ்டம்
உன்னை இன்றோடு நான் மறப்பேனே
நான் மறப்பேனே
உன்னாலே நெஞ்சில் பூத்தக் காதல்'
மேலும் மேலும் துன்பம்
துன்பம் வேண்டாம்

(வெண்மதி)

ஜன்னலின் வழி வந்து விழுந்தது
மின்னலின் ஒலி அதில் தெரிந்தது
அழகு தேவதை அதிசய முகமே
ஆஹாஹா
தீப்பொறி என இரு விழிகளும்
தீக்குச்சி என எனை உரசிட
கோடிப் பூக்களாய் மலர்ந்தது மனமே
அவள் அழகைப் பாட ஒரு
மொழியில்லை
அளந்து பார்க்கப் பல விழியில்லை
என்ன இருந்தபோதும் அவள்
எனதில்லையே
மறந்துபோ மனமே
ஓ ஓ ஓ...

(வெண்மதி)

அஞ்சு நாள் வரை அவள் பொழிந்தது
ஆசையின் மழை அதில் நனைந்தது
நூறு ஜென்மங்கள்
நினைவினில் இருக்கும்
ஆறு போல் இந்த நாள் வரை
உயிர் உருகிய அந்த நாள் சுகம்
அதை நினைக்கயில்
இரத்த நாளங்கள் ராத்திரி வெடிக்கும்
ஒரு நிமிஷம் கூட
என்னைப் பிரியவில்லை
விவரம் எதும் அவள் அறியவில்லை
என்ன இருந்தபோதும் அவள்
எனதில்லையே
மறந்துபோ மனமே

உன்னை இன்றோடு நான் மறப்பேனே
நான் மறப்பேனே
உன்னாலே நெஞ்சில் பூத்தக் காதல்
மேலும் மேலும் துன்பம்
துன்பம் வேண்டாம்

சிறுவர் பகுதி



# நட்புக்குத் துரோகம் செய்யாதே!

ஒரு காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் நண்பர்களாகப் பழகத் தீர்மானித்தன. இரண்டும் சேர்ந்து ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டன.

நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும் இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும் நரியும், கழுதையும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள் நரி தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக தன் இருப்பிடத்தை விட்டு கழுதை இருக்குமிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும், அந்தப் பக்கமாக சென்ற சிங்கத்தைக் கண்டு நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா என யோசித்தது.

ஒரு வழி நரிக்குப் புலப்பட்டது. அதாவது, தன் நண்பன் கழுதையைக் காட்டிக் கொடுத்துவிட்டு, தான் தப்பித்துக் கொள்வது என்பதுதான் அந்த வழி.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, ''மன்னாதி மன்னா! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போவதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்ய முடியும். என் நண்பனாக, கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொல்வதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்கிறேன். அந்தக் கழுதை, இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்!'' என்று கூறிற்று.

அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக் கொண்டது.

நரி, சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத்திற்குச் சென்றது.

''நண்பனே! இரை தேடச் செல்லலாமா?'' என, கழுதையை அழைத்துக்கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத் திற்கு அருகாமையில் கொண்டு வந்து நிறுத்தியது நரி. சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம் நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது.

நரி பதறிப் போய், ''மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் காண்பிக்க வந்தேன். இப்போது என்னையே கொல்ல வந்துவிட்டீர்களே!''என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

''நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுக் கத் தயங்காத உன்னை நம்ப முடியாது. நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம். ஆகவே, உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது,'' என்று கூறிக் கொண்டே சிங்கம், நரியையும் கொன்று வீழ்த்தியது.

இதற்குத்தான் கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமை தான் ஏற்படும்.



# உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் கிரிக்கெட் ரசிகராக இருக்கலாம். உங்களை களம் இறக்கினால் தேர்ந்த ஆட்டக்காரராக பவுண்டரிகளும், சிக்ஸரும் விளாசலாம். ஆனால், இவை இரண்டும் எப்போது பிறந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? கிரிக்கெட் விளையாட்டில் பவுண்டரி 1900 ஆம் ஆண்டிலும், சிக்ஸர் 1910 ஆம் ஆண்டிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.



# அட, அப்படியா!

- பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறந்த நாள் கொண்டாடுபவர்கள் சீன நாட்டினர்.
- சர்வதேச இடதுகை பழக்கம் உடையவர்கள் தினம் ஆகஸ்ட் 13 இல் கொண்டாடப்படுகிறது.
- வீட்டுக்கு ஒரு கிட்டார் இசைக்கருவி உள்ள நாடு பிலிப்பைன்ஸ்.
- ஆண்டுதோறும் 10 நாட்களை பலூன் திருவிழாவாகக் கொண்டாடும் நாடு சுவிற்சர்லாந்து.

# புறாக்கள்



மனிதர்களை விட அன்பில் சிறந்தவை. ஜோடி சேர்ந்தபின் ஒன்றையொன்று இணைபிரியாமல் இருக்கும்.

ஆண்புறா தனது இணைக்குச் சமமாகக் கூடு கட்டும் வேலையைச் செய்யும். அடை காக்கும். குஞ்சுகளுக்கு உணவு ஊட்டும். ஒன்றாகப் பறக்கும்போது தனது ஜோடி வரும்வரை காத்திருந்து கூடவே பறக்கும்.

எகிப்து, சிரியா, ரோம் போன்ற நாடுகளில் பழங்காலத்தில் புறாக்கள் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது.

புறாக்களை வைத்து பறக்கும் பந்தயங்கள் நடத்தும் வழக்கமும் உண்டு. எல்லாப் புறாக்களுக்கும் முன்பின் அறிமுகமே இல்லாத இடங்களுக்கும், நாடுகளுக்கும் பறந்து சென்றுவிட்டு தங்களது இருப்பிடத்துக்கு வந்து சேரக்கூடிய திறமை, அறிவு ஆகியவை பிறவியிலேயே உண்டு. புறாக்களில் மிகவும் சிறப்பானவை ''ஹோமர்'' எனப்படும் புறாக்கள்.

புறாக்கள் இரவில் பறக்காது. புறாக்களை வளர்க்க விரும்புபவர்கள், கூடுகள் பரந்து விரிந்தும் காற்றோட்டம் நிறைந்தும் மழைக்கு ஒழுகாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.


நல்ல தானியங்கள், ஊறவைத்த கடலை, பயறு வகைகள் புறாக்களின் உணவாகும்.


மண்கலத்தில் சுத்தமான நீரும், சிப்பித்தூள், உப்பு, சிறு சிறு கற்கள் (மிளகு அளவு) கலந்து கூடுகளில் எப்போதும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

Black
Colour: Cyan Magenta

✱ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

1) தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.




2) 
ஒரு கடதாசித் துண்டை நான்காக மடித்து அதில் சில துவாரங்கள் இடப்பட்டு விரிக்கப்பட்டுள்ள நிலை காட்டப்பட்டுள்ளது. இதில் நான்காக மடிக்கப்பட்ட நிலையில் இடப்பட்ட துவாரங்களின் எண்ணிக்கை.

1. ஒன்று 2. இரண்டு 3. எட்டு

3) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

தவளை - பேத்தை
யானை - போதகம்
நெல் - -------


1. தானியம் 2. நாற்று 3. அரிசி


4) பிள்ளைகள் மகிழ்ந்தனர்.
ஆடி மகிழ்ந்தனர்.
பாடி மகிழ்ந்தனர்.
------- மகிழ்ந்தனர்.

முதல் இரு வரிகளையும் சேர்ப்பதன் மூலம் பெறப்படும் செயல்.

1. ஓடி 2. நடனமாடி 3. ஆடிப்பாடி

5). வித்தியாசமான உருவில் கீழ் கோடிடுக.




6). 


7). [படகு] = 378 எனில் [குடம்] = --------------

சொற் கூட்டத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. 875 2. 387 3. 857

8) □ + △ + △ = 40
△ + △ + △ + □ + □ = 70
□ + △ = ................ இன் பெறுமானம்.

1. 40 2. 30 3. 50

9). உருவிலுள்ள சட்டகத்தை அவதானிக்குக. சதுர எண்ணைச் சுற்றி வட்டம் இடுக.


| |
|---|
| 1, 2, 3, 4, 5 |
| நா, ணீ, தி, து |
| பு, சி, த, கூ |

..........................................................................

10) ஒற்றை எண்களின் மேல் புள்ளடியிடுக. ..............................

11) மடக்கேறும் அரவும் உள்ள எழுத்துக்களுக்குக் கட்டம் இடுக.

12) அமலனின் பயணப்பாதையை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.




அமலன் என்பவர் பாடசாலையை சென்றடைய எத்தனை முறைகள் இடஞ்சுழியாகச் சென்றுள்ளார்?.

1. 13 2. 14 3.12

13) அமலன் பாடசாலைக்கு சென்றடையும் வரை கிழக்குத் திசையாக எத்தனை தடவைகள் சென்றுள்ளார்?


1. 10 2. 12 3. 13


14) அமலன் தபாற்பெட்டியை சென்றடைவதற்கு மணிக்கூட்டு முள்ளின் சுழற்சிக்கேற்ப எத்தனை தடவைகள் செல்வான்.

1. 9 2. 10 3. 11

15) பூச்சியினம் அல்ல, வலையால் பின்னப்பட்ட இருப்பிடம், நான்கு கோடிக் கால்களைக் கொண்டவை.



16) 
இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள அட்டைத்தாள் பெட்டியை விரிக்கும் போது தோன்றும் தோற்றம்.




17) உருவில் உள்ள பொருள்களுடன் தொடர்புடைய செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.



1. வாசித்தல், பார்த்தல், கேட்டல்.
2. செவிமடுத்தல், வாசித்தல், பார்த்தல்.
3. வாசித்தல், கேட்டல், பார்த்தல்.

18) இக் குறியீடு மூலம் குறிப்பிடப்படுவதை கோடிட்டுக் காட்டுக.



1. இலங்கை போக்குவரத்துச் சபை.
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.
3. இலங்கை அஞ்சல்.
4. இலங்கை மின்சார சபை.

19) சரியான விடையினைக் கண்டுபிடித்து அதன் கீழ் கோடிடுக.

| |
|---|
| 1 கிலோ கிராம் சீனி = 80 ரூபா |
| 1 கிலோ கிராம் சீனி, 1 கிலோகிராம் மா = 140 ரூபா |

1 கிலோ கிராம் மாவின் விலை யாது?

1) 70 ரூபா 2. 140 ரூபா 3. 60 ரூபா

20) மனிதனின் வளர்ச்சிப் படிகளை ஒழுங்கமைப்பில் காட்டுக.

1. குழந்தைப்பருவம், முதுமைப்பருவம், பிள்ளைப் பருவம்,

இளமைப் பருவம்
2. பிள்ளைப்பருவம், இளமைப்பருவம், குழந்தைப் பருவம், முதுமைப் பருவம்
3. குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம்


21) செயல்முறையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள கட்டத்தினைத் தெரிவு செய்க.
1. தானியங்களை விதைத்தான்.
2. உழவன் வயலை உழுதான்.
3. அதனால் பயனை அடைந்தான்.
4. வயலுக்கு பசளை இட்டான்.
1) 2,1,4,3   2) 2,4,1,3   3) 4,2,3,1

22) பந்தியை வாசித்து சரியான விடையைக் கண்டுபிடித்துக் கீறிடுக.
தந்தை தனது மகனின் பிறந்தநாள் பரிசாக நிசாருக்கு 500 ரூபாய் பணமாகக் கொடுத்தார். அவன் அதில் 1/4 பங்கு பணத்தை தனது நண்பர்களுக்காகச் செலவு செய்தான். பின்னர் தனது தங்கைக்கும் விளையாட்டுப் பொருட்கள் சிலவற்றையும் 250 ரூபாவிற்கு வாங்கிக் கொடுத்தான். தற்போது நிசாரிடம் உள்ள மீதிப் பணம் யாது?
1. 100 ரூபாய்.   2. 250 ரூபாய்.   3. 125 ரூபாய்.

23) அப்பா கொழும்பில் இருந்து வரும்போது 50 அப்பிள் பழங்கள் கொண்டுவந்தார். அதில் ஐந்து பழங்கள் பழுதடைந்து காணப்பட்டன. மிகுதி அப்பிள் பழங்களை தனது மூன்று பிள்ளைகளுக்கும் சமனாகப் பங்கிட்டுக் கொடுத்தார். ஒரு பிள்ளையிடம் காணப்படும் அப்பிள் பழங்களின் எண்ணிக்கை யாது?
1. 15   2. 12   3. 14

24) 20 *m* அகலமும் 20*m* உயரமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 1 1/2 லீற்றர் வர்ணம் தேவைப்பட்டது. எனின் அந்தச் சுவரின் அரைப்பகுதி உயரத்திற்கு வர்ணம் பூசுவதற்கு எத்தனை லீற்றர் வர்ணம் தேவைப்படும்.
1. 1/2 லீற்றர்.   2. 1 லீற்றர்   3. 3/4 லீற்றர்.

25) துளையிடப்பட்டுள்ள விதத்தை அவதானித்து இச் சதுரக் கடதாசி எத்தனை தடவைகள் மடிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடுக.




1. இரண்டு துண்டுகள்.
2. நான்கு துண்டுகள்.
3. எட்டுத் துண்டுகள்.

26) சிறுவனொருவன் ஒரே அளவான சதுர வடிவ காட்போட் துண்டுகளினால் பின்வரும் உருவை அமைக்கின்றான். இவ்வுருவை அமைக்க அவனுக்குத் தேவைப்பட்ட சதுர வடிவத்துண்டுகள் எத்தனை?



1. 10 துண்டுகள்   2. 12 துண்டுகள்   3. 17 துண்டுகள்

27) பின்வரும் குறியீடுகளால் குறிக்கப்பட்டவற்றை அவதானிக்குக.




28) தரவுகளை மையமாகக் கொண்டு பின்வரும் வினாவினது சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
***A B*** யை விட உயரமானவன். ***A C*** ஆகிய இருவரும் உயரத்தின் சமனானவர்கள். ***D C*** யை விட உயரமானவன்.
1. உயரத்தில் குறைந்தவன் ***B*** ஆவான்.
2. உயரம் கூடியவன் ***A*** ஆவான்.
3. ***A*** யை விட ***D*** குள்ளமானவன்.

29) குறித்ததொரு நகரத்தில் கோயிலுக்கு 700 மீற்றர் வடக்குத் திசையில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. பொலிஸ் நிலையத்துக்கு 200 மீற்றர் தெற்கும் திசையில் பாடசாலை அமைந்துள்ளது. இதற்கமைய கோயில் அமைந்துள்ளது. பாடசாலைக்கு.
1. 500 மீற்றர் வடக்குத் திசையிலாகும்.
2. 500 மீற்றர் தெற்குத் திசையிலாகும்.
3. 200 மீற்றர் தெற்குத் திசையிலாகும்.

30) பின்வரும் வாக்கியங்களுக்குள் வழுவற்ற வாக்கியத்தைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.
1. பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்க.
2. அவனது முகத்தில் கவழை குடிகொண்டது.
3. கற்றது கையளவு கல்லாதது உலகளவு.

31) பின்வரும் ஒவ்வொரு வாக்கியங்களையும் ஒழுங்கு முறையாக எழுதினால் ஒரு கதை உருவாகும். சரியான ஒழுங்கில் உள்ள இலக்கங்கள் கொண்ட விடையின் கீழ் கோடிடுக.
1. அவன் தோணியில் ஏறி ஆற்றின் நடுவே சென்று கொண்டிருந்தான்.
2. திடீரென நீர்ச் சுழியினுள் அகப்பட்டுத் தோணி கவிழ்ந்தது.
3. அதைக் கண்டவர்கள் ஓடிச்சென்று அவனைக் காப்பாற்றினர்.
4. சுந்தர் தோணி செலுத்துவதற்கு ஆற்றுக்குச் சென்றான்.
5. சுந்தர் தோணியைப் பற்றிப் பிடித்து தொங்கிக் கொண்டிருந்தான்.
1) 4,5,3,2,1   2) 1,2,4,3,5   3) 4,1,2,5,3


32) பின்வரும் வினாவினது சரியான விடையினைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.
ஒரு மனிதன் வீதியோரத்தில் விழுந்து கிடந்தான் அதற்குக் காரணம்.
1. அவன் மது போதையில் இருந்ததனாலாகும்.
2. அவன் நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததனாலாகும்.
3. காரணத்தைக் கூற முடியாது.

33) சர்மி பணக்கார வீட்டுப்பிள்ளை. அவள் விதவிதமான ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டு பெருமை அடித்துக் கொள்வாள். அவளின் இத்தன்மையைக் குறிப்பிடும் சொல்.
1. ஆனந்தம்   2. பகட்டு.   3. அலங்காரம்.

34) ஒரு மோட்டார் சைக்கிள் சென்ற தூரம் மானியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 09699 அது மேலும் 1 ***km*** சென்ற பின்னர் மானியில் காட்டும் இலக்கத்தின் கீழ் கோடிடுக.
1) 09799   2) 09700   3) 09970


35) கண்ணன் ஐங்கோண வடிவில் ஒரு பூம்பாத்தியைத் தயார் செய்து அதனைச் சுற்றி வேலி அமைத்தார். யாதாயினும் ஒரு திசை வழியே பார்க்கும் போது அப்பக்கத்தில் 12 கம்பங்கள் காணப்பட்டன எனின் இவ் வேலிக்குப் பயன்படுத்தப்பட்ட கம்பங்களின் எண்ணிக்கை யாது.
1. 60   2. 55   3. 56

36) வெற்றிடத்தில் வரவேண்டிய எண்.





1. 20   2. 18   3. 25

37)




1. 162
2. 108
3. 216

38) கோலத்திற்கு ஏற்ப சரியான விடையைத் தெரிவு செய்து கீறிடுக.




வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய ஆங்கில எழுத்து
1. ***K***   2. ***L***   3. ***M***

39) பாடலினால் விபரிக்கும் உருவைத் தெரிவு செய்க.
திரியுமின்றி எரிதிரவமுமின்றி
எரியுதே எமக்கு மேலே
கரிப்புகையும் தராது
வரிப்பணமும் பெறாது
எரியுதே உயர மேலே



40) இடத்தில் இருந்து கொண்டு இரையை நாக்கால் பிடிக்கும் நீண்ட நாக்குக் கொண்டது நிறத்தை மாற்ற வல்லது.



01) பின்வரும் பந்தியை வாசிக்க.

இயற்கைக் காட்சிகள் மனித மனத்துக்கு இன்பந்தருவன. அப்படியான கட்சிகளுள் வயற்காட்சியும் ஒன்று. பின்நேரம் சுமார் நான்கு மணியளவில் எங்களூரின் மேற்குத் திசையிலுள்ள வயல் வெளிப்பக்கம் உலாவப் போனேன். அங்கே சில விவசாயிகள் மாடுகள், கலப்பைகள் கொண்டு வயல்களை உழுது கொண்டிருந்தனர். சில இடங்களில் உழவு இயந்திரங்களால் வயல்களை உழுது கொண்டிருந்தனர். சில விவசாயிகள் மண்வெட்டியால் சேற்றை வெட்டி அள்ளி வயல் வரம்புகளைச் செப்பனிட்டுக்கொண்டிருந்தனர். நீரும் சகதியுமாக வயற்பரப்பு இருந்ததால் விவசாயிகளின் மேனியிலும் மாடுகளின் உடம்பிலும் சேற்று நீர் விசுறுண்டு புலிவேடம் பூண்டது போற் காட்சி தென்பட்டது. உழவு இயந்திரம் சேற்றில் குளித்துக் குளித்து காவி நிறமேறிக் காட்சியளித்தது.

1. மேற்குறித்த விபரம் எத்தகைய இடம் பற்றியது?
-------------------------------------------------
2. மேனியிலும் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக?
-------------------------------------------------
3. துன்பம் என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக?
-------------------------------------------------
4. வயலை என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக?
-------------------------------------------------
5. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக?
-------------------------------------------------
6. இப் பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குமொழி யாது?
-------------------------------------------------
7. இப்பந்தியின் கடைசி வசனத்தில் இடம்பெற்றுள்ள எழுவாயினை எழுதுக?
-------------------------------------------------
8. உழவு இயந்திரங்களால் வயல்களை உழுது கொண்டிருக்கின்றான். என்பதன் இறந்தகால வடிவத்தை எழுதுக?
-------------------------------------------------

02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.
1. மழை வெள்ளம், எங்கும் -------------- பாய்ந்தது. (பரந்து, பறந்து)
2. கடந்த வருடம் ஏற்பட்ட கடும் ---------- காரணமாக நெற்செய்கை பாதிக்கப்பட்டது. (வறட்சி, வரட்சி)

03) சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.
(இனிய / முழுவதும் / பறவையினங்களின் / இசையில் கானகத்தினால் / அப்பகுதி / மூழ்கியிருந்தது.
-------------------------------------------------

04) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
1. வாட்ட சாட்டம் : ------------------
2. தானம் போடல் : ------------------

05) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக?
1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் : ---------
2. ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது : ---------

06) சொற்தொடரின் உட்கருத்தை எழுதுக.
1. நுனிப்புல் மேய்ந்தால் போல் : ------------

07) பொருத்தமான நிறுத்தற்குறியீடுகளை இடுக.
1. எனக்குத் தெரியவில்லை ஐயா என்றான்.

08) இ.ஒ.கூ. என்பதன் சுருக்கக் குறியீட்டின் பொருளை எழுதுக.
-------------------------------------------------

09) ஒவ்வொரு தமிழ்ச் சொற்களிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.
1. மேற்கு : ------------------------------------
2. விவசாயி : ------------------------------------
3. உடம்பு : ------------------------------------

10) கருத்தைத் தமிழில் எழுதுக.
1. Please look at the picture : ..........................................2
. wthat do you like : ..................................................

11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.
1. தும்ரிய ஸ்தானய : ----------------------
2. பாடம கியவ தென்ன : ------------------
3. மென்னதே பொன்ன : ------------------


12) தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொல்லைத் தமிழில் எழுதுக.
1. வைத்தியசாலை : -------------
2. வரையுங்கள் : --------------

13) தான் உண்ணும் உணவின் மீது சமிபாடடையச் சாற்றைச் சுரந்து உணவைக் கரைந்த பின்னர் அதனை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி.
1. சிலந்தி 2. கறையான் 3. தவளை


14) காந்தங்களின் வடமுனை தென்முனை குறிக்கப்படும் நிறங்கள் முறையே.
1) சிவப்பு, நீலம் 2). நீலம், சிவப்பு 3. சிவப்பு, வெள்ளை

15) வித்துக்கள் முளைப்பதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும் வித்து.
1. சிறகவரை. 2. மரமுந்திரிகை. 3) பாகல்.

16) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சுருக்கக் குறியீடு.
1. **SLTB** 2. **CRG** 3. **R.D.A.**




17) கண்ணாடிக் குவளையொன்றில் பனிக்கட்டியை இட்டு அவதானிக்கும் போது.

1. பனிக்கட்டி படிப்படியாக உருகிக் குவளை குளிர்ச்சியடையும்.
2. குவளையின் வெளியே நீர்த்துளிகள் தோன்றும்.
3. மேற்கூறிய யாவும் சரியானது.

18) துன்கிந்த, தியலும நீர்வீழ்ச்சிகள் அமைந்துள்ள மாகாணம்.
1. ஊவா மாகாணம். 2. மத்திய மாகாணம்.
3. சப்ரகமுவ மாகாணம்.

19) சூரிய நமஸ்கரம் பயிற்சியில் இந்நிலை காட்டப்படுவது.

1. 5ஆம் நிலை
2. 7ஆம் நிலை
3. 8ஆம் நிலை


20) 
இங்கு காட்டப்பட்டுள்ள விளையாட்டு.
1. வலைப்பந்து
2. கூடைப்பந்தாட்டம்
3. கரப்பந்து

21) தந்துகிகள் காணப்படும் தாவரத்தின் படம் எது?

1. 
2. 
3. 

22) பின்வரும் பூக்களின் கொத்துப் பூக்கள் எவை?
1. தாமரை, சூரியகாந்தி
2. றோசா, செவ்வந்தி
3. மூக்குத்திப்பூண்டு, சீதேவியார் செங்கழுநீர்

23) கங்கண சூரிய கிரகணம் ஏற்பட்ட ஆண்டு யாது?
1. 1950 2. 2010 3. 2000

24) இலங்கையின் வருடத்தில் வீசும் காற்றை படம் காட்டுகிறது. இதில் ***A*** யினால் குறிப்பிடப்பட்டுள்ள காற்று யாது?


1. தரைக்காற்று. 2. தென்மேல் பருவக்காற்று.
3. வடகீழ்ப் பருவக்காற்று.

25) வெளிநாட்டில் உற்பத்தி செய்தவை தரமானவை என்பதை உறுதிப்படுத்தி வழங்கும் குறியீடு எது?
1. **SLS** 2. **ASO** 2. **ISO**

26) தீப்புண் மீது இதனை வைத்துக் கட்டினால் புண் உண்டாகாது அத் தாவரம் எது?




27) விலங்கு மூலம் பரம்பலடையாத வித்து எது?




28) இக் குறியீடு குறிப்பது



1. மின்சாரம்
2. மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு.
3. மழை பெய்ய இடமுண்டு.

29) இலங்கையில் புயல் சூறாவளி ஏற்படுவதை முன் கூட்டியே அறியக்கூடிய "றேடார்" நிலையம் அமைந்துள்ள மாகாணம் எது?
1. தென்மாகாணம்.
2. கிழக்கு மாகாணம்.
3. மேல் மாகாணம்.

30) பாரம்பரிய முறையில் பீடைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் தாவரம் எது?
1. மண்ணெண்ணெய்.
2. தேங்காயெண்ணெய்.
3. வேப்பெண்ணெய்.

31) பிற பறவைகளைத் தாக்கி அவைகளின் உணவைத் திருடித் தின்னும் பறவை எது?
1. போர்க்கப்பல் பறவை.
2. டெர்ன் 3. கத்தரிக்கோல் மூக்கி.

32) டெங்குக்காய்ச்சலை ஏற்படுத்துகின்ற நுளம்பின் பெயர் என்ன?
1. ஈடிஸ் அனோபிலிஸ்.
2. ஈடிஸ் ஈஜிப்டய், ஈடிஸ் அல்போபிக்டஸ்.
3. கியூலெக்ஸ், அனோபிலிஸ்.

33) பின்வரும் வித்துக்கள் பரவல் அடையும் முறைகளைத் தருக.




33) --------- 34) --------- 35) --------- 36) ---------

✱ பின்வரும் அலகுகளை இனங்கண்டு பறவைகளின் பெயர்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.



37)-------- 38)-------- 39)-------- 40)----------

41) படத்தில் காட்டப்பட்டுள்ள மின்சுற்றில் "உலோகத் தொப்பியை" காட்டும் ஆங்கில எழுத்து எது? சரியான விடையைக் கீறிடுக.
1. A 2. C 3. B





42) மேலேயுள்ள மின்சுற்றில் மின்குமிழ் எரிவதற்கு மின்கடத்திகளைச் சரியாக இணைக்க வேண்டிய இடங்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களின் கூட்டம் எது? சரியான விடையின் கீழ் கீறிடுக.
1. ADCB 2. AECDB 3. ABCD

43) 9748 எனும் எண்ணில் 7 இன் பெறுமானம் யாது?

------------------------------------------------

44) அருகிலுள்ள உருவில் 3/4 பங்கு நிறந்தீட்டுக.



45)  இவ்வுருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியில் பரப்பளவு எத்தனை கட்டங்கள்.

46) இவ்வுருவினால் உருவாக்கப்படும் திண்ம உரு.



------------------------------------------------

இதன் உச்சிகளின் எண்ணிக்கை :-----------------


47) பெட்டியொன்றில் 7 சவர்க்காரக் கட்டிகளை வைக்க முடியும். 53 சவர்க்காரக் கட்டிகளை வைக்கத் தேவையான பெட்டிகள் எத்தனை? ------------------------------------------

48) 2 kg 500 g மிளகாயின் விலை ரூபா 500.00 ஆகும். 250g மிளகாயின் விலை யாது? ------------------------------------

49) மு.ப 11.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட வரதன் 2 மணித்தியாலயம் 30 நிமிடங்களின் பின் மீண்டும் வீடு வந்து சேர்ந்தான். அவன் வீடு வந்த நேரம் யாது? ----------------------


50) சாமியிடம் ரூ. 12 இருந்தது. வாசுகியிடம், சாமியிடம் இருந்த பணத்தின் மூன்று மடங்கு பணம் இருந்தது. வாசுகியிடம் இருந்த பணத்தின் அரைவாசி கமாலிடம் இருந்தது. மூவரிடமும் இருந்த மொத்தப் பணம் யாது? -------------------

51) கலவன் பாடசாலை ஒன்றில் தரம் 1 முதல் தரம் 5 வரையுள்ள வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை கீழேயுள்ள வரைபு காட்டுகின்றது.





1. தரம் 5 இல் உள்ள ஆண், பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? -------------
2. தரம் 1 இலும் 4 இலும் உள்ள ஆண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?-----------
3. தரம் 1 முதல் 5 வரை உள்ள பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? -----------
4. தரம் 2 இல் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கைக்கும் தரம் 4 இல் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் யாது? -----------
5) தரம் 1 - 5 வரையுள்ள ஆண்களின் மொத்த எண்ணிக்கைக்கும் தரம் 1- 5 வரையுள்ள பெண்களின் மொத்த எண்ணிக்கைக்குமான வித்தியாசம் யாது?------------

52) ஆணியின் நீளத்தைக் காணுங்கள் -----------




53) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க?

------------------------------------------




54) பின்வரும் தரவுகளைப் பின்பற்றி நடைபெறவுள்ள சம்பவத்தை ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்த பட்சம் 5 சொற்களேனும் இடம்பெறும் வகையில் எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்கும் வகையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக?

✱ ஆதிவாசிகள் மிகவும் சந்தோஷமாக தமது இருப்பிடத்தில் வாழ்ந்து வந்தார்கள்.
✱ தமது தேவைகளை நிறைவேற்ற அடிக்கடி நகரத்திற்கு வந்து சென்றார்கள்.
✱ அவர்கள் நகரத்தில் வந்து குடியேறினால்.

1. ------------------------------------------------
2. ------------------------------------------------
3. ------------------------------------------------
4. ------------------------------------------------
5. ------------------------------------------------
6. ------------------------------------------------

# என்னாச்சி...!

## இனி இப்படி வேண்டாமே...!

மதியம் ஒரு மூன்று மணியளவில் அருகிலிருந்த சில்லறைக் கடைக்குச் சென்றிருந்தேன். அப்போது பாடசாலை யூனிஃபோமில் மாணவன் ஒருவன் சிகரெட் கேட்டு வந்தான். ''யாருக்கு இந்த சிகரெட்?'' என்று கேட்டார் கடைக்காரர். தன்னை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் வேன் டிரைவர்தான் சிகரெட் வாங்கி வரச் சொன்னார் என்றான் அந்த மாணவன். ''அவரையே வந்து வாங்கச் சொல்'' என்று அனுப்பிவிட்டார் கடைக்காரர். பிறகு அந்த டிரைவரே நேரடியாக வந்து சிகரெட் வாங்கினார். இதைப் பார்த்ததும் மனது வலித்தது. நம்பிக்கையுடன் தங்கள் பிள்ளைகளை வேன் டிரைவர்களிடம் பெற்றோர்கள் ஒப்படைக்கின்றனர். அப்படியிருக்க இப்படி சிகரெட் வாங்க பிள்ளைகளை அந்த ஓட்டுநர்கள் பயன்படுத்தலாமா?





## எங்கள் உணர்வுக்கு மதிப்புக் கொடுங்கள்

கடந்தவாரம் விடுமுறை தினத்தில் இரவுநேர வானொலி நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தது. அப்போது ஒருவர் அழைப்பினை ஏற்படுத்தி, தான் சொந்தமாக எழுதி இசையமைத்த ஒரு பாடலை பாடுவதாகக் கூறினார். அதற்கு அந்த அறிவிப்பாளர்களும் சம்மதிக்க பாடலை பாட ஆரம்பித்தார். அவர் பாடத்தொடங்கிய அந்த நொடிப்பொழுதில் இருந்தே அந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த அறிவிப்பாளர்கள் இருவரும் பாடலை அவர் தொடர்ந்து பாடவிடாமல் இடையில் அவர்கள் இசை வழங்குகிறோம் உற்சாகப்படுத்துகிறோம் என்ற பெயரில் தாளங்களைப் போட்டது மட்டுமல்லாது, அவர் பாடிக் கொண்டிருக்கும்போதே 'சூப்பர் சூப்பர் கலக்கிட்டிங்க' என்று குறுகிட்டனர்.

இருந்தும் அந்த பாடகர் விடுவதாக இல்லை ''அண்ணா இன்னும் பாடலில் ஒரு பந்தி உள்ளது'' என்றுசொல்லி தொடர்ந்தார். ஆனால், அறிவிப்பாளர்கள் அவரை தொடர்ந்து பாடவிடாமல் இடையூறு ஏற்படுத்தி பாடிமுடிப்பதற்குள் அவரின் அழைப்பைத் துண்டித்து விட்டார்கள். அதன்பின் ஒரு குத்துப்பாடலை ஒளிபரப்பாக்கினார்கள்.

ஒரு சின்ன நான்குவரி கவிதையை எழுதினாலும் நண்பர்களிடம் காட்டுவோம், அல்லது பிரசுரிப்பதற்காக பத்திரிகைகளுக்கு அனுப்புவோம். அல்லது ஃபேஸ்புக்கில் வெளியிடுவோம். நமது படைப்பை மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற தாகம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

ஒரு படைப்பு அடுத்த நொடியே மக்களிடம் போய்ச் சேர்வதற்கு வானொலி முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. அப்படி நினைத்துத்தான் தான் எழுதிய பாடலை பாடவந்தார் அந்த இளைஞன். அதற்கு சரியான அங்கீகாரத்தை அந்த அறிவிப்பாளர்கள் கொடுக்கவில்லை என்பது கவலைக்குரியதே. இவ்வாறான இளைஞர்களை ஊக்குவிப்பதை விடுத்து சில அறிவிப்பாளர்கள் மக்களை உற்சாகப் படுத்துகிறோம் என்ற பெயரில் அவர்களிடம் அனாவசியமான கேள்விகளை கேட்பதும், தான் சொன்ன வார்த்தையை மீண்டும் மீண்டும் மற்றவர்களை சொல்லச் சொல்லி தர்மசங்கடப்படுத்துவதும், ஏன் தான் அழைப்பினை ஏற்படுத்தினோம் என்று நினைக்கும் அளவுக்கு போய் விடுகிறது. அறிவிப்பாளர்களே தயவு செய்து நேயர்களை நோகடிக்காதீர்கள்.



## நன்றி சொல்ல எனக்கு வார்த்தையே இல்லை...!

சமீபத்தில் நானும் என்னுடைய அக்காவும் உடுப்பு வாங்குவதற்காக தலைநகரில் உள்ள கடையொன்றுக்குச் சென்றோம். அந்தக் கடையில் நாங்கள் 6 ஆவது மாடிக்குச் செல்ல வேண்டியிருந்தது. என்னுடைய அக்காவால் 6 ஆவது மாடிவரை படிகளில் ஏற முடியாது. அதனால் லிப்டில் போகலாம் என்று லிப்டில் நுழைந்தோம். அந்தநேரம் எங்களுடன் ஒரு 8 வயது சிறுவனும் அவன் பெற்றோரும் வந்தார்கள். அவர்கள் 5 ஆம் மாடிக்குச் செல்லவேண்டியவர்கள். ஐந்தாவது மாடிவந்ததும் அந்த சிறுவனும் அவனது பெற்றோரும் வெளியேறும்போது அந்தச் சிறுவன் லிப்டில் ஒப்பரேட்டரிடம் ''தேங்ஸ் அங்கிள்'' என்றான். அப்போது பார்க்கவேண்டுமே, ஒப்பரேட்டர் முகத்தில் அத்தனை சந்தோஷம். உற்சாகத்தோடு தலையசைத்தார். மிகப்பெரிய உதவிகளுக்கே பெரியவர்கள் நன்றி சொல்ல மறந்துவிடுகின்ற காலத்தில் ஒரு சிறுவன் சின்ன விடயத்துக்கு மறக்காமல் நன்றி சொன்னது மனதிற்கு இதமாக இருந்தது.

தகவல் தொகுப்பு ஆர்.அபி

# ஆஹா அப்படியா?

உலகில் கோடானுகோடி பேர் தோன்றி மறைந்தாலும் சரித்திரம் மிகச்சிலரை மட்டுமே ஞாபகம் வைத்திருக்கிறது. தியாகம், சோகம், சாதனை, முயற்சி என அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் அவர்களை சரித்திரத்தில் இடம்பிடிக்க வைத்திருக்கிறது.

சரித்திரத்தில் இடம்பிடித்த நாயகர்களின், நாயகிகளின் வாழ்க்கையில் பொதிந்த சுவாரஸ்யமான, அதிர்ச்சியான, ஆச்சரியமான சோகமான சம்பவங்களின் தொடர் இது!

# கழுதைப்பால் கட்டழகி!

கிளியோபாட்ரா என்றாலே பலரது மனத்தில் தோன்றும் அடுத்த வார்த்தை கழுதைப்பால்.

மொத்தம் எழுநூறு கழுதைகள், அலெக்ஸாண்ட்ரியாவின் அரண்மனை வளாகத்தில். அவற்றைப் பராமரிக்கவே தனி தொழுவம் இருந்தது. கழுதைப்பால் கறப்பவர்களின் வேலை காலை முதலே ஆரம்பித்துவிடும். சுத்தமான கழுதைப்பால் மதிய நேரத்தில் அந்தப்புரத்துக்குள் கொண்டு செல்லப்படும். குளிக்கும் தொட்டிக்குள் நிரப்பப்படும். மாலை நேரத்தில் தோழிகள் சூழ அங்கு வரும் கிளியோபாட்ரா குளியல் தொட்டிக்குள் இறங்கி கழுதைப்பாலில் ஊற ஆரம்பிப்பாள்.

காலம் காலமாக கிளியோபாட்ரா குறித்து சொல்லப்பட்டு வரும் சம்பவம் இது.

கிட்டத்தட்ட மனிதனின் தாய்ப்பாலுக்குச் சமமானது கழுதைப்பால். லாக்டோஸ் அதிகமுண்டு, பசும்பாலைவிட கொழுப்பு குறைவு. அப்போதெல்லாம் குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்குப் பதில் கழுதைப்பாலும் கொடுத்திருக்கிறார்கள். மருத்துவத்துக்கும் பல்வேறு விதங்களில் உபயோகிப்படுத்தி இருக்கிறார்கள். அழகுக் குறிப்புகளும் கொடுக்கிறார்கள். கழுதைப்பாலில் குளித்தால் முகச்சுருக்கங்கள் வரவே வராது. தோலில் மினுமினுப்பு அதிகரிக்கும். வெண்மை நிறம் மிளிரும். ஒரு நாளில் ஏழுமுறை கழுதைப்பாலில் முகம் கழுவினால் முகம் என்றென்றைக்கும் புத்துணர்வுடன் இருக்கும் என்கிறது மருத்துவக் குறிப்புகள்

கிளியோபாட்ரா மட்டுமல்ல கி.பி. 60 முதல் 65 வரை வாழ்ந்த ரோம் அரசி சபினா (பிடில் புகழ் நீரோவின் இரண்டாவது மனைவி) கழுதைப்பாலில் குளித்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. அவள் எங்காவது வெளியூர் சென்றாலும் அவளுக்காகக் கையுடனேயே அண்டா அண்டாவாக கழுதைப்பால் கொண்டு செல்வார்களாம் அல்லது நூற்றுக்கணக்கான கழுதைகளையே ஓட்டிக் கொண்டு செல்வார்களாம். நெப்போலியனின் தங்கை பவுலினும் கழுதைப்பாலில் குளித்ததற்கான குறிப்புகள் இருக்கின்றன.

எகிப்தியர்களுக்குக் காலை எழுந்தவுடன் குளிக்கும் வழக்கம் இருந்ததில்லை. வேலையெல்லாம் முடித்துவிட்டு வெயில் விடைபெறும் வேளையில் மாலைக் குளியல் போட்டிருக்கிறார்கள். அலெக்ஸாண்ட்ரியாவின் அரண்மனையில் இளவரசியாக சகல வச திகளுடன் வாழ்ந்துவந்த கிளியோபாட்ராவும் அந்த வழக்கத்தைத்தான் கடைபிடித்திருக்கிறாள்.

அரண்மனைக்குள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே குளியல் தொட்டிகள் இருந்தன. வெந்நீர்க் குளியலுக்கான வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. கிளியோபாட்ரா ஒலிவ் எண்ணெய் தேய்த்து குளித்தாள். உடல் தேய்த்துக் குளிக்க வளைவான தகடு ஒன்றை உபயோகப்படுத்தினாள். குளியலை முடிக்க குறைந்தது இரு மணி நேரம் பிடிக்கும்.

கிளியோபாட்ரா உபயோகப்படுத்திய இன்னொரு முக்கியமான அழகுப் பொருள் மருதாணி. கூந்தலில், கைவிரல்களில், பாதங்களில் மருதாணி உபயோகப்படுத்தினாள். தவிர முகத்துக்கான இயற்கை கிரீம்கள், கண்ணுக்கான மை, உதட்டுக்கான சாயம், முகப் பொலிவுக்கான பூச்சுகள், வாசனைக்கான திரவியங்கள் எல்லாமே உபயோகப்படுத்தியிருக்கிறாள்.

எகிப்தில், கிரீஸில், ரோமில் வாழ்ந்த உயர்குடிப் பெண்கள் எல்லோருமே பாலில் குளிக்கும் வழக்கத்தைக் கடைபிடித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.


கழுதைப்பாலைத் தாண்டியும் கிளியோபாட்ரா பற்றி தெரிந்துகொள்ள ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன.


அவளது வாழ்க்கை சர்ச்சைகள், ஆச்சரியங்கள் நிறைந்தது.

கிளியோபாட்ரா எகிப்திய நாட்டின் பேரழகி. அரசியால் சரித்திர சாம்ராஜ்யத்தையே ஆட்டிப்படைக்க முடியும் என்பதன் எடுத்துக்காட்டு கிளியோபாட்ரா. அரசாள வேண்டும் என்ற எண்ணத்தில் தனது தமயன்களையே விவாகம் செய்துகொண்டவர். அது மட்டுமல்ல ஆட்சிக்காக மாவீரன் ஜூலியஸ் சீசரை விவாகம் செய்தார். சீசரின் இறப்புக்குப் பிறகு அன்டனியை விவாகம் செய்தார். ஆட்சி பீடத்தை கைப்பற்றவும், தக்கவைக்கவும் தன் பேரழகை துருப்பாகப் பயன்படுத்திய கிளியோபாட்ராவுக்கு வரலாற்றில் அழிக்க முடியாத எந்தப் பெண்ணும் ஏற்காத கறையைத் தந்ததும் அந்த அழகுதான். அந்த அதிர்ச்சித் தகவல் பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.



தகவல் தொகுப்பு - ரிஷி







# அரசுக்கு சவாலாகும் நவநீதம்பிள்ளையின் வருகை

இரு நாடுகளின் இளவரசிகள் இலங்கை வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் தாய்லாந்து நாட்டின் இளவரசி. மற்றையவர் ஜப்பான் நாட்டு இளவரசி. இவர்களின் வருகை இலங்கை அரச இயந்திரத்துக்கு சவாலாக அமையவில்லை. இம்மாதம் 25 ஆம் திகதி கொழும்பை வந்தடையவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகை இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. நவநீதம்பிள்ளை இலங்கையில் தங்கியிருந்து ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முக்கிய அமைச்சர்களை சந்தித்துப் பேசவிருக்கின்றார். நவநீதம்பிள்ளை இலங்கையில் தங்கியிருக்கும் ஒருவார காலத்தில் இரண்டு முக்கியமான பெண்களையும் சந்தித்து உரையாடவிருக்கின்றார்.

ஒருவர் ஜனாதிபதியுடன் முரண்பட்டு, பாராளுமன்றத் தீர்மானம் ஒன்றின் மூலம் பதவி நீக்கம்'செய்யப்பட்ட இலங்கை உயர்நீதிமன்றத்தின் முதலாவது பெண் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா ஆவார்.

இரண்டாவது பெண், தன் கண்ணின் முன்னால், முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் இராணுவத்திடம் சரணடைந்த் தனது கணவனை இராணுவ வாகனத்தில் உயிருடன் ஏற்றிச் சென்றதைக் கண்ட ஆனந்தி சசிதரன் ஆவார்.

படையினரால் ஏற்றிச் செல்லப்பட்ட தனது கணவன் உயிருடன் இருக்கிறாரா? எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்? என்பது தெரியாத நிலையில் இருக்கும் ஆனந்தி அதுபற்றி நவநீதம்பிள்ளையிடம் முறையிடவிருக்கின்றார்.

நவநீதம்பிள்ளை இறுதி யுத்தத்தில் காணாமற்போன உறவுகளைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் மக்களை யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி சந்திக்கவிருப்பதாக தகவல். அப்போது நவநீதம்பிள்ளை - ஆனந்தி சந்திப்பு இடம்பெறலாம் என்று ஒரு தகவல். யார் இந்த ஆனந்தி? விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளரான எழிலனின் மனைவியே ஆனந்தி ஆவார். எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக ஆனந்தி போட்டியிடுகின்றார்.

இலங்கையில் அரசு படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இறுதிப் போரில் முள்ளிவாய்க்கால் களத்தில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் மற்றும் அமைப்புக்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

அப்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை அரசாங்கம் மீது போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்த சர்வதேச விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று உரத்துக் குரல் கொடுத்திருந்தார்.

காணாமற் போனவர்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்தை அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். இதனால் நவிபிள்ளையை 'எதிரி'யாக இலங்கை அரசாங்கம் கருத ஆரம்பித்தது. இலங்கைக்கு எதிராக ஆக்ரோஷமாகக் குரல்கொடுத்துவரும் நவநீதம்பிள்ளையை அமைதிப்படுத்த கொழும்பு அரசாங்கம் தீர்மானித்து நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.

இலங்கைக்கு நேரில் விஜயம் செய்து நிலைமையைப் பார்க்கும்படி நவநீதம்பிள்ளைக்கு கொழும்பு அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உத்தியோகபூர்வமாக அழைப்பு அனுப்பியது. அந்த அழைப்பை நவநீதம்பிள்ளை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், இலங்கைக்கு எதிரான கருத்துக்களை நவநீதம்பிள்ளை தொடர்ந்து வெளியிட்டு வந்தார்.

இப்பின்னணியில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இரண்டு அமர்வுகளில் இலங்கை அரசுக்கு எதிராக இரண்டு கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட அப்பிரேரணைகள் இந்தியாவின் மற்றும் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன.

போர்க்குற்றச்சாட்டுகள், மனதி உரிமை மீறல்கள், காணாமற் போனவர்களைக் கண்டுபிடித்தல் ஆகிய விவகாரங்களில் இலங்கை கண்ட முன்னேற்றங்கள் குறித்து 2014 மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஜெனீவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில்தான் 2011 ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு கொழும்பு அரசாங்கம் விடுத்த அழைப்பை மனித உரிமைகள் ஆணையாளர் நவிபிள்ளை 2013 மே மாதமளவில் ஏற்றுக்கொண்டார்.

இலங்கைக்கு விஜயம் செய்யத் தயார் என்று மனித உரிமை பேரவையின் இலங்கைத் தூதர் ரவிநாத் ஆரியசிங்க மூலம் கொழும்பு அரசுக்கு நவிபிள்ளை அறிவித்தார். விஜயத்தின்போது ஜனாதிபதி, சிரேஷ்ட நீதித்துறை அதிகாரிகள், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல் நடத்துவதற்காக அரசாங்கம் நியமித்த செயல்திட்டக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமுகப் பிரதிநிதிகள் ஆகியோரை நவிபிள்ளை சந்தித்து உரையாடுவார் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை விஜயம் குறித்து வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவிபிள்ளை இலங்கை வரப்போகின்றார் என்ற செய்தி கிடைத்ததும் இலங்கை அரசாங்கம் அதிர்ச்சியடைந்தது. உடனே காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணைனைகளை நடத்த மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழுவை ஜனாதிபதி நியமித்தார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணைகளை ஆறு மாத காலத்தினுள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். ஏன் இந்த அவசரம்? என்று மனித உரிமை ஆர்வலர்கள் கேட்கின்றனர்.

நவிபிள்ளையை தாஜா செய்து, அரசுக்கு சாதகமாக அறிக்கையை வெளியிட வைப்பதற்காகவா! ஆகஸ்ட் 25-31 வார கால விஜயத்தின் பின்னர் எதிர்வரும் செப்டெம்பர் நடுப்பகுதியில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. பேரவையில் இலங்கை விஜயம் பற்றிய வாய்மூல அறிக்கை ஒன்றை நவிபிள்ளை சமர்ப்பிப்பார். இலங்கை விஜயம் பற்றிய விரிவான இறுதி அறிக்கையை 2014 மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் 25 ஆவது அமர்வில் நவிபிள்ளை சமர்ப்பிப்பார்.

இறுதி அறிக்கை எவ்வாறு அமையும்? ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்தது போல இறுதிக்கட்ட யுத்தத்தில் இலங்கை அரசாங்கப் படைகளில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், , மனித உரிமை மீறல்கள் பற்றி இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நவிபிள்ளை மீண்டும் வலியுறுத்துவார் என்பது அவதானிகளின் கணிப்பாகும்.

நவிபிள்ளை தனது ஒருவார கால விஜயத்தை முடித்துக் கொண்டு ஜெனீவா திரும்புவதற்கு முன்னர் கொழும்பில் ஆகஸ்ட் 31 இல் நடத்தவுள்ள செய்தியாளர் சந்திப்பில் இறுதி அறிக்கை குறித்து மேலோட்டமாகக் குறிப்பிடலாம் என்பதே எதிர்பார்ப்பு.-



அநாமிகன்

# ஆடுகளுக்கான ஓட்டப்போட்டி

ஆடுகளுக்கான வருடாந்த ஓட்டப்போட்டி ஸ்கொட்லாந்தின் மொவ்வட் நகரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கோலாகலமாக இடம்பெற்ற இப்போட்டியில் பல உள்ளூர் இடையர்கள் பலரும் அவர்களது ஆடுகளைப் பந்தயத்தில் களமிறக்கினர். ஆடுகளின் முதுகில் அதனை ஒருவர் ஓட்டிச் செல்வது போல பொம்மைகளை இணைத்து ஓடுபாதையில் ஓடவிடப்பட்டது. இதன்போது வீதியின் இருபுறமும் நின்று பார்வையாளர்கள் அவற்றை உற்சாகப்படுத்தினர்.

இந்த ஆடுகளின் ஓட்டப்போட்டியில் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற வீ ஆர்ச்சீ எனும் ஆடு ஆண்டின் வேகமான ஆடாகத் தெரிவானது.

ஆடுகளுக்கான ஓட்டப்பந்தயம் கடந்த வருடம் முதன் முறையாக நடைபெற்றது. இதனை பல்லாயிரக்கணக்கானோர் கண்டு மகிழ்ந்தனர். அதேபோலவே இம்முறையும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.



# தொண்டா - திகா முறுகல் உக்கிரம்

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...!

அதை பொய்யாக்காமல் தமக்குள் இருந்து வந்த பனிப்போரை வன்முறையாக வெடிக்க வைத்து அமைச்சர் ஆறுமுகனும் திகாம்பரமும் அரசியல் முதிர்ச்சியை கேள்விக் குறியாக்கிவிட்டனர் என்பதே உண்மை.

கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது ம.ம.முன்னணியும், இ.தொ.காவும் நுவரெலியா மாவட்டத்தில் வெற்றிலைச் சின்னத்தில் களமிறங்கியிருந்தன. அப்போதும் இ.தொ.கா.விற்கும், ம.ம.முன்னணிக்குமிடையில் மிகப்பெரிய களேபரமே கொட்டகலையில் அரங்கேறியிருந்ததை இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

தேர்தல் காலத்தில் ஒரே கட்சி வேட்பாளர்கள் மத்தியில் விருப்பு வாக்கு போட்டி இருப்பது யதார்த்தமாயினும் விருப்பு வாக்குக்கு அப்பால் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் முகமாக திகா, தொண்டா தரப்பு மோதிக்கொண்டது அனைவர் மத்தியிலும் முகம் சுளிக்க வைத்துள்ளதுடன் கரும்புள்ளி நிகழ்வாகவும் பதிவாகியுள்ளது.

இ.தொ.கா.வின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்களான உதயா, ரமேஷ், சக்திவேல் ஆகியோர் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு உணவருந்திக் கொண்டிருந்தவேளை அங்குவந்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்கள் வாகனங்களை கற்களால் தாக்கியும் துப்பாக்கியால் சுட்டும் அராஜகம் செய்ததாக இ.தொ.கா. கூறுகின்றது.

இதை மறுத்துள்ள திகாம்பரம் எம்.பி. தமது வாகனங்களை இடைமறித்த இ.தொ.கா.வின் ஆதரவாளர்கள் காடைத்தனம் புரிந்ததாக தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் பகலில் நடைபெற்று முடிந்தாலும் இதன் தொடர்ச்சியாக திகாம்பரத்தின் அலுவலகம் தாக்கப்பட்டுள்ளதுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் சரஸ்வதி சிவகுருவின் வீடும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

இத்தாக்குதல்கள் அனைத்தும் இ.தொ.கா.வினை காடையர்களால் அரங்கேற்றப்பட்டுள்ளதாக திகாம்பரம் குற்றம் சுமத்துகின்றார். இத்தாக்குதல் விடயத்தை நான் இத்தோடு விடப்போவதில்லை. ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு செல்வேன். இராஜதுரை ஜீ.நகுலேஸ்வரன் ஆகியோர் எம்முடன் வந்து இணைந்ததை பொறுத்துக்கொள்ள முடியாததாலேயே இ.தொ.கா.வால் இவ் அராஜகம் நிகழ்த்தப்பட்டுள்ளது. ஆறுமுகன் தொண்டமான் தன் அடாவடித் தனத்தை இத்தோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் நாம் தேர்தல் மூலம் பதிலடி கொடுப்போம். மக்கள் இத் தேர்தலில் சரியான முறையில் இ.தொ.கா.விற்கு பதிலடி கொடுக்க வேண்டும் எனக் கொந்தளித்தார்.

இதேநேரம் இ.தொ.கா.வின் அலுவலகமும் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் புகைப்படமும் உடைக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலை திகாம்பரத்தின் ஆதரவாளர்களே மேற்கொண்டதாகத் தெரிவித்த அமைச்சர் ஆறுமுகன், திகாம்பரத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப் போவதாகவும் அமரர் சௌமியமூர்த்தியின் புகைப்படத்தை உடைத்த அவர்களுக்கு பாடம் புகட்டுவதாகவும் அறைகூவல் விடுத்துள்ளார்.

தொண்டமான், திகாம்பரத்தின் இந்த வன்முறைச் சம்பவங்களால் மலையக தேர்தல் களம் உக்கிரமடைந்துள்ளதுடன், பலரின் கேலிப் பேச்சுக்கு அவலாகவும் கிடைத்துள்ளது.

மலையகத்தில் நாகரீக அரசியல் மருவி அடாவடி அரசியல் மேலோங்கி வருவதாக விமர்சனம் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் திகா, தொண்டாவின் இச் செயற்பாடுகள் அதை உண்மையாக்குவது போலவே அமைந்துள்ளன.

அரசியல் முதிர்ச்சியற்ற இச் செயற்பாடுகளால் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை, தவிர்த்து வெறுப்பையே ஏற்படுத்தும். ஆக ஆளுக்காள் சேற்றை வாரி இறைத்துக்கொண்டு அடாவடித் தனத்தில் ஈடுபடும் திகா, தொண்டாவின் மோதல் செயற்பாடுகள் இத்தோடு நிறைவடையுமா அல்லது எதிர்வரும் நாட்களில் மேலும் உக்கிரமடையுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**எம்.தாசன்**

# பேய் பிசாசுகளை ஓட்ட உதவிய பொலிஸாரும் இராணுவத்தினரும்

## மட்டக்களப்பில் சம்பவம்!



பொலிஸார் பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குபவர்கள், பொதுமக்களின் பிணக்குகளை தீர்ப்பவர்கள். இதையும் தாண்டி பேய், பிசாசுகளை ஓட்டுவதற்கும் பொலிஸார் உதவிய சம்பவம் மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமமொன்றில் வசிக்கும் குறித்த ஒரு குடும்பத்தில் நீண்டகாலமாக பிரச்சினை இருந்து வந்துள்ளது.

இக்குடும்பத்தில் 5 பேர் வசிக்கின்றனர். இவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுதல், பேய் பிடித்தது போல் தன்னை மறந்து ஆடுதல் போன்ற பிரச்சினைகளை நீண்டகாலமாக எதிர்நோக்கி வந்துள்ளனர். இதனால் இக்குடும்பத்தின் நிம்மதியும், அன்றாட வாழ்க்கையும் சீர்குலைந்துள்ளது.

மந்திரவாதிகளினால் ஏவப்பட்ட பிசாசுகளினால்தான் இவ்வாறு துன்பங்கள் ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேசத்திலுள்ள பலரும் நம்புகின்றனர்.

இக்குடும்பத்தினர் பூசகர்கள், மந்திரவாதிகளிடம் சென்றும் எவ்வித பலனும் ஏற்படவில்லை.

இக்குடும்பத்தின் நிலைமை குறித்து அறிந்துகொண்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இக்குடும்பத்திற்கு உதவ முன்வந்தனர்.

அதன் பொருட்டு பிரபல்யமிக்க மாவத்தகம ஆனந்த பிக்கு மற்றும் அநுத்கம பன்சாரே பிக்கு ஆகியோரை அழைத்து வந்து பூசை வழிபாட்டினை மேற்கொண்டனர்.





# கவிதைகள்

## நிம்மதியாக வாழவிடு

தொலை பேசி தொடர்பாடல் -ஏன்
என்னைத் தொந்தரவு செய்கிறாய்...?
உன் உறவு வேண்டாமென நான்
உண்மையை கூறிவிட்டேன்
மறந்து விடு எம் மாயா ஜாலக்
காதலை-அல்லது
நிறுத்திவிடு உன் தொலைபேசி தொடர்பினை
கனிவாக பேசினாலும்
கரையாது எனதுள்ளம்
கடல் போன்ற உன் ஆசை
கனவு தானென்று புரியாதா?
படித்த வாலிபனே பண்போடு
வாழ வழி தேடு
வாழும் வயதினிலே -வீண்
வம்புகளைத் தேடாதே
நித்தம் நித்தம் பேசினாலும்
நீ நினைப்பது நடக்காது
நிச்சயமாக மறந்துவிடு - என்னை
நிம்மதியாக வாழவிடு!

ஆர்.பி.எஸ்.மணியம், கொட்டகலை.

## நண்பேண்டா!

அன்பின் அன்னையாய்
அரவணைப்பில் தந்தையாய்
தோள் கொடுப்பதில் தோழனாய்
கஸ்டத்தில் கடவுளாய்
அறிவுரை சொல்வதில் ஆசானாய்- இருக்கும்
நீ என் நண்பேண்டா

எம்.எப்.மொஹம்மட் பர்ஷான்.



## காகித உறை

நாம் காதலித்த நாட்களை
மீட்டிப் பார்க்கிறேன்
நீ அன்பாய் பேசிய வார்த்தைகளையும்
நம் எதிர்காலக் கனவுகளையும்
கொடுமையான விதி அரக்கத் தனமாய்
பறித்துச் சென்றுவிட்டதே
நம் காதல் படிக்கப் படாத புத்தகமாய்
பூட்டி வைக்கப்பட்டு விட்டதே
நாம் சந்தித்த முதல் நாளில்
விண்ணைத் தொட்ட நம் கனவுகள்
ஊமையின் ராகங்களாய்
ஓசையற்றுப் போனதே
என் டயரிக்குள்ளே மறைத்து
வைக்கப்பட்டிருக்கும்
நீ தந்த கடிதத்தின்
காகித உறை மட்டுமே
நம் காதலின் அடையாளமாய்
இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறது

ஏ.எம்.எஸ்.நிஷா,ஓட்டமாவடி-01

## ஏன் முடியவில்லை

சகதியில்
வாழ்ந்தாலும்
தாமரை
தன் நிலையில்
மாறுவதில்லை!
முட்களுடன்
மூச்சு விட்டாலும்
ரோஜாவின்
மென்மை, தரம்கெட்டுப்
போவதில்லை!
தீக்குளித்து
மீண்டாலும்
திரும்பிப் பார்ப்பதில்லை
பீனிக்ஸ் தன்
கடந்த காலத்தை!
பசி வந்தால்
பாதை மாறி,
கோபம் வந்தால்
குணம் மாறி
ஆசைக்குப்
பலியாகும்
ஆறறிவு மனிதனே!
இயற்கையை
இரசிக்கத்தெரிந்த
உன்னால்
இயற்கையைப்பார்த்து
வாழ மட்டும்
முடியவில்லையே?

நா.ஜெயபாலன், பிறிஸ்ஸல்.

## இன்புறும்

பள்ளியை நிறுத்தினாலும்
படிப்பதை நிறுத்திடாதீர்!
அள்ளியே நல்ல நூல்கள்
அனைத்தையும் விழுங்கப்பாரீர்!
பிள்ளைபோய்க் கிழவரான
பின்னரும் நிறுத்திடாதீர்!
தெள்ளிய தமிழாலான
திருக்குறளேனும் பாரீர்!

இரவிலே துயிலு முன்பும்
எழுந்துகண்துடைத்த பின்பும்
இருகுறளேனும் பாரீர்,
எம்.மு.வ.உரையினோடும்!
பொருளொடும் பாடமாக்கி
பொன்னென நெஞ்சில் வைமின்!
இருளறும் ஒளி பெருக்கும்
இன்புறும் வாழ்வுதானே!

தாமரைத்தீவான் ஈச்சந்தீவு-கிண்ணியா.

## ஏன் பிடிக்கவில்லை!

உனக்கு என் சிரிப்பைப் பிடித்தது
என் கண்ணைப் பிடித்தது
என் மனதைப் பிடித்தது இறுதியில்
என்னிடம் இருக்கும் எல்லா
விடயத்தையும் பிடித்தது - ஆனால்
ஏன் என் காதலை மட்டும்
பிடிக்கவில்லை என் உயிரே!

சபீஹா பைசர், ஆமர்வீதி, கொழும்பு-12

## உன் முகவரி

கனவுகள் தொலைந்து போன
உன் முகம் எண்ணி எனக்குள்
நான் தொலைந்து போனேன்
இரவுகள் எத்தனையோ!
ஆனால் சொல்ல வந்த வார்த்தைகளோ
கலங்கிப் போனதுண்டு - சில
நிமிடம் இடிந்துபோனதுண்டு - என்
முகவரி தந்து உன் முகவரியை
தொலைத்துக் கொண்டாயே!
என் முகத்தை கூட பாராமல்
சட்டென மறைந்தாயே!
ஏனடி?

க.ஜெயந்தன், வட்டவளை.

## மூன்று

அம்மா எனும் மூன்றெழுத்தில் பிறந்து
அப்பா எனும் மூன்றெழுத்தால் வளர்ந்து
பள்ளி எனும் மூன்றெழுத்தில் சேர்ந்து
கல்வி எனும் மூன்றெழுத்தைக் கற்று
நட்பு எனும் மூன்றெழுத்தை அடைந்து
வாழ்வு எனும் மூன்றெழுத்தில் முன்னேறி
பிணம் எனும் மூன்றெழுத்தால் மறைந்தேன்

ஆர்.ரொசினி எனிக், உடப்புஸ்ஸலாவ.

உதய சூரியன் "கவிதைச்சரம்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:------------------------------
முகவரி:------------------------------
தொலைபேசி இல------------------------

# சொல்லாமல் கொள்ளாமல் ஒரு பாரிய சுரண்டல்!



## அறிந்தால் அதிர்ச்சி அடைவீர்கள்!

பெருந்தோட்டங்களை தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கியது முதல் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கும் முறைமை நடைமுறைக்கு வந்ததன் பின்னர் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

பெருந்தோட்டக் கம்பனிகளைப் பொறுத்தவரை தோட்டத் தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து எந்த வகையிலாவது தாம் இலாபத்தை எட்ட வேண்டும் என்ற நோக்கோடு செயற்படுவதாலும் தோட்டத் தொழிலாளர்களை அன்றாடம் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்களாக மாத்திரம் கணக்கில் கொள்வதாலும் தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்தம் தொழில் ரீதியான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் தோட்ட நிர்வாகங்கள் பல்வேறு வகையிலும் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டவே பார்க்கின்றன. அதாவது கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட சம்பள உயர்வின் பயனை தோட்டத் தொழிலாளர்கள் அனுபவிக்க முடியாதளவில் வேலை நாட்களை குறைப்பது, கொந்தராத்து அடிப்படையில் அல்லது கைக்காசுக்கு வேலைகளை வழங்குதல், தற்கால ஊழியர்களை தோட்டத் தொழிலில் ஈடுபடுத்துவது என பல தந்திரோபாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தோட்டத் தொழிலாளர்களிடம் தோட்ட நிர்வாகம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில் பெரும்பாலான தோட்டங்களில் தொழிலாளர்களுக்குத் தெரியாமலே கொழுந்து நிறுவையில் மோசடி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் வருடாந்தம் பல பெருந்தோட்டத்துறை சார்ந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் மில்லியன் கணக்கான தேயிலைக் கொழுந்து அவர்களுக்குத் தெரியாமலேயே சுரண்டப்படுகின்றது.

இவ்விடயம் சம்பந்தமாக மேலும் தெரியவருவதாவது பெரும்பாலான தோட்டங்களில் நிறுவைக்காக பயன்படுத்துகின்ற தராசுகளில் நிறுவை சமனிலையற்று காணப்படுவதாகவும், அதனால் ஒன்று தொடக்கம் மூன்று வரையான கிலோ தேயிலைக் கொழுந்தை குறைத்துக் காட்டுவதாகவும் தொழிலாளர்களிடம் கூறப்படுகின்றது.

அதாவது பெரும்பாலான தோட்டங்களில் வருடந்தோறும் தராசுக்காக பிரதேச சபைகளினால் நிறுவை சம்பந்தமாக உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வது இல்லை எனவும், அவ்வாறு நிறுவை அனுமதிப்பத்திரம் பெறும் ஒருசில தோட்டங்களில் பின்னர் தராசுகளின் நிறுவையில் மாற்றம் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு மறைமுகமாகவும் நேரடியாகவும் தொழிலாளர்களின் கொழுந்து நிறுவையில் மோசடி செய்யப்படுகின்றது.

**வருடமொன்றுக்கு குறைந்தபட்சம் 2880 கிலோ கொழுந்தை மோசடி செய்யும் தோட்ட நிர்வாகம்**

இவ்வாறான மோசடிகள் இடம்பெறும் அதேவேளை, தோட்டங்களிலிருந்து தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படும் கொழுந்தும் சரியில்லை என கொழுந்தின் நிறையை குறைப்பதாகக் கூறி தொழிலாளர்களின் கொழுந்துகளில் ஒன்று தொடக்கம் நான்கு கிலோ வரை குறைத்தே கணக்கில் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உதாரணமாக ஒருவர் 10 கிலோ கொழுந்து பறித்தால் தராசு நிறுவையில் 2 கிலோ, கொழுந்து சரியில்லை அல்லது ஏனைய காரணங்களைக் கூறி 2 கிலோவும் பிடிக்கப்பட்டால் அவரின் கொழுந்து ஆறு கிலோவாகவே பதியப்படும். அவ்வாறு பார்க்கின்றபோது ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் கொழுந்து நிறுக்கப்படுவதால் கிட்டத்தட்ட 12 கிலோவரை ஒரு தொழிலாளியிடம் மோசடி செய்யப்படுகின்றது. இதில் ஒரு தோட்டத்தில் 100 தொழிலாளர்கள் என்றால் 1200 கிலோ பெறப்படுகின்றது. (சாதாரணமாக ஒரு தோட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் காணப்படுகின்றனர்) இதில் 20 நாட்கள் ஒருவருக்கு வேலை வழங்கப்பட்டால் அவரிடம் மாதாந்தம் 240 கிலோவும், வருடாந்தம் அண்ணளவாக 2880 கிலோவும் மோசடி செய்யப்படுகின்றது.

இதை நூறு தொழிலாளர்களுக்கு கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, வருடத்திற்கு இரண்டு இலட்சத்து எண்பத்து எட்டாயிரம் கிலோ சுரண்டப்படுகின்றது. இதை பல ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களுடன் கணக்கிட்டுப் பார்க்கும்போது வருடாந்தம் மில்லியன் கிலோ கணக்கான தேயிலைக் கொழுந்து தோட்டங்களுக்கு இனாமாக பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

மேலும் தொழிலாளர்கள் பறித்த கொழுந்து சரியில்லை என்று தொழிற்சாலைகளில் நிராகரிக்கப்படுகின்ற கொழுந்து தோட்டங்களுக்கு திருப்பி அனுப்பப்படுவதும் இல்லை. மாறாக அந்தத் தேயிலை தளிர்களும் உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்படவே செய்கின்றன. அவ்வாறெனின் ஏன் தோட்டத் தொழிலாளர்களின் நிறுவையில் குறைப்புச் செய்யவேண்டும்? அத்தோடு ஒரு தோட்டத்தில் இருந்து தொழிற்சாலைக்கு அனுப்பப்படும் கொழுந்தின் மொத்த நிறை 100 கிலோ என்று வைத்துக்கொண்டால் அதில் 20 கிலோ கொழுந்து சரியில்லை என தொழிற்சாலை உத்தியோகத்தரால் நிராகரிப்பட்டால் அந்த இருபது கிலோவும் மீண்டும் தோட்டங்களுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும். அதை அன்றைய தினம் கொழுந்து பறித்த தொழிலாளர்களிடம் சராசரியாக குறைப்பு செய்யலாம். அதாவது 20 தொழிலாளர்கள் கொழுந்து பறித்தால் ஆளுக்கு ஒரு கிலோ வீதம் குறைக்கலாம்.

அதைவிடுத்து தேயிலைத் தொழிற்சாலைக்கு கொழுந்து அனுப்புவதற்கு முன்னரே கள உத்தியோகத்தர்களும், நிறுவையில் ஈடுபடுபவர்களும் அவர்கள் நினைத்தபடி தொழிலாளர்களின் கொழுந்து நிறுவையில் கைவைப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். இதனால் முற்று முழுதாக பாதிக்கப்படுவது கொழுந்து பறிப்பில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களேயாவர்.

மேலும் இவ்வாறு மோசடி செய்யப்படும் கொழுந்தில் இருந்து ஒருசில கள உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (கணக்குப்பிள்ளை) கொமிசன் அடிப்படையில் வேலைக்கு வராதவர்களுக்கு பேர் போடுவதற்கும், தமக்கு வேண்டப்பட்டவர்களுக்கு கொழுந்து நிறுவையை அதிகரித்து மேலதிகக் கிலோவாக போடுவதன் ஊடாகவும் கொமிசன் பெற்றுக்கொள்ளும் நடைமுறை காணப்படுவதாகவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலான தோட்டங்களில் இவ்வாறான மோசடி வேலைகளில் ஈடுபடாமல் மக்கள் நலன்கருதி சிறப்பாக செயற்படுகின்றபோதும் ஒரு சில தோட்ட நிர்வாகமும், உத்தியோகத்தர்களும் இவ்வாறு தொழிலாளர்களை சுரண்டி பிழைப்பது மிக மோசமான விடயமாகும்.

எஸ்.சந்திரமோகன்

தொடர்ச்சி 29 ஆம் பக்கம்

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

### 22.08.13 முதல் 28.08.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | வெற்றி | உழைப்பு | வெற்றி | பொறாமை | மேன்மை | சுகம் | தனம் |
| ரிஷபம் | பீடை | மேன்மை | நலம் | பயம் | நேர்மை | நட்பு | நலம் |
| மிதுனம் | தாமதம் | நட்பு | பணிவு | ஆதரவு | சிந்தனை | வரவு | ஊக்கம் |
| கடகம் | நன்மை | புகழ் | மறதி | எதிர்ப்பு | அனுகூலம் | பக்தி | புகழ் |
| சிம்மம் | வரவு | நன்மை | நிம்மதி | தடங்கல் | உழைப்பு | வெற்றி | இலாபம் |
| கன்னி | பயம் | தெளிவு | வரவு | ஆதாயம் | சோதனை | பரிசு | பெருமை |
| துலாம் | சுபம் | நலம் | பெருமை | சாதனை | வெற்றி | பயம் | கவனம் |
| விருச்சிகம் | அச்சம் | பரிசு | சோதனை | பக்தி | போட்டி | பாராட்டு | மகிழ்ச்சி |
| தனுசு | இரக்கம் | இலாபம் | புகழ் | பணிவு | உறுதி | பொறாமை | கீர்த்தி |
| மகரம் | நட்பு | போட்டி | நற்செயல் | இலாபம் | ஓய்வு | ஆதரவு | மறதி |
| கும்பம் | ஆதரவு | ஓய்வு | கவனம் | மறதி | கவனம் | புகழ் | இன்பம் |
| மீனம் | இலாபம் | ஆதரவு | எதிர்ப்பு | நன்மை | நட்பு | போட்டி | இரக்கம் |

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

பசறை பிரிவிற்குட்பட்ட கிக்கிரிவத்தை எரோஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, இம்மாதம் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இச் சுற்றுப்போட்டியில் முதலாம் பரிசு 25,000 ரூபா, 2 ஆம் பரிசு 15,000 ரூபா, 3 ஆம் பரிசு 10,000 ரூபா என பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

கிக்கிரிவத்தையில் இடம்பெறவுள்ள இச் சுற்றுப் போட்டியின் நுழைவுக்கட்டணமாக 1500 ரூபா அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கான பதிவினையும், போட்டி தொடர்பான மேலதிக விபரங்களையும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

கே.ஜஸ்டின் - 077 2582229
வி.ரொஹான் - 077 6657330
ஆர்.தனராஜா - 072 8125500

## சொல்லாமல் கொள்ளாமல்

28ஆம் பக்கத் தொடர்ச்சி...!

இவ்வாறு தமக்கு இடம்பெறும் அநீதி பெரும்பாலான தொழிலாளர்களுக்கு தெரிந்திருந்தும் அவர்கள் அதை தட்டிக் கேட்காமல் மௌனமாக இருப்பதும், தொழிலாளர்களின் பிரச்சினைகளை பேசவேண்டிய தோட்டக் கமிட்டித் தலைவர்கள் சுயலாபத்திற்காக தோட்ட நிர்வாகங்களுக்கு வக்காலத்து வாங்குவதுமே இந்த நிலைமை தொடர்வதற்கான காரணங்களாகும்.

ஆகவே, தோட்டங்களில் தேயிலை கொழுந்து நிறுக்கும் தராசுகளின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். உரிய தராசுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் பெறப்படுகின்றதா? என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். அத்தோடு, திடீரென தராசுகளின் நிறுவையை பரிசீலிப்பதற்கான வாய்ப்பை தொழிற்சங்க பிரதிநிதிகள், தோட்டக் கமிட்டித் தலைவர்கள் போன்றோருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். அது மட்டுமன்றி தொழிற்சாலைகளில் நிராகரிக்கப்படுவதாக கூறப்படும் கொழுந்துகள் மீண்டும் தொழிலாளர்களுக்கு காண்பிக்கப்பட வேண்டும். அவற்றை மீள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு இல்லாமல் தேயிலைக் கொழுந்து குறைந்துள்ள இந்த காலகட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் சிரமப்பட்டு எடுக்கும் கொழுந்தினை சுரண்டி அவர்கள் வயிற்றில் அடிப்பது எந்தவகையில் நியாயம்? ஆகவே மலையக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இவ்விடயத்தில் தமது மௌனத்தை களைந்து தமக்கு எதிரான இவ்வாறான அநீதிக்கு குரல்கொடுக்க முன்வரவேண்டும்.

## அரசியல் மாற்றத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரியுங்கள்

இன்று மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்ட முடியாத, தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமையே மலையக அரசியல்வாதிகளிடம் காணப்படுகின்றது. மக்கள் தமக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்தும் இந்தத் தேர்தலில் அரசியல் மாற்றம் ஒன்றிற்காக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க முன்வரவேண்டுமென அதன் வேட்பாளரும் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினரும், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பிரதிச் செயலாளருமான எம்.இரவீந்திரன் தெரிவித்தார்.

ஐக்கியத் தேசியக் கட்சியின் தோட்ட, மாவட்ட கமிட்டித் தலைவர்களுக்கான கூட்டம் அக்கரப்பத்தனை, ஹோல்புரூக், தலவாக்கலை



காரியாலயங்களில் அண்மையில் இடம்பெற்ற போது கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்; நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சிக்கென ஒரு வாக்கு வங்கி உள்ளது. நான் கடந்த இருபது வருடங்களாக கட்சிமாறாமல் செயற்பட்டு வருகின்றேன்.

நாம் தேர்தல் காலங்களில் மாத்திரம் வந்து மக்களை எட்டிப்பார்க்கின்ற அரசியல்வாதிகளல்ல. இந்த மக்களின் பிரச்சினைகளை கடந்த காலங்களில் ஒரு தேசிய கட்சி என்ற அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளோம்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கச் செய்வதற்காக பல்வேறு கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மை மக்களின் நலனுக்காக தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.

இன்று பல அரசியல்வாதிகள் ஐக்கிய தேசியக் கட்சியினூடாக வெற்றிபெற்றே ஆளுந்தரப்பிலுள்ளனர். இன்று தோட்டப்புற மக்களின் பிரச்சினைகள், நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதேயொழிய குறையவில்லை. எனவே இன்று மாற்று அரசாங்கம் ஒன்று தேவைப்படுகின்றது.

வேட்பாளர்களாக போட்டியிடும் நான், நுவரெலியா மாநகரசபை உறுப்பினர் நேருஜி, தலவாக்கலை லிந்துலை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் லெ.பாரதிதாசன் ஆகியோர் தொடர்ந்து மக்களின் ஆதரவை பெற்று வருகின்றவர்களாக உள்ளோம்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்படுவதாலும், குரல்கொடுப்பதாலுமேயே எம்மை நம்பி வாக்களித்தீர்கள். எனவே எதிர்வரும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் எமது கட்சிக்கு ஆதரவை வழங்குவதனூடாக மாற்று அரசியல் நடவடிக்கை ஒன்று தேவை என்ற செய்தியை வழங்க வேண்டும். வடக்கு மக்களைப் பொறுத்தவரையில் ஒன்றுபட்ட சக்தி என்பதனை காட்டத் தயாராகிவிட்டனர். மலையக மக்களும் ஒன்றுபட்ட சக்தியினூடாக எம்மை வெற்றியடையச் செய்ய வேண்டுமென அவர் தெரிவித்தார்.

**கொட்டகலை நிருபர்**

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

ஒரு பெரிய அடுக்குமாடிக் குடியிருப்பு. அதில் கீழ்த்தளத்தில இருக்கிறவருக்கும் 15ஆவது மாடியில் இருக்கிறவருக்கும் ஆகவே ஆகாது. எப்பப் பார்த்தாலும் சண்டைதான். குப்பை போடுறதுல இருந்து கார் பார்க்கிங் வரை எதுக்கு எடுத்தாலும் சண்டைதான்.

மேல் வீட்டுக்காரன் பார்த்தான், இவனை எப்படியாவது பழி வாங்கணும்னு முடிவு பண்ணி கீழ் வீட்டுக்காரன்கிட்ட "நாம ரெண்டு பேரும் ஒரே பிளாட்ல இருந்துக்கிட்டு எதுக்கு எடுத்தாலும் சண்டை போடறது நல்லா இல்லை. நாம ரெண்டுபேரும் இனி ப்ரண்ட்ஸ். அதைக் கொண்டாட ஞாயிற்றுக்கிழமை நீ என் வீட்டுக்கு விருந்துக்கு கண்டிப்பா வரணும்" அப்படின்னு சொன்னான். கீழ் வீட்டுக்காரனும் ஒத்துக்கிட்டான்.

ஆனாலும், இவனுக்கு ஒரு ஐடியா. இவனை நாம எப்படியாவது பழி வாங்கணுன்னு முடிவு பண்ணி சனிக்கிழமை மத்தியானத்தில இருந்தே சாப்பிடலை. ஞாயிற்றுக்கிழமை நாம சாப்பிடற சாப்பாட்டுலயே அவன் செலவு அதிகமாகி மயக்கம் போடணும் அப்படிங்கறதுதான் இவன் பிளான்.

ஞாயிற்றுக்கிழமை வந்துச்சு. இவனும் காலையிலேயே அவன் வீட்டுக்குப் போக லிப்ட் கிட்ட போனான். அது அன்னிக்கு வேலை செய்யலை. இது மேல் வீட்டுக்காரனுக்கு தெரிஞ்சுதான் அன்னிக்குனு பார்த்து சாப்பிடக் கூப்பிட்டிருக்கான். இவனும் விடல. லிப்ட் வேலை செய்யாட்டி என்ன நாம படி ஏறிப்போனா இன்னும் பசிக்கும். இன்னும் நிறைய சாப்பிடலாம் என்று இவன் படியேறிப் போறான். அங்க போனா வீடு பூட்டி கிடக்கு. கதவுல ஒரு பேப்பர் ஒட்டி இருக்கு. இவன் என்னன்னு படிச்சா... அதுல...

"நன்றாக ஏமாந்துவிட்டாயா முட்டாள்" அப்படின்னு எழுதி இருக்கு. இவனுக்கு செம அசிங்கமா போச்சு. அப்படியே ஆத்திரம் ஆத்திரமா வருது. பசி வெறி வேற. நாம ஏமாறலைங்கிறத அவனுக்கு தெரியப்படுத்தணும்னு முடிவு பண்ணி பேனா எடுத்து அந்த பேப்பர்லயே பெருசா...

"என்னை முட்டாளாக்க நினைச்ச நீதாண்டா முட்டாள். ஏன்னா நான் வரவே இல்லையே" அப்படின்னு எழுதிட்டு வந்துட்டான்.

## இதற்கு பதில் உண்டா?

கழுத்தில் சிலுவை அணிந்தால் கிறிஸ்தவன்.
நெற்றியில் பட்டை இட்டால் இந்து.
தலையில் குல்லா அணிந்தால் இஸ்லாமியன்.
ஒருவனே கடவுள் என்றால் பக்திமான்.
கடவுள்களே இல்லையென்றால் நாத்திகன்.
இப்படி அடையாளங்களோடு வாழும் மனிதர்களே!!!
எதனை இட்டுக் கொண்டால்,
அணிந்து கொண்டால்
நீங்கள் மனிதர்கள் என்று
அழைக்கப்படுவீர்கள்...?

## இது எப்படி இருக்கு?

ஒரு தேசத்தில் சிகரட் விற்பனை கிடையாது. யாரும் குடிப்பதும் கிடையாது.

அந்த சிகரட் கம்பனி ஒரு ஆளை வேலைக்கு சேர்த்தது. அவனோ பிரசார உத்தியை கையாண்டான். அதாவது,

ஒரு விளம்பரம் செய்தான்.

சிகரட் குடித்தால்...!

1. திருடன் உங்கள் வீட்டுக்கு வரமாட்டான்.
2. உங்களுக்கு முதுமையே வராது.
3. பெண் குழந்தை பிறக்காது.

இந்த விளம்பரத்தைப் பார்த்து எல்லோரும் சிகரட் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த தேசத்தில் இருந்த சமூக ஆர்வலர் இந்த கதை தவறு என்பதை நீரூபிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

சிகரட் விற்பனை பிரதிநிதி நீதிமன்றத்தின் முன் ஆஜராகி நீதிபதியிடம் விளக்கம் அளித்தார்.

"இப்படி ஒரு கருத்தை விளம்பரம் செய்துள்ளாய் அறிவியலுக்கு ஏற்றதாய் இது இல்லையே" என்று நீதிபதி கேட்டார்.

அதற்கு அவன் சொன்னான் "முதலில் நான் என்ன சொன்னேன்"

"திருடன் உங்கள் வீட்டுக்கு வரமாட்டான்"

"ஆமாம் வரமாட்டான்... காரணம் எப்பொழுது சிகரட் குடிக்க ஆரம்பித்து விட்டார்களோ அப்பொழுதே இருமல் வந்துவிடும். இருமிக் கொண்டே இருப்பதால் இவர்களுக்கு தூக்கம் வராது. முழித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று திருடன் வரமாட்டான்"

"2 ஆவதாக என்ன சொன்னேன்?"

"முதுமையே வராது"

"எப்படி வரும் சிகரட் குடித்தால் இளமையிலே செத்துவிடுவான். பிறகு எப்படி முதுமை வரும்?"


3 ஆவதாக என்ன சொன்னேன்? பெண் குழந்தை பிறக்காது.

எப்படிப் பிறக்கும்? சிகரட்டில் நிக்கோடின் எனும் நச்சுத் தன்மை இருப்பதால் மலட்டுத் தன்மை வந்துவிடும். பிள்ளை பேறே இருக்காது இதில் ஆண் என்ன? பெண் என்ன? பிள்ளையே பிறக்காது"

இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்களேன்.



## இதெப்படி இருக்கு



மனைவி: ஏங்க, ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணணும்னு சொல்வாங்க. நம்ம கல்யாணத்துக்கு எத்தனை பொய் சொன்னீங்க?

கணவன்: ஒரே ஒரு பொய்தான் சொன்னேன்

மனைவி: அப்படியா? என்ன பொய் சொன்னீங்க?

கணவன்: வேறென்ன? உன்னைப் பிடிச்சுருக்குன்னு ஒரே ஒரு பொய்தான் சொன்னேன்.

## முடியாது

பெத்த பொண்ணுக்கும், பரீட்சை பேப்பர்க்கும் ஒரு ஒற்றுமை இருக்கு. அது என்ன தெரியுமா??

ரெண்டையுமே கட்டி கொடுக்கிறவரைக்கும் ஒரே டென்ஷன், தலைவலி தான்...

பெத்த பையனுக்கும், பரீட்சை பேப்பருக்கும் உள்ள ஒற்றுமை என்ன தெரியுமா??

இரண்டையுமே திருத்தவே முடியாது...

முடியுமா என்பது முட்டாள்தனம்:
முடியாது என்பது மூடத்தனம்.
முடியும் என்பதே மூலதனம்.

## புரிந்தால் சரி

வயிறோடு சுமந்த
போதும்
வலிக்கவில்லை
முதுகோடு ஏறியபோதும்
பாரமாகவில்லை – நீ
மனதோடு என் இறுதி வரை
உனை நான் சுமக்க,
வார்த்தைகளில் கூட
வலிக்கிறதாடா மகனே
உனக்கு... என்னை
அம்மா என்று அழைக்க



## காலம் மாறிப் போச்சு




* மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல. குறைகாண்பவனும் ஆவான். பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன். தன் குறையைக் காண்பவன் முழு மனிதன்.

* ஒரு தோல்வியிலிருந்து இன்னொரு தோல்விக்கு உற்சாகம் குறையாமல் செல்வதே வெற்றி.



# கவி...தா....!

மனிதன் இறந்தபின் அவன் உயிரானது அடையும் நிலையே ஆவிநிலை எனப்படுகிறது. இந்த ஆவி நிலையில் அவனுக்கு புலன்களின் உதவி தேவைப்படுவதில்லை. காலம், இடம், நேரம் என அனைத்தையும் கடந்த இந்த ஆவிகளால் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் தோன்ற முடியும். தங்களது சக்திகளுக்கு ஏற்ப இவ்வகை ஆவிகள் பிறர் மனத்தில் தாக்கங்களை ஏற்படுத்த முடியும் என்கிறது ஆய்வு.

அவள் பெயர் கவிதா.

டிக்கோயாவில் உள்ள அவளது மாமா வீட்டில் தங்கி அட்டனில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்தாள். அந்த தொழிற்சாலையில் மொத்தம் 350 பேர் வேலை செய்தார்கள். அதே தொழிற்சாலையில் தான் சிவாவும் வேலை செய்தான்.

சிவா, கவிதா இருவரும் ஒரே தோட்டத்தில்தான் வசிக்கிறார்கள். இருவரும் பஸ் ஏறும் இடமும் தொழில் செய்யும் இடமும் ஒன்று என்றபடியால் இருவருக்கும் நல்ல பழக்கம்.

ஒரு நாள் சிவா, கவிதாவை காதலிப்பதாகக் கூறினான். கவிதா மறுத்தாள். ஆனாலும் சிவாவுடனான நட்பைத் துண்டித்துவிடவில்லை.

ஒருநாள் கவிதாவின் மாமா இவர்கள் இருவரையும் அட்டன் டவுனில் கண்டுவிட்டார்.

விசாரித்ததில் சிவா, கவிதாவை காதலிப்பதாகக் கூறினாள்.

உடனே கவிதாவின் அம்மாவிற்கு போன் செய்து வரவழைத்தார் மாமா. கவிதாவின் அம்மாவும் அவளது அண்ணன் சண்முகமும் வந்தார்கள்.

கவிதாவிடம் "நீ உடனே எங்களோடு ஊருக்கு வா" என்றார்கள். கவிதா மறுத்தாள்.

சிவாவை தான் காதலிக்கவில்லை. இருவருக்குமிடையில் இருப்பது வெறும் நட்புத்தான் என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

"சிவா சாதி கொறஞ்சவன். அதனால உங்கள சேத்து வைக்க முடியாது. இதெல்லாத்தையும் மறந்திடு" என்றான் அண்ணன் சண்முகம்.

மறுநாள் கவிதா பஸ்டேண்டில் சிவாவைப் பார்த்து விசயத்தைச் சொன்னாள். அந்த நேரம் கவிதாவின் மாமாவும் அவள் அண்ணன் சண்முகமும் டவுனுக்குப் போய்விட்டு பஸ்ஸில் வந்து இறங்கினார்கள்.

அந்தநேரம் இவர்கள் இருவரையும் கண்டதும் கோபமடைந்த சண்முகம் சிவாவை ஏசினான். வெறும் வாய்ச் சண்டை கடைசியில் கைகலப்பாகி பொலிஸ் வரை சென்றுவிட்டது.

சண்முகம் பிரச்சினை இவ்வளவு தூரத்திற்கு வளர்ந்த பிறகு சும்மா இருக்கக்கூடாது என நினைத்து உடனே கவிதாவிற்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தான். இதில் கவிதாவிற்கு எந்த உடன்பாடும் இல்லை. மாப்பிள்ளை வீட்டாரும் வந்தார்கள். பெண் பார்த்து நிச்சயத்திற்கு நாள் குறித்தார்கள்.

நிச்சயதார்த்தமும் நடந்தது! இவை எல்லாமே கவிதாவின் சம்மதமின்றி நடந்தேறியது.

மறுநாள் சிவா குடித்துவிட்டு கவிதாவின் வீட்டுக்கு வந்து சண்டைபிடித்தான். கவிதாவின் நிச்சயதார்த்தம் நடக்கக்கூடாது என்றும், கவிதாவை தனக்கு கல்யாணம் செய்து வைக்கும்படியும் கேட்டான்.

அதன்பின் கவிதா இந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்த எவ்வளவோ போராடிப் பார்த்தாள் முடியவில்லை.

நிச்சயதார்த்தமும் முடிந்தது. அன்று இரவு 1.45 மணியளவில் யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்த சண்முகம். ஆ.... என்று அலறினான். வாசலில் சிவா நஞ்சருந்தி மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த கவிதாவின் இதயம் அப்படியே நின்றுவிடும் போல் இருந்தது. உடனே சிவாவைக் காப்பாற்ற ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வாகனத்தை கொண்டுவந்துவிட்டு சிவாவைத் தூக்கினார்கள். உடலில் எந்த அசைவும் இல்லை.

சிவாவின் உயிர் கவிதாவைப் பார்த்த வண்ணம் பிரிந்தது.

இதைக் கண்ட கவிதா அதிர்ச்சியில் சிலையானாள்.

எல்லாம் கனவு போல நடந்து முடிந்தது.

சிவாவை புதைத்த அன்றிரவு.

கவிதாவின் வீட்டு வாசலில் யாரோ முனகும் சத்தம் தெளிவாகக் கேட்டது.

கவிதா....! கவிதா....! என்று சிவா கூப்பிடுவது போல் இருந்தது.

திடீரென்று வீட்டுக்குள் இருந்த பெரிய கண்ணாடி சுக்குநூறாகக் கீழே வந்து விழுந்து நொருங்கியது.

வீட்டில் உள்ள அனைவரும் அதிர்ந்து போனார்கள். கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த கவிதா திடீரென்று கத்தினாள். யாரோ தன் கையைப் பிடித்து இழுப்பதுபோல் இருக்கிறது என்றாள்.

சண்முகம் ஓடிச்சென்று விபூதி எடுத்துவந்து கவிதாவின் நெற்றியில் வைத்தான்.

அன்று இரவு விடியும் வரை யாருக்கும் தூக்கம் இல்லை. மறுநாள் இரவும் வந்தது.

யாரும் தூங்காமல் விழித்திருந்தார்கள். மணி 1.45 க்கு சண்முகத்தின் காலை யாரோ சுரண்டுவது போல் இருக்க திடுக்கிட்டுக் கத்தினான். பிறகு கவிதாவின் அறைக்குள் யாரோ நடமாடும் சத்தம் கேட்டது. இப்படியே விடியும் வரை இவர்கள் யாரையும் நிம்மதியாக இருக்கவிடாமல் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

கவிதாவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே வந்தது. திடீரென்று ஒருநாள் காலையில் கவிதா வலிப்பு வந்தவள் போல் கீழே விழுந்து துடித்தாள்.

அக்கம் பக்கத்தாரின் உதவியுடன் அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்று உயிர்பிழைக்க வைத்தான் சண்முகம்.

இந்தப் பிரச்சினை நீடித்தால் சிவாவின் ஆவி கவிதாவை காவு கொண்டுவிடும் என்று நினைத்து அட்டனில் உள்ள ஒரு பூசாரியை நாடினான்.

பூசாரியும் அவரின் உதவியாளரும் அன்று இரவு கவிதாவின் வீட்டுக்கு வந்து நடுச்சாம பூசை செய்தார்கள்.

அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. பூசாரியின் உதவியாளர் திடீரென்று பேய் பிடித்தவர் போல் எழுந்து ஆட ஆரம்பித்தார்.

உடனே பூசாரி அவரை சாட்டையால் அடித்து உட்கார வைத்து கேள்வி கேட்டார்.

"நீ யார்?"

"நான் சிவா" என்றார்.

நீ எதற்காக இங்க வந்தாய் என்று கேட்க.

"நான் கவிதாவைப் பார்க்க வந்தேன். அவள என்னோட கூட்டிக்கிட்டுத் தான் போவேன். நான் இப்போ இருக்கும் இடம் ரொம்ப இருட்டா இருக்கு. எனக்கு பயமா இருக்கு. வயிறு வலிக்குது" என்று அழுதான்.

பூசாரி "இனி இங்க வரக்கூடாது. இனி இவளை தொந்தரவு செய்யக்கூடாது. பாவம் கவிதா அவள வாழவிடு" என்றார்.

அப்போது அவரின் கண்களில் கண்ணீர் வடிந்தது. "சரி இவங்கள யாரையும் நான் தொந்தரவு செய்யமாட்டேன். இனி கவிதாவுக்கு துணையா இருப்பேன். என்னை இங்கிருந்து யாரும் அனுப்பிவிடாதீங்க" என்றார்.

இவற்றையெல்லாம் கேட்டபோது கவிதாவுக்கு இப்போதே சாகவேண்டும் போல இருந்தது. ஆனால், தற்கொலை செய்துகொள்வது கோழைத்தனம். எங்களைப் பிரித்த என் குடும்பத்திற்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்து இனி கல்யாணமே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

இப்போது கவிதாவுக்கு வயது 54.

தனக்காக உயிர்நீத்த சிவாவை இப்போது அவள் உண்மையாகவே காதலிக்க ஆரம்பித்துவிட்டாள்.

இன்றும் இரவில் அவள் அறையில் சிவாவின் நடமாட்டம் இருக்கிறது. இறந்தும் அவளோடு வாழ்ந்துகொண்டிருக்கிறான் சிவா.

தகவல், தொகுப்பு :- அபி

# உதயசூரியனின் மூன்றாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு

உதய சூரியன்
*source for reading hunters*

ஊவா மாகாண சமூக சேவைகள் அமைச்சு

இணைந்து நடத்தும்

## இலவச மருத்துவ முகாம் மற்றும் அரச நடமாடும் சேவைகள்

காலம் : 25.08.2013

இடம் : கவரகலை, நாவில தமிழ் வித்தியாலயம்

நேரம் : காலை 9.00 மணி

வழங்கப்படவுள்ள சேவைகள் :

1. ஆங்கில மருத்துவ சேவைகள்
2. ஆயுர்வேத மருத்துவ சேவைகள்
3. அங்கவீனமுற்றோருக்கான சக்கர நாற்காலிகள் மற்றும் ஊன்றுகோல்கள்.
4. பற் சிகிச்சைகள்
5. கண் சிகிச்சைகள் மற்றும் மூக்குக்கண்ணாடிகள் வழங்குதல்.
6. செவி தொடர்பான சிகிச்சைகள் மற்றும் செவிப்புலன் கருவிகள் வழங்குதல்.
7. கண் சத்திர சிகிச்சைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
8. முதியோருக்கான வாழ்வாதார கொடுப்பனவுகள் வழங்குதல்.
9. பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல்.
10. திருமணப் பதிவுச் சான்றிதழ் வழங்குதல்.

நாவில தொழிற்சாலை பிரிவு, நாவில மத்திய பிரிவு, நாவில கீழ் பிரிவு கவரகலை N.C.பிரிவு, கவரகலை O.D.பிரிவு, புபுல கிராமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டு பயன்பெற முடியும்.





இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (இல-68, எலிஹவுஸ் றோட், கொழும்பு-15) 22.08.2013 வியாழன் 94, பாமாளந்த மாவத்தை கொழும்பு-13, தினக்குரல் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.